# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 478 | 1997 ஏப்பிரல் 11 | ரூபா 6.00


www.padippakam.com

உள்ளே


■ உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் தோற்றுவித்துள்ள ஆபத்து எண்ணம் ......... 2
■ ஜேர்மன் சுரங்கத் தொழிலாளர் கோல் அரசாங்கத்தை எதிர்த்து ஊர்வலம் ........... 4
■ இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 6-7
■ "இலங்கையினுள் சோசலிச சமத்துவக் கட்சியின் எதிர்காலம் நிச்சயமானது" ....... 12
"இந்த மாற்றம் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தமட்டில் பெரிதும் தீர்க்கமானது" ....... 12
■ எம். எப். ஹுசேனைப் பாதுகாப்போம்! ....... 14


டெங்ஷியோவோ பிங்கும் சீனப்புரட்சியின் தலைவிதியும்

– 8-11 பக்கம்

# பிற்போக்கு அரசியலமைப்பு தீர்மானம் அடியோடு வேண்டாம்!

# அரசியலமைப்பு நிர்ணய சபைக்காகப் போராடு!

உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவடைந்ததுதான் தாமதம் பொதுஜன முன்னணி அரசாங்கம் புதிய அரசியலமைபபு சட்ட வரைவை வெளியிட்டுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கமானது ஜனநாயக வேஷத்துடன் இந்த வரைவினை சமர்ப்பிததுள்ளது. ஜனநாயக வேஷத்துடன் இங்கு சமர்ப்பிக் கப்பட்டுள்ள வரைவைக் கொண்டு பொதுமக்களுக்கு மரணஅடி கொடுக்க பொதுஜன முன்னணி அரசாங்கம் முன்வந்துள்ளதென சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கின்றது.

மார்ச 26ம் திகதி அரசியலமைப்பு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சட்ட வரைவை வெளியிட்டு வைத்து பின்வருமாறு குறிப்பிட்டார்: "வெள்ளிக்கிழமைத் தேர்தல் முடிவுகள், அரசியலமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் அரசின் கரங்களைப் பலப்படுத்தியுள்ளது."

பொதுஜன முன்னணி அரசாங்கம் இந்த வரைவு பிரேரணையின் மூலம் மக்களின் கைக்கு இறைமை அதிகாரம் உரித்தாகும் ஜனநாயக ஆட்சி முறைக்கு மாறிச் செல்வதாகக் காட்டும் பிரமையை அளக்கிறது. இன்றுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கி, பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் முறையிலோ அல்லது வேறொரு கலப்பு முறையிலோ அமைந்த பாராளுமன்றத்துக்குப் பொறுப்புச் சொல்லும் பிரதமர் தலைமையிலான அமைச்சர் அவைக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்குவது பற்றி இப்பிரேரணை அறிவிக்கின்றது. இந்த எந்த ஒரு முதலாளித்துவ அரசியலமைப்பின் கீழும் பொதுமக்களுக்கு கையளிக்கப்பட்ட அதிகாரம் கிடையாது.

இந்த வரைவுப் பிரேரணை பரப்பும் மற்றுமோர் பிரமையும் உள்ளது. பிராந்திய ஒன்றியம் என அதற்குப் பெயர் சூட்டுவதும் அந்த பிராந்திய ஒன்றியங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து அளிப்பதன் மூலம் இலங்கையின் தேசியஇனப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் எனவும் கூறிக்கொள்கின்றது. தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இராணுவ-பொலிஸ் குண்டர் அடக்கு முறையை மேலும் மேலும் உக்கிரமாக்கியபடியே அரசாங்கம் அரசியல் தீர்வை சூழ்ந்த இந்த பொய் கதையளப்புகளை நடாத்திவருகின்றது.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இந்நாட்டு முதலாளிகளின் கைக்கு ஆட்சியை கைமாற்றிய போது திணித்த அரசியல மைப்பில் இருந்து இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களையும் சரி அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களையும் சரி முன்வைத்த சகல முதலாளித்துவ அரசாங்கங்களும் இன்றைய முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கம் கூறிக்கொள்வது போல் மக்களின் கைக்கு இறைமை அதிகாரத்தினை கையளித்துவிடுவதாகவே கூறிக்கொண்டன. எனினும் உண்மை அதுவா?

நிறைவேற்றி அமுல்செய்யப்பட்ட சகல அரசியலமைப்புச் சட்டங்களும் முதலாளித்துவ வர்க்கம் காலாகாலம் கட்டவிழ்த்துவிட்ட அப்பட்டமான பொய்கள் என்பதை கடந்த 50 ஆண்டுக்கால வரலாற்றில் மக்கள் சந்தித்த இரத்தம் தோய்ந்த வரலாறுகள் நிரூபித்துக் கொண்டுள்ளன. கடந்த 50 வருட காலத்தினுள் திணிக்கப்பட்ட மூன்று அரசியலமைப்பு சட்டங்களும் இப்போது முன்வைக்கப்படும் நான்காவது அரசியலமைப்பு சட்டத்தின் வரைவும் இலங்கை முதலாளி வர்க்க வங்குரோத்தினை மட்டுமல்லாது வர்க்க ஆட்சியை காக்க ஆளும் வர்க்கம் மூடிமறைக்க தலைகீழாக நிற்கும் பிற்போக்கையுமே காட்டுகின்றன.

1947ல் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் அறியாத விதத்தில் இலங்கை முதலாளித்துவ வர்க்கத்துடன் சதிசெய்து, இனவேறுபாடுகளுக்குத் தூண்டுகோலாக அமையும் ஒற்றையாட்சி அரசை திணித்தனர். 1949ல் தோட்டத் தொழிலாளரது குடியுரிமை ஒழிக்கப்பட்டதும் இந்த வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான "ஜனநாயக அரசியலமைப்புச்" சட்டத்தின் கீழேயேயாகும். இது தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்தத் தொடுத்த படுமோசமான தொழிலாளர் விரோத இனவாதத் தாக்குதலாகும்.

## இன, மத அரசியலமைப்பு

1972ல் முதலாளித்துவ கூட்டரசாங்கம் சமசமமாஜ தலைமைகளை முன்னணியில் கொண்டு இனவாத, மதவாத அரசியலமைப்புச் சட்டத்தினை வரைந்துகொண்டது. 1964ல் இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பினை முன்னெடுத்த சமசமாஜத் தலைவர்கள் முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து இலங்கையின் அரசினை சிங்கள-பௌத்த அரசாகப் பிரகடனம் செய்து கொண்டமையானது சிங்கள இனவாதத்துக்கும் தமிழ் தேசியவாதத்துக்கும் இடமளித்ததோடு, இனவாத யுத்தத்தை தூண்டிவிடும் துப்பாக்கி வேட்டாகவும் அமைந்தது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜனநாயகத்தை சிருஷ்டித்தல் என்ற கதையளப்புக்களுடன் மூடிமறைப்பது இதே சங்கிலியின் மற்றொரு தொடுவையான புதிய அரசியலமைப்பு சீர்திருத்தச் சட்டத்தின் பிற்போக்கு இலக்கையேயாகும்.


1947 சோல்பரி அரசியலமைப்புச் சட்டமும் 1948ன் "சுதந்திரமும்" அவ்வாறே 1972ன் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் அரசியலமைப்பு சீர்திருத்தமும் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான சதியாகும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (தற்போது சோசலிச சமத்துவக் கட்சி) சுட்டிக்காட்டியது. 1978 ஜயவர்தன அரசாங்கத்தின், அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தத்தின் பிற்போக்கு தன்மையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின்வருமாறு விளக்கியது: "சர்வாதிகார ஆட்சி அமைப்பினை "சட்டரீதியாக" நிலைநாட்டும் பொருட்டு யூ.என்.பி. அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. 22ம் திகதி வியாழக்கிழமை மாலை தேசிய அரச பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டநிறைவேற்றுக் குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள காரணிகளின் இந்த சர்வாதிகாரத்தின் வெளித்தோற்றத்தை புரிந்து கொள்ள முடியும்...

"சர்வதேச நாணய நிதியத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்ட பயன்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டங்கள் அனைத்துக்கும் மேலாக "பாராளுமன்றப் பாதையூடாக சோசலிசத்துக்குச் செல்லும்" பிரமையை வளர்த்த ஸ்டாலினிச, சமசமாஜ தலைமைகள் நடாத்தியதும் நடாத்தி வருகின்றதுமான அரசியலுக்கு எதிரான ஒரு பலத்த குற்றச்சாட்டாகும்.

"அரசு பற்றிய லெனினிச

13ம் பக்கம் பார்க்க

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!



சோசலிச சமத்துவக் கட்சியின் மே தினம்

**ஊர்வலம்:**

மே 1ம் திகதி மாலை 1 மணி

கொழும்பு கொச்சிக்கடை நியூஹாம் சதுக்கத்தில் ஆரம்பமாகிறது

(அந்தோனியார் தேவாலயத்துக்கு அருகில்)

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் தோற்றுவித்துள்ள ஆபத்து

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பரும்பான்மை நிறுவனங்களின் அதிகாரம் மது கைக்குக் கிடைத்தது பற்றி பொதுஜன முன்னணி அரசாங்கம் வாயடித்துக் கொள்கின்றது. இந்த வாய்வீச்சுக்களின் பின்னணியில் உழைக்கும் மக்களின் எதிரில் பெரும் ஆபத்துத் தலைதூக்கி உள்ளது. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் செய்ய வேண்டியது என்ன? எதிரில் வந்து கொண்டுள்ள தீர்க்கமான அரசியல் சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு அவசியமான முன்னனோக்கினாலும் வேலைத் திட்டத்தினாலும் ஆயுதபாணியாகத் தயாராக வேண்டும்.

238 உள்ளூராட்சி சபைகளில் 194ன் அதிகாரத்தை பொதுஜன முன்னணி சுருட்டிக் கொண்டுள்ளது. ஆனால் இதற்குக் கிடைத்துள்ள வாக்குக்களின் எண்ணிக்கை 1994 ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன முன்னணிக்கு கிடைத்த வாக்குக்களைக் காட்டிலும் நூற்றுக்கு 14வீதம் குறைவான தாகும். யூ.என்.பி.இத்தடவை அதிகாரத்தை 43 உள்ளூராட்சிச் சபைகளில் மட்டுமே கைப்பற்றிக் கொள்ள முடிந்துள்ளது. யூ.என்.பிக்கு கடந்த பொதுத்தேர்தலில் கிடைத்த வாக்குக்களைக் காட்டிலும் நூற்றுக்கு 3 வீதத்தினால் வாக்குக்கள் குறைந்துள்ளது. வாக்களித்தவர்களுள் நூற்றுக்கு 7 சதவீதமானோர் தமது வாக்குக்கள் செல்லுபடியாகாமல் போகும் வண்ணம் இரத்துச் செய்துள்ளனர். இதைக் கணக்கில் எடுக்கும்போது வாக்களித்த வர்களுள்ளும் முன்னைய தேர்தலைக் காட்டிலும் நூற்றுக்கு 12வீதத்தினர் குறைவாகவே வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதியும் அவரின் அரசியலமைப்பு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் போன்ற பொதுஜன முன்னணி தலைவர்களும் தமக்கு பிரமாண்டமான வெற்றி கிடைத்துள்ளதாக வாயடித்துக் கொள்ளும் அதே வேளையில் யூ.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரமாண்டமான தேர்தல் ஊழல்களினால் தாம் தோல்வி கண்டதாக ஒப்புக் கொள்ளத் தள்ளப்பட்டார். இந்த இரு முதலாளித்துவக் கட்சிகளதும் வார்த்தை ஜாலங்கள் பொதுமக்களின் கண்களில் மண்ணைத் தூவி, அவர்கள் முகம் கொடுக்கும் பாரதூரமான ஆபத்துக்களை மூடி மறைக்கும் திட்டமாக உள்ளது.

இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இவ்விரு கட்சிகளும் அவற்றின் எடுபிடி முதலாளித்துவ பொதுஜனத் தொடர்புச் சாதனங்களும் ஒன்று சேர்ந்து பொதுமக்களின் மக்களின் கண்களில் மண்ணை அள்ளிச்சொரிந்து வந்த ஒரு நிலைமையின் கீழ் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பொதுஜன முன்னணி, யூ.என்.பி.என்ற இரண்டு முதலாளித்துவ கோஷ்டிகளுக்கும் இடையே ஏதோ பெரும் முரண்பாடு இருந்து கொண்டுள்ளதாகக் காட்டுவது இந்த வாய்வீச்சு இயக்கத்தின் நோக்கமாகியது.

முன்னர் ஒரு போதும் இல்லாத வன்முறை பற்றி பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் ஆளையாள் குற்றம் சாட்டிக் கொண்டார்கள். இவர்களின் காடையர் கும்பல்கள் பயங்கர ஆயுதங்களும் கையுமாக வீதிகளில் இறங்கி, கொலைகளுக்கு ஆயத்தமாகிக்கொண்டு வந்த நிலையிலேயே இதைச் செய்தனர். நாளந்த எல்லாவெல படுகொலை உட்பட்ட கொலைகளும் பயங்கர நடவடிக்கைகளும் பொதுஜன முன்னணிக்கும் யூ.என்.பி.க்கும் இடையே ஏதோ பெரும் வேறுபாடுகள் இருப்பதாகக் காட்டும் குண்டினை வெடிக்க வைக்கவே நடாத்தப்பட்டது. இவ்விரு முதலாளித்துவக் கட்சிகளும் ஊழியர்களும் வேலைநிலைமைகளை விற்றுத் தள்ளுவதன் மூலம் கிடைக்கும் கொள்ளையைத் தம்மிடையே கூறுபோடுவது சம்பந்தமாகவே. இது பின்தங்கிய நாடுகளின் முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளின் மாபியாக்காரர்களாக நாற்றம் கண்டுள்ளதைக் காட்டுகின்றது.

உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மையானவற்றின் அதிகாரம் பொதுஜன முன்னணியிடம் சென்றுள்ள ஒரு நிலைமையினுள் ஒரு அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்வருமாறு கூறினார்: "பொதுமக்கள் முழுமையாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் வைத்துள்ள விருப்பையும் நம்பிக்கையையும் பலம் வாய்ந்த முறையில் மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளனர்."



பென்மூர் தோட்டத்தில் சோசலிச சமத்துவக் கட்சி நடாத்திய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்கு வருகைதந்த தொழிலாளர்

ஜனாதிபதிக்கு வாழ்த்துச் செய்தி வரைந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அதற்கும் மேலாகக் கூறியுள்ளார்: "தங்களது வாக்குக்களின் மூலம் வாக்காளர்கள் பொதுஜன முன்னணி ஆட்சியின் முக்கிய கொள்கை அங்கீகாரத்தை வெளிப்படுத்தி உள்ளனர்." இந்த அறிக்கை தந்திரமானது உள்நோக்கம் கொண்டது.

கடந்த இரண்டரை வருடகால பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வேலைத்திட்டம் என்ன? வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் அவர்களது ஏஜன்டுகளுக்கும் சுரண்டலுக்கான மேலும் மேலும் வாய்ப்பான நிலைமைகளை உருவாக்கிக் கொடுப்பதாகும். தனியார்மயத்தின் மூலம் தொழிலாளர்களை தொழில்களில் இருந்து கலைத்தல். எஞ்சிய தொழிலாளர்களை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கொடிய சேவை நிலைமைகளுக்குக் கீழ்ப்படுத்தல். இலவசக் கல்வி, சுகாதார சேவை, உதவி மானிய வெட்டுக்கள், விலைவாசி அதிகரிப்புக்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல் இதன்மூலம் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை 2001க்கும் மேலாகக் கூட்டி பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை தொடர்ந்தும் முன்னெடுப்பதாகும். எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களைக் காட்டுமிராண்டி நிலைமைகளுக்குள் தள்ள யுத்தத்தை உக்கிரமாக்குவதும், அதைப் பயன்படுத்தி தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்து எழும் மக்களை-தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், மாணவர்களை நசுக்குவதுமாகும்.

## தாக்குதல் உக்கிரம்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இத்தாக்குதல்களுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வந்த ஒரு நிலையில் இரண்டு தடவைகள் ஒத்திப்போடப்பட்டதும் தொடர்ந்தும் அதை ஒத்திப்போடமுடியாத ஒரு நிலைமையில் அது நடாத்தப்பட்டதும் தெரிந்ததே. பொதுமக்கள் இத்தேர்தலில் பொதுஜன முன்னணி மீதான நம்பிக்கையை காட்டவில்லை. தொழிலாளர் வர்க்கப் பதிலீடு இல்லாது குழப்பநிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களிடையே யூ.என்.பி.சம்பந்தமாகப் பரந்துபட்டுள்ள எதிர்ப்பையும் பொய்ப் பிரச்சாரங்களையும்

சம்பந்தமாக அணுவளவு நம்பிக்கை வைத்திருப்பினும் அது பொதுமக்களுக்கு உயிராபத்தானது. பொதுமக்கள் தமது வேலைத்திட்டங்களையிட்டு நம்பிக்கை வைத்துக் கொண்டுள்ளனர் என ஜனாதிபதியும் அமைச்சர்களும் கூறிக்கொள்ளும் போது அதற்கு ஒரேயொரு அர்த்தமே உள்ளது: கடந்த காலத்தில் தாம் தொடுத்த பொதுஜன பேரழிவு காட்டுமிராண்டித் தாக்குதல்களை மோசமான மட்டத்துக்கு கொணர அரசாங்கம் எதிர்காலத்தில் செயற்படும்.

பொதுஜன முன்னணி என்றால் என்ன யூ.என்.பி.உட்பட்ட வேறு முதலாளித்துவக் கட்சிகள் என்றால் என்ன அவற்றுக்கு இதில் இருந்து வேறுபட்ட வேலைத்திட்டம் கிடையாது. இக்கட்சிகளின் விதிமுறைகள் அனைத்துலக முதலாளித்துவப் பொருளாளாதார, அரசியல் நிலைமைகளினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனைத்துலக ரீதியில் செயற்படும் மூலதனம், நவீன தொழில்நுட்பத்தை பாவித்துக் கூடிய இலாபத்தை கசக்கிப்பிழிந்து கொள்ளக் கூடிய நாடுகளுக்குள் ஊடுருவிக் கொள்கின்றது. அரச நிறுவனங்களையும் தேசிய வளங்களையும் அள்ளுகொள்ளை இலாபத்துக்கு வழங்கி, அதிக இலாபத்தை கசக்கிப் பிழிந்து கொள்ளக் கூடிய நிலைமைகளை நிர்மாணிக்கும்படி ஆளும் வர்க்கத்தின் ஏஜந்து அரசியல் கட்சிகளுக்கு கட்டளையிடுகின்றது. ஏகாதிபத்திய நாடுகளில் தொழிலாளர்களின் சம்பளம் நலன்புரி சேவைகளை வெட்டி, அவர்களின் வாழ்க்கை நிலைமைகளை பின்தங்கிய நாடுகளின் தொழிலாளர் மட்டம் வரைக்கும் பள்ளம் பறிப்பதில் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் ஈடுபட்டுள்ளன. பின்தங்கிய நாடுகளில் முதலாளிகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேலும் மேலும் வெட்டித்தள்ளி, மூலதனத்தை இழுக்கும் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். இலாபத்துக்கான உற்பத்தியை நடாத்தும் ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் பூகோள ரீதியான போட்டி சகல நாடுகளிலும் பொதுமக்களுக்கு மிலேச்சமான நிமைமைகளைச் சிருஷ்டித்துக் கொண்டே இடம்பெறுகின்றது. ஒரு புறத்தில் செல்வம் மலையெனக் குவிகின்றது. மறுபுறத்தில் வறுமை மலையென வளர்கின்றது.

இந்நிலைமையினுள் சீனாவுக்கும் வியட்னாமுக்கும் பங்களாதேசிற்கும்

முதலாளிகளும் கடந்த இரண்டு ஆண்டுகால பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு தமது கவலையைத் தெரிவித்தனர். இலாபவெறி கொண்ட வர்த்தகர்கள் குவிந்து போயுள்ள நகரமான கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் பொதுஜன முன்னணி தோல்வி கண்டமை அரசாங்கம் மீது வர்த்தகர்கள் இடையே வளர்ச்சி கண்டுவரும் வெறுப்பை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. இது அரசாங்கம் பொதுமக்கள் மீது மேலும் மேலும் வெறிகொண்டு பாய்ந்து விழுவதற்கெனப் பிற்போக்காளர்கள் திட்டமிட்டுச் செய்த ஒரு நெருக்குவாரமாகும்.

யூ.என்.பி.யைப் போலவே பொதுஜன முன்னணி அரசாங்கமும் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை தென்மாகாணங்களிலான ஒடுக்குமுறைக்கான அத்திவாரக் கல்லாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு இன்னும் ஒரே ஒரு நாள் மட்டும் இருக்கையில்- மார்ச் 20- வவுணதீவு இராணுவ முகாம் கப்டனுக்கு பதக்கம் சூட்டி ஜனாதிபதிஆற்றிய உரையில் "இலங்கையில் இருப்பது தேசிய இன மோதுதல் அல்ல ; இராணுவப் போராட்டமாகும்" என்றுள்ளார். ஜயவர்தன, பிரேமதாச, விஜேதுங்க ஆகிய ஜனாதிபதிகள் கூறியதும் இது இல்லையா? "இந்த வருடத்தில் யுத்தத்தை வெற்றி கொள்வதாகவும்" உள்ளூராட்சி சபை தேர்தல் பிரச்சாரத்தில் ஜனாதிபதி வாயடித்துக் கொண்டார். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதாகக் கூறிக்கொண்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் போட்டுக் கொண்டுள்ள வேஷங்களை களைந்து எறியும் இந்த அறிக்கைகளின் அர்த்தம் என்ன? தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கும் அதேவேளையில் தென்மாகாணங்களின் மக்களை அதற்குள் சிறைப்படுத்தி, அவர்களின் உரிமைகளை துடைத்து எறியும் வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதாக இது இல்லையா?

"2001 ஆண்டில் காலடி வைக்கும்" பேரால் முதலாளி வர்க்கத்தின் சார்பில் பொதுஜன முன்னணி அரசாங்கம் உண்மையில் நடாத்தப் போவது இரு தாக்குதல் அல்லவா? இராணுவ-பொலிஸ் ஆட்சியின் கீழ் பொதுமக்களை நசுக்கித்

www.padippakam.com

# செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்!




செ. இராஜ்குமார்

## செல்லையா இராஜ்குமார் கைதாகி 280 நாட்கள்

சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவரான செல்லையா இராஜ்குமார் கைது செய்யப்பட்டு 1997 ஏப்பிரல் 10ம் திகதியுடன் 280 நாட்கள் பூர்த்தியாகின்றன. அவரின் கட்சியின் தோழர்கள் அவரை புனர்வாழ்வு முகாமில் சந்திப்பது தடைசெய்யப்பட்டு 123 நாட்கள் ஆகின்றன.

அவரைத் தடுத்து வைத்திருப்பதற்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை சட்டமா அதிபரின் வேண்டுகோளின் பேரில் மூன்றாவது தடவையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்டபோதிலும் அரசு தனது வாதத்தை முன்வைக்கத் தவறியுள்ளது. என்ன குற்றச்சாட்டின் பேரில் இராஜ்குமார் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதை அரச சட்டத்தரணி இன்னமும் முன்வைக்கவில்லை.

1996 ஜூன் 14ம் திகதி பொலன்னறுவை -அரகங்கவிலவில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இராஜ்குமார் காட்டுமிராண்டித் தனமான முறையில் தாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டதோடு 1996 டிசம்பரில் இருந்து பண்டாரவளை பிந்துனுவவை புனருத்தாரண முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மலையுச்சியில் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாம் உண்மையில் ஒரு வன்முறை உழைப்பு கொள்ளை நிலையமா அல்லது மூழை சுத்திகரிப்பு நிலையமா என்ற ஐயத்தை எழுப்பியுள்ளது. அரலகங்கவில பொலிசில் இராஜ்குமார் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது அவரைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவருக்கு அது இந்த புனருத்தாரண முகாமில் மறுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இந்தக் கட்டத்தில் செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்யும் போராட்டம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்துக்கு மிகவும் தீர்க்கமாகியுள்ளது.



பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையால் பாரம்பரிய வதிவிடங்களில் இருந்து வெளியேறும் தமிழ் மக்கள்

## யுத்த அகதிகள் "புனர்வாழ்வின்" இலட்சணம்

இனவாத யுத்தம் தொடரும் நிலையிலும் புதிது புதிதாக இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று மக்கட் குடியிருப்புக்கள் மீதான குண்டுவீச்சுக்கள் தொடரும் நிலையிலும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையிலும் இம்மக்களுக்கு அரசாங்கம் வழங்கி வந்த அற்ப சொற்ப உலர் உணவுப் பொருட்களும் கடந்த பெப்ரவரி 18ம் திகதியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது. யுத்த நிலைமையினுள் இம்மக்களுக்கு அரசாங்கம் வழங்கி வந்த உலர்உணவுப் பொருட்களின் பெறுமதி இதுதான்:

| குடும்ப அங்கத்தவர் | கிழமைக்கு கிடைக்கும் உலர்உணவுபெறுமதி |
|---|---|
| 1 | ரூ.84 |
| 2 | ரூ.152 |
| 3 | ரூ.210 |
| 4 | ரூ.252 |
| 5க்கு மேல் | ரூ.315 |

உணவுப் பொருட்களை காவிச் செல்லுதல் ஆதியன கூறப்படுகின்றன. இதனால் மக்கள் பட்டினியின் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

1990ல் இந்த உலர் உணவுப் பொருட்கள் கீழ்க்காணும் விலைகளுக்கு வழங்கப்பட்டன:

| | | |
|---|---|---|
| வெள்ளை அரிசி | கிலோ.1. | 11.25 |
| மாவு | கிலோ.1. | 7.00 |
| சீனி | கிலோ.1. | 25.00 |
| மைசூர் பருப்பு | கிலோ.1. | 55.00 |
| 400கிராம் பால்மா | | 32.00 |
| சன்லைட் சோப் | கட்டி.1. | 7.00 |
| கடலை | கிலோ.1. | 70.00 |
| உழுந்து | கிலோ.1. | 60.00 |
| தேயிலை | கிலோ.1. | 160.00 |
| தீப்பெட்டி -1. | | 1.00 |

இந்த விலைகளுக்கு இணங்க அந்தந்த குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்ட உதவிநிதிக்கு உரிய பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆனால் பொருட்களின் விலைவாசிகள்

| | | |
|---|---|---|
| மாவு | கிலோ 1. | ரூபா.18.50 |
| சீனி | கிலோ.1. | ரூபா.35.00 |
| மைசூர் பருப்பு | கிலோ.1. | ரூபா.38.00 |

இந்தப் பொருட்கள் ஒழுங்கு முறையாகக் கிடைக்காமல் கிழமைகள் பல கடந்து அவை ஒன்றாகக் கிடைக்கும் போது அவற்றை பாதுகாத்து வைக்கும் பிரச்சினைக்கும் மக்கள் முகம் கொடுக்கின்றார்கள். அத்தோடு இந்த உலர் உணவுப் பொருட்கள் நான்கு பொருட்களுக்கு வரையறுக்கப்படுகின்றது. இதனால் மக்கள் தமக்குக் கிடைத்த பொருட்களில் ஒரு பகுதியை கறுப்புச் சந்தைக்காரருக்கு குறைந்த விலைக்கு விற்றுத் தள்ளும் அவலமும் ஏற்படுகின்றது. விற்ற பணத்தைக் கொண்டு மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய நேரிடுகின்றது. கறுப்புச் சந்தைக்காரர்கள் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி இலாபத்தை சூறையாடிக் கொள்கிறார்கள். பொருள் உதவிவிலை கறுப்புசந்தை

### ஆசிரியருக்குக் கடிதம்:

### என்பீல்ட் தோட்ட தொழிலாளர் கஷ்டங்கள்

இங்கு மூன்று நாள் தொடர்ந்து வேலைக்கு போகாமல் இருந்துவிட்டு நான்காம் நாள் வேலைக்கு போனால் அன்று வேலை இல்லை என்று கூறிவிடுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமை வேலைகொடுக்கும் மாதங்களில் வியாழன், வெள்ளி, சனி வேலைக்கு போகாது இருந்து போனால் ஞாயிறு வேலை இல்லை என்று கூறி திருப்பி அனுப்பிவிடுகின்றார்கள். அப்படித்தான் ஞாயிறு வேலை கொடுக்கும் நாட்களில் கண்டிப்பாக 23 கிலோ கொழுந்து கேட்கிறார்கள். 23 கிலோ கொழுந்து எடுக்க முடியாத தொழிலாளர்கள் கஷ்டத்தின் காரணமாக தனது பிள்ளையையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு போய் அதைப் பறித்துக் கொடுத்தே வர வேண்டியுள்ளது. என்பீல்ட் குரூப்பைச் சேர்ந்த சென்லீஸ் டிவிசன் தொழிலாளர்களுக்கும் இதே நிலைதான். சென்லீஸ் டிவிசனில் உள்ள தேயிலை பழைய கால தேயிலை. உரம் சரியாகப் போடுவதில்லை. ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் 12 மணி நிறுவைக்கு 7 கிலோ போட்டவர்களைக் கூட விரட்டி விடுகின்றனர். மற்றொரு விடயம், முத்திரை காசு என்று 3.50 பிடித்து விடுகிறார்கள். ஆனால் முத்திரையில் கையொப்பமிட்டு சம்பளம் எடுப்பதில்லை. இவற்றையெல்லாம் தோட்டத் தலைவர்கள் கேட்க மறுக்கிறார்கள். இவர்கள் தொழிலாளர்கள் கொழுந்தில் ஒரு கிலோ குறைந்தாலும் அதையிட்டு அக்கறை

படிப்பகம்

www.padippakam.com



# ஜேர்மன் சுரங்கத் தொழிலாளர் கோல் அரசாங்கத்தை எதிர்த்து ஊர்வலம்

பல்லாயிரக் கணக்கான ஜேர்மன் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் உதவிமானிய வெட்டுக்களையும் சுரங்கக் கைத்தொழிலில் பிரமாண்டமான வேலை நீக்கத் திட்டங்களையும் எதிர்த்து ஆத்திரத்தில் தலைநகர் பொன்னின் வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டதோடு. பொலிஸ் காவல் தடை அரண்களையும் தாக்கிப் பிடித்துக் கொண்டனர்.

சான்சலர் ஹெல்மட் கோலின் அரசாங்கத்தின் 2.2 பில்லியன் டாலர்கள் உதவி மானியம் வெட்டும் திட்டம் வெளிவந்ததும் 86000 சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து. சுரங்கங்களினுள் உள்ளமர்ந்து கொண்டனர். இத்திட்டத்தின் பெறுபேறாக ஜேர்மனியின் 19 பெரும் நிலக்கரிச் சுரங்கங்களில் 7 சுரங்கங்கள் இழுத்து மூடப்படுவதோடு 60000 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவர். அத்தோடு சுரங்க விநியோகம், இயந்திரக் கைத்தொழில் துறைகளில் மற்றுமோர் 80000 தொழிலாளர்கள் வேலையிழப்பர்.

பொன் நகருக்கு ஊர்வலத்தில் செல்வதற்கு முன்னதாக நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் நகர மண்டபங்கள், சுரங்கங்கள், ரூர் நிரக்கரிச் சுரங்க வடிநிலங்களின் இரு கரையிலும் உள்ள பெருந்தெருக்கள். பிரான்சிய எல்லையில் உள்ள மற்றுமோர் சுரங்கப் பிரதேசமான சார்லன்ட் மாநிலத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டனர்.

மார்ச் 10ம் திகதி திட்டமிட்ட இந்த வெட்டுக்கு எதிராக ஆட்சேபம் தெரிவிக்கும் பொருட்டு ரூர் பகுதியில் இருந்து 10000 சுரங்கத் தொழிலாளர்களும் சார்லான்ட் பகுதியில் இருந்து 7000 தொழிலாளர்களும் தலைநகர் வந்து சேர்ந்தனர். அவர்கள் கோலின் கூட்டரசாங்கத்தின் ஒரு பங்காளரான சுதந்திர ஜனநாயகக் கட்சியின் (FDP) பொன் தலைமையக வாசல் கதவுகளை சங்கிலியிட்டுப் பிணைத்தனர். ஒரு திட்டமிட்ட கூட்டத்தை நடாத்த தலைவர்களை நெருக்கவே அவர்கள் அவ்வாறு செய்தனர். சிக்கன நடவடிக்கைகளை அமுல் செய்வதில் கோலின் ஆளும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி கண்டிப்பாக நடந்து கொள்ளாமைக்காக எப்.டீ.பி.அதனை விமர்சனம் செய்தது. அத்தோடு சீ.டி.யூ. தலைமையகத்துக்கு முன்பாகவும் ஆத்திரத்தோடு ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

சுரங்கத் தொழிற்சங்கத் தலைவர் ஹன்ஸ் பேர்ஹர் உட்பட பல பரந்த கூட்டங்களில் உரைநிகழ்த்த தொழிலாளர் அதிகாரிகள் எடுத்த முயற்சிகள் "கோலின் நண்பன், துரோகி" போன்ற கூச்சல்களினால் சரிப்பட்டு வரவில்லை.

சுரங்கத் தொழிலாளர்களின் வீதித்தடைகளால் மார்ச் 11ம் திகதி ஒரு அமைச்சரவைக் கூட்டத்துக்கு கோலின் அமைச்சர்கள் எடுத்த முயற்சிகள் சரிப்பட்டுவரவில்லை. இதனால் ஜேர்மன் அதிபர் அன்று சுரங்கத் தொழிற்சங்கத் தலைவர்களுடன் நடாத்த இருந்த அதிகாரபூர்வமான பேச்சுவார்த்தைகளை இரத்துச் செய்தார். "வீதி நெருக்கு வாரங்களின் கீழ் பேரம்பேச" தாம் மறுப்பதாக அவர் பிரகடனம் செய்தார்.

"இன்று சுரங்கத் தொழிலாளர்கள், நாளை கட்டிடத் தொழிலாளர்கள் இருப்பார்கள். மறுநாள் விவசாயிகள். நான் அதை ஏற்க முடியாது" என கோல் கூறினார்.

கோல் பேச்சுவார்த்தைளை இரத்துச் செய்து விட்ட செய்தியைக் கேள்விப்பட்ட ஆர்ப்பாட்டக்கார சுரங்கத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் பொலிஸ் காவல் படை தடை அரண்களை ஆக்கிரமித்துக் கொண்டு ஆர்ப்பாட்டங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ள அரசாங்க கட்டிடங்கள் உள்ள பிராந்தியத்தினுள் நுழைந்தனர். அவர்கள் கோலின் இருப்பிடத்துக்கும் பாராளுமன்றக் கட்டிடத்துக்கும் "நாம் வருகின்றோம்- கோல் கட்டாயம் வெளியேற வேண்டும்- நாங்களே மக்கள்" எனக் கோஷித்தனர். இந்தப் பின்னைய சுலோகம் 1989ல் கிழக்கு ஜேர்மனி மாஜி ஸ்டாலினிச ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களில் முதலிடம் பிடித்துக் கொண்டிருந்தது.

சுரங்கத் தொழிலாளர்கள் நெருக்கிக் கொண்டுள்ளதைக் கேள்விப்பட்ட டசின் கணக்கான சமூக ஜனநாயக கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமது அலுவலகங்களுக்கு விழுந்தடித்து ஓடிச்சென்று தொழிலாளர்களைத் திரும்பிச் செல்லும்படி கெஞ்சி மன்றாடினார்கள். சுரங்கத் தொழிற் சங்க அதிகாரியான பெர்கரும் ஸ்தலத்துக்குத் திரும்பிச் செல்லும்படி செய்ய முயன்று பார்த்தார். ஆனால் அவர்களோ அவரைப் பேச இடம் கொடுக்க இல்லை.

கிறீன் கட்சி தலைவர்களில் ஒருவரான பிஷ்சரும் சம்பவ இடத்துக்குச் சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர்களுடன் வந்து சேர்ந்தார். அவர் சுரங்கத் தொழிலாளர்களை "ஊர்வலம் செல்லும் உரிமையை இழக்க வேண்டாம்" என்றும் கோலை பதவியில் இருந்து வாக்களித்து வெளியேற்றும் அடுத்த 1998 பொதுத் தேர்தல் வரை காத்திருக்கும்படியும் மன்றாடினார்.



கோல் அரசாப்கத்தின் உதவி மானியம் வெட்டை எதிர்த்து பொன் நகரில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கிய ஜேர்மன் சுரங்கத் தொழிலாளர்

இந்த அரசியல்வாதிகளதும் அதிகாரிகளதும் கெஞ்சல்களையும் மன்றாட்டங்களையும் புறக்கணித்த தொழிலாளர்கள். அன்றிரவு கூடாரங்களில் உறங்கிக் கொண்டு பொன்னில் தங்கிவிடத் தீர்மானித்தனர்.

மார்ச் 12 புதன்கிழமை சுரங்கத் தொழிலாளர்களுடன் நீண்டநேர பேச்சுவார்த்தையின் பின்னர் தொழிற்சங்க அதிகாரிகளும் எஸ்.பீ.டி.பிரதிநிதிகளும் ஒரு "விழா ஒத்துழைப்பு"க்காக இந்த நகரைவிட்டு விலகத் தொழிலாளர்களை இணங்க வைத்தனர். இது கொலோன் நகருக்கு சமீபமாக உள்ள உதைபந்தாட்ட திடலில் ஜேர்மனியின் பெரும் தொழிற்சங்கமான ஐ.ஜீ.மெட்டலினால் ஆலோசனையற்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றாகும்.

மறுநாள் கோல் அரசாங்கமும் சுரங்கத் தொழிற்சங்கத் தலைவர்களும் ஒரு "சமரசத்தை" அறிவித்தனர். இது கோல் திட்டத்துக்கும் சுரங்கத் தொழிற்சங்கத் தலைவர் பேர்ஜலினால் முன்வைக்கப்பட்ட திட்டத்துக்கும் இடைப்பட்டதாகும். இதன்படி இதே சுரங்க மூடுவிழாக்களும் வேலைநீக்கங்களும் அப்படியே இடம்பெறும். ஆனால் ஒரு சிறிய நீண்ட கால அட்டவணைக்கு இணங்க இது இடம்பெறும். இந்தத் தீர்ப்பை அங்கத்தவர்கள் மீது திணிக்க தொழிற்சங்க அதிகாரத்துவங்களால் முடியுமா என்பது இன்னமும் தெளிவாக இல்லை.

ஐரோப்பிய பொருளாதார கூட்டின் மீது மாட்றிச் உடன்படிக்கையினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை சந்திக்கும் விதத்திலான கோல் அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைக்கும் வரலாறு காணாத வேலையின்மைக்கும் எதிரான ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பொது இயக்கத்தின் பாகமாகப் பொன்னில் சுரங்கத் தொழிலாளர்களுடனான மோதல் காட்டிக் கொள்கின்றது.

பேர்ளினில் மார்ச் 7ல் இருந்து ஆயிரக்கணக்கான கட்டிடத் தொழிலாளர்கள் வேலையின்மைக்கும் குறைந்த ஊதியத் தொழிலுக்கும் எதிராகத் தினமும் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டுள்ளனர். அத்தோடு 4000 சிவிலியன் தொழிலாளர்கள் ஜேர்மனியில் உள்ள அமெரிக்க, பிரித்தானிய இராணுவத் தளங்களில் அதிகரித்த ஆட்குறைப்புக் கொடுப்பனவும், மற்றும் நலன்களும் கோரி வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இங்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் தமது இராணுவத் தளங்களைத் தொடர்ந்து முடக்கிக் கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

# ஹொங்கொங் நிர்வாகம் கோடீஸ்வரர் பொறுப்பில்

ஹொங்கொங் ஒரு பிரித்தானியக் காலனி என்ற நிலையில் இருந்து சீன ஸ்டாலினிஸ்டுகளால் எதிர்வரும் ஜூலை 1ம் திகதி பொறுப்பேற்கப்பட்டதும் அமைக்கப்படவுள்ள ஹொங்கொங் அரசாங்கத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக கோடீஸ்வரரும் கப்பல்துறை முதலாளியுமான டூங் சீ ஹுவா நியமிக்கப்பட உள்ளார்.

தென் சீனாவில் உள்ள சென் ஷான் சிறப்பு பொருளாதார வலயத்தில் (SEZ) இது தொடர்பாக இடம்பெற்ற ஒரு வைபவத்தில் ஆசியாவின் இருபெரும் பணக்காரர்களான லீ கா ஷிங்கும் லீ ஷான் சீயும்( ஹொங்கொங் சொத்துடமை கோடீஸ்வரர்கள்) கலந்து கொண்டனர். இந்த இருவர்களதும் சொத்துக்களின் பலர் சொந்தத்தில் பரந்த வர்த்தக நலன்களைக் கொண்டுள்ளனர்- இரண்டு தசாப்தங்களாக ஹொங்கொங்கின் பெரும் செல்வந்தர் குடும்பங்களுடன் ஹொங்கொங்கிலும் அயலில் உள்ள தென்சீன பிராந்தியங்களிலும் தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதில் சேர்ந்து வந்துள்ளனர்.

ஒரு ஆய்வின்படி சீன ஸ்டாலினிஸ்டுகள் 1990களின் ஆரம்பத்தில் ஹொங்கொங்கில் 10 பில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளனர். சீன உள்நாட்டு அதிகாரிகளும் நிறுவனங்களும் வெளிநாட்டுச் செலாவணியையும் வர்த்தகக் கட்டுப்பாடுகளையும் தவிர்க்கும் பொருட்டு முதலீடுகளை ஒழித்து மறைப்பதுண்டு . இந்த விதத்தில் இதைக் காட்டிலும் பெருந்தொகையான பீகிங்கினால் அங்கீகரிக்கப்பட்ட 120 மில்லியன் டாலர்களை உள்ளடக்கி இருந்தது.

1984ல் தட்சர் அரசாங்கத்துடன் கைச்சாத்தான சீன-பிரித்தானிய கூட்டுப் பிரகடனத்தின் கீழ் ஹொங்கொங் கையளிக்கப்பட்டதன் பின்னர் குறைந்தது 50ஆண்டுகளுக்கு அங்கு முதலாளித்துவத்தை பாதுகாக்க உத்தரவாதம் அளித்துள்ளது.

டூங் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டதில் இருந்து அவர் ஹொங்கொங்கில் பிரித்தானிய ஆதரவு சட்டசபையை(கடந்த டிசம்பரில்) பீகிங்கினால் நியமனம் செய்யப்பட்ட ஒரு மாகாண சட்ட சபை மூலம்(நிழல் பாராளுமன்றம்) பதிலீடு செய்யப்படுவதை அங்கீகரித்துள்ளார். அத்தோடு அவர் பிரித்தானிய காலனித்துவ ஒடுக்குமுறைச் [illegible] காலனித்துவ ஆளுனர் கிறிஸ் பற்றன், பில் கிளின்டன் நிர்வாகம் ஆகியன இந்த சீன கையேற்பினால் "ஜனநாயக உரிமை" க்கு ஏற்பட உள்ள அச்சுறுத்தல் பற்றி வருத்தம் தெரிவித்துள்ளன.

இந்த வருத்தம் ஹொங்கொங்கில் உள்ள சாதாரண தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளைக் காப்பதுடன் எந்தவிதமான தொடர்பும் அற்றவை. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஏதேச்சாதிகாரமான முறையில் அதன் காலனியை ஆட்சி செய்து வந்துள்ளது. 1984ல் ஹொங்கொங்கை சீனாவிடம் ஒப்படைக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் மட்டுமே பிரித்தானியா வரையறுக்கப்பட்ட தேர்தல் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தது.

படிப்பகம்

www.padippakam.com

# பிரித்தானிய தேர்தல்: தொழிற் கட்சியை ஆட்சியில் ஏற்ற தொழிலாளர்களுக்கு ஆர்வம் இல்லை

எதிர்வரும் மே மாதத்தில் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ட்ரொட்ஸ்கிச சோசலிச சமத்துவக் கட்சி (SEP) நான்கு வேட்பாளர்களை நிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளது. பெரும் வர்த்தக நிறுவனங்களின் இரட்டைக் கட்சிகளான கன்சர்வேடிவ், தொழிற் கட்சிகளுக்கு பதிலீடாக தனது கொள்கைகளையும் வேலைத்திட்டத்தினையும் பிரித்தானிய தொழிலாளர்கள், இளைஞர்களின் பரந்த தட்டினர் ஆய்வு செய்வதற்கு சோ.ச.க. இத்தேர்தல் பிரச்சாரத்தினை அரும்பெரும் சந்தர்ப்பமாக்கிக் கொள்ளும்.

கன்சர்வேடிவ், தொழிற்கட்சி தலைவர்களை உள்ளடக்கிய விதத்தில் இடம்பெறும் நாளாந்த ஊழல்கள், மோதுதல்களின் பின்னணியில் யதார்த்தத்துக்கு புறம்பான கதைகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. பொதுஜனங்களின் அக்கறைக்குரிய விடயங்களும் நலன்களும் அடியோடு புறக்கணிக்கப்பட்டுள்ளன.

டோரிகள்(கன்சர்வேடிவ் கட்சியினர்) படுமோசமான விதத்தில் பிளவுண்டுபோய்க் கிடக்கின்றனர். இவர்களின் ஐரோப்பிய எதிர்ப்பு கன்னை பிரித்தானியாவை ஐரோப்பிய வரையறுக்கப்பட்ட சமூக சட்டங்களில் இருந்து விதிவிலக்கு அளிப்பதன் மூலம் பூகோள ரீதியான முதலீடுகளை பிரித்தானியாவினுள் ஈர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றது. ஐரோப்பிய நாணய யூனியனில் சேர்வதை ஒரு திறந்த பிரச்சினையாக விட்டுவைப்பது இன்றைய பிரதமர் மேஜரின் கொள்கையாக உள்ளது. சுமார் 150 டோரி வேட்பாளர்கள் பிரித்தானியா இதில் இருந்து விலகி நிற்க வேண்டும் எனக் கோரும் வகையில் தனிப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களை வரைந்து கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. தனியொரு நாணயத்தைக் கொண்ட ஐரோப்பாவில் ஜேர்மன் மேலாதிக்கம் செலுத்தலாம் என அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

மறுபுறத்தில் 40 ஐரோப்பிய ஆதரவு டோரி எம்.பீ.க்கள் இந்தப் பொதுத் தேர்தலில் மேஜர் தோல்வி காணுமிடத்து, இதில் இருந்து பிளவுபட்டு. ஐரோப்பிய எதிர்ப்பு மைக்கேல் போட்டிலோ மூலம் மேஜரைப் பதிலீடு செய்ய திட்டமிட்டு வருகின்றனர். இதற்கிடையே டொயோட்டோ தலைவரான ஹரோஷி ஒகுடா, அரசாங்கம் நாணய யூனியனில் கைச்சாத்திடாவிட்டால் பிரித்தானியாவில் இருந்து வெளியேறிவிடப் போவதாகப் பயமுறுத்தி உள்ளார்.

டோரிகள் உயிர் பிழைத்ததற்குக் காரணம் தொழிற் கட்சியினர் அதற்குச் சமமான முறையில் முறிவு கண்டுள்ளதேயாகும். தொழிற்கட்சி தனியொரு ஐரோப்பிய நாணயம் சம்பந்தமாக "பொறுத்திருந்து பார்ப்போம்". கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. ஆனால் தொழிற்கட்சித் தலைவரான டொனி பிளேயர் தொழிற்கட்சியை நெருங்கிய ஐரோப்பிய ஆதரவாளனாக பெரும் வர்த்தக அமைப்புக்களுக்குக் காட்டிக் கொள்வதில் ஈடுபட்டுள்ளார்.

டோரிகளின் 18 வருடகால ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொணர்வதைத் தவிர தொழிற்கட்சி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதில் தொழிலாளர் வர்க்கத்தினிடையே எதுவிதமான ஆர்வமும் இல்லை. சமீபத்தைய பிரித்தானிய இடைத் தேர்தல்களில் இடம்பெற்ற பரந்தளவிலான வாக்களிப்பு பகிஷ்கரிப்பானது பெரும்பாலான இளைஞர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அடியோடு வாக்களிக் கமாட்டார்கள் போல் தோன்றுகின்றது. பிளேயரின் முதலாளித்துவ ஆதரவு நிகழ்ச்சி நிரலானது தொழிற்கட்சி ஆட்சியின் கீழ் வாழ்க்கைத் தர அழிப்பில் எந்தவிதமான மாற்றமும் இருக்காது என அவர்களை நம்ப வைத்துள்ளது. உத்தியோகபூர்வமான அரசியலில் இருந்து அவர்கள் அன்னியப்பட்டு நின்று கொண்டாலும், தொழிற் சங்கங்களின் காட்டிக் கொடுப்பையிட்டு ஆத்திரம் அடைந்திருந்தாலும் தொழிலாளர்களில் பலர் இன்னமும் ஒரு பதிலீட்டைக் காண்பதாக இல்லை. தமது பிரச்சினைகளுக்கு ஒரு முற்போக்கான தீர்வு காணும் அவர்களின் நம்பிக்கைக்கு தொழிற் கட்சி, ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் மோசடியான விதத்தில் தம்மை சோசலிசத்துடன் இனங்காட்டிக் கொண்டமை ஒரு பெரும் தாக்குதலைத் தொடுத்துள்ளது.

இந்தத் தேர்தலில் பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சியின் பிரச்சாரங்கள் தேசிய சீர்திருத்தங்களதும் ஸ்டாலினிசத்தினதும் வரலாற்று வீழ்ச்சியின் படிப்பினைகளை வழங்கும். கம்பனிகளின் இலாபத்தில் இருந்து அல்லாது தொழிலாளர் வர்க்கத்தின் அவசியத்தில் இருந்து தொடங்கும் ஒரு சோசலிச வேலைத் திட்டத்தினை அது முன்வைக்கும். அது இலாப அமைப்புக்கு எதிராக பிரித்தானியத் தொழிலாளர்களை அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைக்கப் போராடும்.

இத்தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் ஜூலி ஹைலண்ட்(32) பார்ண்ஸ்ட்லி கிழக்கு( யோர்க்ஷயர்) தொகுதிக்கு போட்டியிடுகின்றார். இவர் சோ.ச.க. உதவி பொதுச் செயலாளர். சோசக மத்திய குழு உறுப்பினரான டானியா கெண்ட்(32) டொட்டன்ஹாம்(லண்டன்) தொகுதியில் போட்டியிடுகின்றார். இவர் முன்னர் இளம் சோசலிஸ்டுகள் அமைப்பின் தேசிய செயலாளராக விளங்கியவர். இவர் தமிழர்கள், குர்திஷ் தொழிலாளர்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்றவர். பிரித்தானிய புகையிரத சேவை ஊழியரான ஸ்ருவாட் நோலான் (29) காஸ்டர்ன்(லிவர்பூல்)தொகுதியில் போட்டியிடுகின்றார். இவர் மேர்ஷி துறைமுகத் தொழிலாளர் கதவடைப்பில் சோசலிச சமத்துவக் கட்சி பிரச்சாரத்தில் முன்னணியில் நின்றவர்.

35வயதான ஸ்டீவ் ஜோன்ஸ்டன் கிளாஸ்கோவில் மேரிஹில் தொகுதியில் போட்டியிடுகின்றார். இவர் தனியார்மயமாக்கலுக்கும் சுகாதார சேவைகள் ஒழிப்புக்கும் எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்றதோடு ரீ.ஜீ.டபிள்யூ.யூ.தலைவர்களின் வர்க்க உடனுழைப்புக்களை அம்பலப்படுத்தியவர்.

## யப்பானில் வேலைநிறுத்தம்

கடந்த மார்ச் 11ம் திகதி 96 ஜப்பானிய கப்பல்கட்டும் துறைகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவற்றில் கப்பல் கட்டும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். வெளிநாட்டு போட்டிக்கும் அமெரிக்க திட்டத்துக்கும் அமைய இவை மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்ற அமெரிக்க கோரிக்கையை எதிர்த்தே இந்த வேலைநிறுத்தம் இடம்பெற்றது. ஜப்பானிய கப்பல்காரார்கள் அமெரிக்க துறைமுகங்களை பாவிப்பதை தடைசெய்யும் வாஷிங்டனின் திட்டத்துக்கு எதிராகவே இந்த வெளிநடப்பு இடம்பெற்றது.

# பாலஸ்தீனத்தில் புதிய சியோனிச குடியேற்றத்திட்டம்

கிழக்கு ஜெருசலத்தில் 30000 யூதர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஏற்படுத்தும் இஸ்ரேலிய அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். இது தற்சமயம் யசீர் அரபாத்தின் அதிகாரத்தின் கீழுள்ள மேற்குக்கரை அரபுச் சனத்தொகையினரிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலத்தினை வெட்டிச் செல்லும் விதத்தில் ஒரு யூத குடியிருப்பு சுவரை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலான இறுதி அந்தஸ்து தொடர்பாக அரபாத்தின் பேச்சாளர்களுக்கும் இஸ்ரேலிய அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 1967ல் ஆக்கிரமிக்கப்பட்ட அரபு கிழக்கு ஜெருசெலம் தொடர்பாக மேற்கு கரை, காஸாவுடன் சேர்த்து தான் ஒரு போதும் பேச்சுவார்த்தை நடாத்தப்போவதில்லை என இஸ்ரேல் வலியுறுத்தி வந்தது.

இஸ்ரேலியத் திட்டத்தினை கண்டித்து ஐ.நா.பாதுகாப்பு சபையில் ஐரோப்பிய யூனியன் கொணர்ந்த பிரேரணையை அமெரிக்க தனது தனி இரத்து வாக்கினை வழங்கி செல்லுபடியற்றதாக்கியது இங்கு குறிப்பிடத் தக்கது.

அரசியல் பதவிகளுக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இன்று "ஜனநாயக உரிமைகள்" பற்றிய பிரச்சினையை எழுப்பும் போது அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஹொங்கொங்கிலும் சீனாவிலும் உள்ள பன்னாட்டு கம்பனிகளின் இலாபம் சம்பாதிக்கும் நடவடிக்கைகள் மீது எந்தவிதமான கட்டுப்பாடும் விதிப்பதை பீகிங் அதிகாரத்துவம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றன.

### தென்சீனா

ஹொங்கொங்கின் சில ஜனநாயக உரிமைகள் மீது அதிகாரம் செலுத்தும் சீன ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் திட்சங்கற்பம் தென்சீனாவில் தலைநீட்டும் பெயர்பெற்றுள்ளது.

பல வருடங்களுக்கு குவாங்டொங் அதிகாரிகள் பீகிங்கில் இருந்து பெருமளவிலான பொருளாதார, நிதி சுயாட்சி கோரி வந்தனர். 1991ல் பிராந்திய அரசாங்கம் குவாங்டொங்குக்கும் ஹொங்கொங்குக்கும் இடையே ஒரு பொருளாதார இணைப்பு கருத்தை வெளியிட்டது.

சீனாவில் சம்பளவீதம் ஹொங்கொங் தரத்தின் 1/10 பங்காகும். இதன் விளைவாக ஹொங்கொங்கை அடிப்படையாகக் கொண்டுள்ள முதலீட்டாளர்கள் பெரும் இலாபம் சம்பாதித்துள்ளனர். ஒரு மதிப்பீட்டின்படி ஊழிய செலவிலான சேமிப்பு-ஆண்டொன்றுக்கு 18-25 பில்லியன் டாலர்கள் அல்லது 1992 ஹொங்கொங்கின்

ஹொங்கொங்கின் எதிர்காலத்தில் மேலாதிக்கம் செலுத்தக் கண்வைத்துள்ள நாடுகள்- ஜனநாயக எதிர்க்கட்சி அமைப்பு எனக் கூறிக் கொள்வதையும் பிரித்தானியா, அமெரிக்கா.சீனாவும்- சீனா, ஹொங்கொங் இருபுறத்திலும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தைத் தொடர்ந்து சுரண்டுவதில் பரஸ்பரம் அக்கறை கொண்டுள்ளன.

தென்சீனாவின் இனிப்புப் பண்ட தயாரிப்பு கடைகளில் தொழிலாளர்கள் அழுக்கானதும் ஆபத்தானதுமான நிலைமைகளின் கீழ் நீண்ட நேரம் வேலை செய்கின்றனர். ஆபத்தான விபத்துக்கள் இடம்பெறுவது சகஜமாகிவிட்டது. ஹொங்கொங் தொழிலாளர்கள் வேலையின்மை அதிகரிப்புப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். கம்பனிகள் தமது பக்டரிகளை சீனாவுக்கு

37.3 வீதத்தினை சம்பாதித்துக் கொண்டுள்ளனர். இது அடிமட்டத்தில் உள்ள 70 சத வீதத்தினரின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் அதிகம்.

சீனாவில் உள்ளதைக் காட்டிலும் சம்பளங்கள் ஹொங்கொங்கில் உயர்வாக உள்ளது போல் விலைவாசிகளும் அதிகம். பல உழைக்கும் மக்கள் உயர்ந்து செல்லும் வீட்டு வாடகையினாலும் ஊகங்களினால் அதிகரிக்கும் மெய் சொத்து செழிப்பினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். கீழ்மட்ட வருமான குடும்பங்கள் குறைந்த பட்சம் ஏழு வருடங்கள் அரசாங்க வீடமைப்பு திட்டங்களுக்காகக் காத்திருக்க வேண்டும். பிரித்தானிய/ சீன உடன்படிக்கைகளின் கீழ்(இவை ஒரு துண்டுவிழாத வரவு செலவுத் திட்டத்தை காலனிக்குத் தயார் செய்ய இணங்கியுள்ளன)

படிப்பகம்

www.padippakam.com





# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

**விஜே டயஸ்**

**பாகம்-2.**

தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் னவாத யுத்தம் 25 ஆண்டுகளைக் டந்துவிட்டது. அவ்வாறு கொள்ளக் ாரணம் அந்த யுத்தத்துக்கு அடிக்கல் ாட்டும் வேலைகள் சிறீலங்கா சமசமாஜ-ம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தின் கீழ் 1972ல் ிருந்து ஆரம்பமாகிவிட்டதேயாகும். இதை ாம் கடந்த இதழில் வெளியான கட்டுரையில் ட்டிக்காட்டினோம்.

1972ல் இடம்பெற்றது என்ன ? அந்த ஆண்டில் கூட்டரசாங்கம் சிங்கள பௌத்த இனவாத அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. அது சிங்கள பௌத்த மக்கட் பிரிவினரை தமிழ் மக்களுக்கு எதிராக யுத்த ரீதியில் தூண்டிவிடும் ஒரு நனவான செயற்பாடாக விளங்கியது.

1972 அரசியலமைப்புச் சட்டத்தின் இலக்கு என்னவாக இருந்தது ? இதைப் புரிந்து கொள்வதற்கு 1945ல் இயற்றி 1947ல் நடைமுறைக்கிட்டதும் 1972 வரை அமுலில் இருந்ததுமான அரசியலமைப்புச் சட்டத்தின் பின்னணியையும் செயற்பாட்டையும் பற்றி சிறிது தெரிந்து கொள்வது உதவியாக இருக்கும்.

1947 அரசியலமைப்புச் சட்டம், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் படுபிற்போக்கு முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் இடையே மக்களுக்கு எதிராகச் செய்து கொள்ளப்பட்ட ஒரு சதியின் பெறுபேறாகும். இந்த அரசியலமைப்புச் சட்டம் சம்பந்தமாக கருத்து வெளியிடுவதற்கு சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவிதமான சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. அத்தோடு முதலாளி வர்க்கத்தின் தீவிரவாதிகளாகக் கோலம் போட்டுக் கொண்ட பகுதியினருக்கும் கூட அத்தகைய வாய்ப்பு வழங்கப்படவில்லை.

1947 அரசியலமைப்புச் சட்டத்துக்கு டொனமூர் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இருந்துவந்த முதலாளித்துவ அமைச்சரவை 1944ல் தயாரித்த அரசியலமைப்பு வரைவு ஒரு தடைக்கல்லாக இருந்து வந்தது. அரசியலமைப்புச் சட்ட வரைவினைத் தயார் செய்ய டீ.எஸ்.சேனநாயக்கவின் தலைமையில் இருந்த அமைச்சரவையைத் தூண்டியது 1943 மே மாதத்தில் பிரித்தானிய குடியேற்ற அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனமாகும்.

ஏகாதிபத்திய இரண்டாம் உலக யுத்தம் அதன் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த இந்தக் காலகட்டத்தில் பிரித்தானியாவில் ஆசிய காலனிகள் (குடியேற்ற நாடுகள்) யப்பான் ஏகாதிபத்தியத்தின் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருந்தன. யுத்தத்தின் காட்டுமிராண்டித்தனத்துக்கும் முகம் கொடுத்திருந்த அச்சுறுத்தலின் தன்மைக்கும் சமாந்தரமாக பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தமது காலனித்துவ கைக்கூலி முதலாளிகளைக் கொண்டு இத்தருணத்தில் பொதுமக்களுக்கு எதிரான செய்யப்பட்டு, வழக்கு விசாரணை இல்லாமல் சிறையில் தள்ளப்பட்டதோடு சமசமாஜக் கட்சி அந்தரங்கமாகச் செயற்படத் தள்ளப்பட்ட போதிலும் அதன் தொழிற் சங்கங்கள் இன்னமும் இருந்துவர இடமளிக்கப்பட்டது. 1943 மார்ச்சில் அந்த அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டது. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு தோள் கொடுத்தபடி, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியைக் கொண்டிருக்க முழுமூச்சாக நின்று வந்த ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த பொதுஜன ஒடுக்குமுறைக்கு மத்தியில் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை முற்றுகையிட்டுக் கொள்ளவும் இலங்கை தேசிய காங்கிரசின் முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு தமது ஏகாதிபத்தியச் சார்பு துரோக நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் வாய்ப்புக் கிடைத்தது.

அமைச்சரவையின் அரசியலமைப்புச் சட்ட வரைவு முன்வைக்கப்பட்ட போது டீ.எஸ்.சேனநாயக்க இலங்கை தேசிய காங்கிரசில் இருந்தும் வெளியேறி இருந்தார். காங்கிரசின் முதலாளித்துவ தீவிரவாதிகளின் கோரிக்கைகளை கூட ஏகாதிபத்திய எஜமானர்களைப் போலவே தேசிய முதலாளித்துவ வர்க்க தலைவரான அவராலும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அமைச்சரவை வரைவு தயார் செய்யப்பட்டது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி பொதுமக்கள் மீது திணித்த மிலேச்ச ஒடுக்குமுறைகளினால் மதங் கொண்டிருந்த தேசிய முதலாளிகளின் விருப்பு வெறுப்புக்களின் பேரிலாகும். எனினும் 1944ல் நியமனம் செய்யப்பட்ட சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சுகளின்படி ஐவர் ஜென்னிங்சினால் தயார் செய்யப்பட்ட "சோல்பரி அரசியலமைப்பு", யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியின் திட்டம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைக் கணக்கில் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

சிங்கள முதலாளிகள் ஏகாதிபத்திய வாதிகளுடன் சேர்ந்து சகல சலுகைகளையும் தமது மடியில் போட்டுக் கட்டிக் கொள்ள முயற்சி செய்தாலும்- அந்தருணத்தில் ஒரு தொகை இனவாத சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்ததால் - உறிஞ்சப்பட்டிருந்த தோட்டத் தொழிலாளர்களதும் ஏனைய சிங்கள-தமிழ் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஐக்கியத்தின் அச்சுறுத்தலின் எதிரில் சிங்கள-தமிழ்-மற்றும் இன, மத முதலாளித்துவ குழுக்களுக்கிடையே இடம்பெறும் குத்து வெட்டுக்களினால் தோன்றக்கூடிய அரசியல் ஆபத்துக்களை பிரித்தானிய ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டிருந்தனர். சோல்பரி அரசியலமைப்புக்கு சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்கும் சில நிபந்தனைகள் சேர்க்கப்பட்டது. இதற்குக் காரணம் நளின் டீ சில்வாவும் குணதாச அமரசேகர போன்ற



டீ.எஸ். சேனநாயக்க

ஒடுக்குமுறைக்கு முதலாளித்துவ பகுதியினரைப் பிளவுபடுத்தவும் (இந்தியாவில் போன்று) மறுபுறத்தில் முதலாளித்துவ, ஏகாதிபத்திய அவசியங்களுக்காக பிரித்தானிய கொன்சர்வேடிவ் சமூக ஏகாதிபத்திய தொழிற்கட்சியின் முதலாளித்துவப் பகுதியினரை திரட்டி, தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் அச்சுறுத்தலை நசுக்கிவிடும் அளவுக்கு ஒரு ஆளும் வட்டத்தை பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் நியமித்திருந்தனர்.

1947ல் தொழிற்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் 29வது சரத்தின்படி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றக்கூடிய சட்டங்களுக்கு ஒரு சில வரையறைகள் விதிக்கப்பட்டிருந்தன.

(அ). எந்த ஒரு மதப் பிரிவினரதும் சமய செயற்பாட்டை தடைசெய்தல் அல்லது கட்டுப்படுத்தல்

(ஆ). எந்த ஒரு மக்கள் குழுவையோ அல்லது மதப்பிரிவையோ சேர்ந்த தனிநபர்களை வேறு பொதுமக்கள் குழுவுக்கோ அல்லது மதங்களையோ சேர்ந்த ஆட்களைக் கீழ்ப்படுத்தும் தடைகளுக்கு அல்லது வரையறைகளுக்கு கீழ்ப்படுத்தல்

(இ). எந்த ஒரு மக்கட் குழுவையோ அல்லது மதத்தினையோ சேர்ந்த தனியாட்களுக்கு வேறு மக்கட் குழுக்களையோ அல்லது மதங்களையோ சேர்ந்த தனியாட்களுக்கு வழங்கியிராத சலுகைகளை அல்லது நன்மைகளை வழங்குதல்

(ஈ). எந்த ஒரு மத அமைப்பினதும் அமைப்பு விதிகளை அந்த அமைப்பின் நிர்வாக அதிகாரிகளின் அங்கீகாரம் இல்லாமல் மாற்றுதல்.

இவற்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களால் செய்ய முடியாமல் இருந்தது. அத்தகைய சட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் அவை அரசியலமைப்புக்கு அமைய செல்லு

சார்பு முதலாளித்துவ ஆட்சியை நடாத்திச் செல்ல வாய்ப்புக் கிடையாது என சிங்கள முதலாளி வர்க்கப் பகுதியினருக்கு எச்சரிக்கை செய்தவர்களும் அவர்களுக்கு அதைப் புரிய வைத்தவர்களும் பிரித்தானியர்களே. ஆளும் வர்க்கத்தின் நோக்கில் அதன் சரியான தன்மை 1945ம் ஆண்டின் சோல்பரி அரசியலமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதற்கும் 1947ல் அது அமுலுக்கு இடப்பட்டதற்கும் இடையே கழிந்து சென்ற இரண்டு ஆண்டுகளுக்குள் அது நிரூபிக்கப்பட்டது.

## சிங்கள-தமிழ் முதலாளித்துவக் கூட்டு

1945ல் ஆரம்பமாகி 1947 பொதுவேலைநிறுத்தம் மூலம் உச்சக் கட்டத்தை அடைந்த ஒரு தொகை தொழிலாளர் போராட்டங்கள் இந்த இரண்டு வருட காலத்தினுள் வெடித்தன. லங்கா சமசமாஜக் கட்சியும் போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சியும் (நான்காம் அகிலத்தின் பகுதி) சட்டவிரோத நிலைமையில் இருந்து விடுபட்டு மீண்டும் வெளிப்படையாகச் செயற்படத் தொடங்கியதோடு ஸ்டாலினிஸ்டுகளின் ஏகாதிபத்தியச் சார்பு கருங்காலி இயக்கத்துக்கு எதிராகத் தொழிலாளர்களை அணிதிரட்டிக் கொள்ள முடிந்தமை அந்தப் போராட்டங்களின் பின்னால் இருந்து வந்த முக்கிய அரசியல் காரணியாகும். நடேச ஐயரின் தலைமையிலான இலங்கை-இந்தியர் காங்கிரஸ் மூலம் தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்ட நடாத்திய ஒரு தொகை போராட்டங்களும் இதனுடன் இணைந்து கொண்டது. இந்தப் புரட்சிகர தொழிலாளர் போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் இலக்குடனேயே சிங்கள-தமிழ் முதலாளிகளின் கூட்டு நிர்மாணிக்கப்பட்டது. 1947 பொது வேலைநிறுத்தத்தில் கொலன்னாவையில் இருந்து புறப்பட்ட தொழிலாளர் ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் (G.C.S.U.) கந்தசாமியை கொலை செய்ததன் மூலம் இந்தப் பிற்போக்கு கூட்டின் மக்கள் விரோத காட்டுமிராண்டி இலக்கு இரத்தத்தினால் பொறிக்கப்பட்டது.

பாகுபாடுகளுக்கு இடம் வைக்காமல் பல்வேறு மக்கள் குழுக்களுக்கு இடையேயும் சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்யும் நோக்குடன் சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட 29வது சரத்து மக்களை ஏமாற்றி, முதலாளித்துவ பிரிவினரிடையே ஒரு கூட்டுக்கு வழிவகுப்பதாக விளங்கியது என்பது இன்னொரு விதத்தில் நிரூபிக்கப்பட்டது. அது இந்திய பிறப்புரிமை கொண்ட தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழித்துக் கட்டும் சட்டம் 1949ல் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் நிரூபிக்கப்பட்டது.

1949 ஆகஸ்டில் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமை மசோதா .

www.padippakam.com

காங்கிரஸின் ஆதரவை யூ.என்.பி.வெற்றி கொள்ளவும் முடிந்தது. இந்த மசோதா அரசியலமைப்புக்கு முரணானது : சட்டவிரோதமானது எனக் காட்டி சிங்கள, தமிழ் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அதற்கு எதிராக அணிதிரட்டப் போராடியது போல்ஷிவிக்-லெனினிஸ்ட் சமசமாஜக் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் மட்டுமே.

1950ல் ஒன்றிணைந்து கொண்ட இந்த இரண்டு சமசமாஜக் கட்சிகளதும் தலைவர்கள் 1972 பிற்போக்கு குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சோல்பரி அரசியலமைப்பின் 29வது சரத்து சிறுபான்மைக் குழுக்களுக்கு வழங்கிய பாதுகாப்புக்களில் இருந்தும் அவற்றைத் தள்ளி வைக்கவும் கூட்டுச் சேர்ந்தது. சோல்பரிஅரசியலமைப்பின் 29வது அரசியலமைப்பு இருந்து வந்த நிலைமையிலும் குடியுரிமை மசோதா, சிங்களம் மட்டும் சட்டம் போன்ற தமிழ் பேசும் மக்களுக்கு பாகுபாடு காட்டும் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டது உண்மையே. எனினும் குறைந்த பட்சம் அந்த அந்த சரத்தின் பாதுகாப்பினை உத்தரவாதம் செய்ய இந்நாட்டின் தொழிலாளர் வர்க்க அரசியல் இயக்கங்கள் போராடிக் கொண்டுள்ளதையிட்டு தமிழ் மக்களுக்கு இருந்துவந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் 1972ல் சமசமாஜ துரோகத்தின் மூலம் சிதறடிக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்றதும் அவர்களின் ஜனநாயக உரிமைகளை பிடுங்கிக் கொள்கின்றதுமான சகல சட்டங்களும் 1972 அரசியலமைப்புச் சட்டத்தினுள் உறிஞ்சிக் கொள்ளப்பட்டது மட்டுமன்றி, பௌத்த மதம் அரச மதமாக பிரகடனம் செய்யப்பட்டதன் மூலம் அவை இன்னொரு அடி முன்னெடுக்கவும் பட்டன. 1972 அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாவது சரத்து குறிப்பிட்டதாவது : "இலங்கை மக்கள் குடியரசு பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் அதே சமயம் அதன் பிரகாரம் பௌத்த மதத்தினைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் அரசின் பொறுப்பாகும்" என்றது.

பௌத்த மதத்தினை கோலோச்சச் செய்யும் இந்நடவடிக்கையானது முக்கியமாக அன்று பெரும்பான்மையினரை இந்து சமயத்தினை பின்பற்றும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டிவிடத் தொடுக்கப் பட்டதாகும் என்பதை ஆளும் வர்க்கம் அங்கீகரித்தது ; ஒப்புக்கொண்டது.

இதனை இரண்டு விடயங்கள் சுட்டிக்காட்டின: 1. கத்தோலிக்க, கிறிஸ்தவ மத ஸ்தாபனங்களின் அங்கீகாரம் அதற்குக் கிடைத்தமை 2. யூ.என்.பி.சிறப்பாக அந்தச் சரத்துக்கு ஆதரவு வழங்கியமை.

தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் பிரதிபலிப்புக்கள் மூலமும் இந்த அங்கீகாரம் வெளியாகிற்று . 1972 அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், தோட்டத் தொழிலாளர்களிடையே பரவி இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகள் ஒன்றிணைந்ததன் மூலம் இது வெளிப் பட்டது. இவை ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்தன. தமிழ் மக்களிடையே பலவீனம் கண்டுவரும் தமது அரசியல் ஆளுமையை கட்டியெழுப்பும் பொருட்டு கூட்டாக 1972 அரசியலமைப் பினால் தொடுக்கப்பட்ட தமிழ் மக்கள் விரோத தாக்குதலை பயன்படுத்திக் கொள்ள தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் அங்ஙனம் முடிவு செய்தன.

சிங்கள-தமிழ் மக்கட் குழுக்களுக்கு இடையே மோதுதலை புதிய மட்டத்துக்கு உயர்த்தும் நோக்கத்துடன் 1972 அரசியல மைப்புச் சட்டம் வரையப்பட்டது எனவும், அது தமிழர் விரோத இனவாத யுத்தத்துக்கான அடிக்கல் நாட்டலாக விளங்கியது எனவும் நாம் வலியுறுத்தக் இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பின் நடைமுறைப் பெறுபேறாக இது இடம் பெற்றதானது துருவப்படுத்தப்பட்ட இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே யுத்த மோதுதல் அரசியலை நிகழ்ச்சி நிரலில் புகுத்தியது.

1972 சீறிலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் அரசியலமைப்பு-அக்கட்டத்தில் குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களின் பேரிலான பிற்போக்கு முதலாளித்துவ பிரதிபலிப்பாக விளங்கியது.

## மக்கள் போராட்டம்

1970 மே பொதுத்தேர்தலில் ஒரு தொகை மோசடி வாக்குறுதிகள் மூலம் பொது மக்களை ஏமாற்றி, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு சில மாதங்கள் கழிவதற்கும் முன்னரே தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் வெறுப்புக்கும் ஆத்திரத்துக்கும் இலக்காகியது. ஐக்கிய முன்னணியின் வாக்குறுதிகளால் உத்சாகமடைந்து அது ஆட்சிப்பீடம் ஏறத் தொழிற்பட்ட மக்கட் பகுதியினர், அரசாங்கம் அமைக்கப்பட்டது தான் தாமதம் தத்தமது கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டங்களில் இறங்கினர். சமசமாஜ-கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்களுக்குள் அணிதிரண்டு போய் இருந்த தொழிலாளர்கள் ஓரளவுக்கு சகிப்புடன் நடந்து கொண்ட போதிலும் வீடுகளை இழந்த ஏழை மக்கட் பகுதியினர் தனிப்பட்ட முதலாளிகளதும் அரசாங்கத்தினதும் காணிகளைக் கூட்டாகக் கைப்பற்றிக் கொண்டு பகிர்ந்து கொள்ளும் இயக்கத்தை நாடு பூராவும் பல்வேறு பிராந்தியங்களிலும் ஆரம்பித்தனர். அரச பலத்தைக் கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் இந்த ஏழை மக்களைக் கலைத்து தனிப்பட்ட முதலாளித் துவக் காணிச் சொந்தக் காரர்களின் உரிமைகளை பாதுகாக்க சிறீலங்கா-சமசமாஜ- கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் ஒரு கணமும் தாமதம் காட்டவில்லை.

சமசமாஜ-கம்யூனிஸ்ட் தலைவர்கள் தொழிலாளர் வர்க்க அமைப்புக்களையும் தொழிற்சங்கங்களையும் முதலாளித்துவ் கூட்டரசாங்க அரசியலுக்குள் கால்கட்டுப் போட்டுவிட்டிருந்த ஒரு சமயத்தில், சகிக்க முடியாத வாழ்க்கைச் சுமைகளால் நலிந்து போய்வந்த ஏழை மக்கள் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன வேலைத் திட்டத்தினைக் கொண்ட ஒரு தலைமை இல்லாமல் செய்யப்பட்டதன் ஒரு தீய விளைவாக தமது போராட்டங்களில் இருந்து பின்வாங்கச் செய்யப்பட்டனர். ஒடுக்கப்பட்ட, ஏழை மக்கள் தமது அடிப்படை உரிமைகளை முதலாளித்துவச் சொத்து அமைப்புக்கும் அரசுக்கும் எதிராக உறுதியாக போராடக் கூடியதும் போராடுகின்றதுமான தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் தலைமையின் கீழேயே வெற்றிகொள்ள முடியும் என்ற மறக்க முடியாத விஞ்ஞானபூர்வமான மார்க்சிச உண்மை மீண்டும் ஒரு தடவை ஊர்ஜிதமாகியது.

எனினும் ஜே.வீ.பி. இந்த உண்மைக்கு மாறாக தமது குட்டி முதலாளித்துவ இயக்கத்தை ஏழை மக்களதும் இளைஞர்களதும் விடுதலையாளனாகப் பிரகடனம் செய்து கொண்டு செயற்பட்டது. 1970ல் பிற்போக்கு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதற்கு செயற்பட்டதன் விளைவாக ஏழை மக்கள், இளைஞர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த ஜே.வீ.பி. அரசாங்கத்துக்கு எதிராக பொறுமையிழந்து வந்த ஒடுக்கப்படும் மக்களுக்கிடையே சந்தர்ப்பவாத ரீதியில் தமது அடிப்படையை விஸ்தரித்துக் கொள்ள முயன்றது. அங்கு அது சமசமாஜ- கம்யூனிஸ்ட் அரசியல் கட்சிகளின் துரோகத்தினை தொழிலாளர் வர்க்கத்தினதும் இலாயக்கற்ற யூ.என்.பி., ஐக்கிய முன்னணி என்ற இரு சாராரும் ஜே.வீ.பி.யின் சந்தர்ப்பவாதத்தைப் பற்றியும் குட்டி முதலாளித்துவ அரசியல் வங்குரோத்தையிட்டும் விழிப்பாக இருந்து வந்தன. ஆதலால் அந்த் இருசாராரும் ஜே.வீ.பி.யை தம்பக்கம் ஈர்த்துக்கொள்ள உள்ள வாய்ப்பையும் அவ்வாறு முடியாத இடத்து ஜே.வீ.பி.யின் அரசியல் மலட்டுத்தனத்தையும் பயன்படுத்தி அதனை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கவும் கணக்கிட்டுக் கொண்டு செயற்பட்டனர். அந்தக் கணிப்பின்படியே ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1971 ஏப்பிரல் வரை ஜே.வீ.பி.சுதந்திரமாக தமது அரசியல் பிரச்சாரங்கள் மூலம் அரசாங்கத்தை சவால் செய்ய இடமளித்து பார்த்திருந்ததே தவிர பாதுகாப்புத் துறையினர் வழங்கிய அறிக்கைகளைக் கணக்கில் எடுக்காமல் விட்டதனால் அல்ல. இந்த விடயத்தையிட்டு நாம் கவனம் செலுத்துவது முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கும் அதன் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கும் மார்க்சிசத்தை நனவான முறையில் காட்டிக்கொடுத்த கட்சிகளின் திட்டவட்டமான ஆதரவு கிடைத்து வந்தது என்பதை கணக்கில் கொண்டேயாகும்.அதைப்பற்றி இன்று போலவே அன்றும் நனவற்ற முறையிலும் குருடாகவும் இருந்தது அரசியல் ரீதியில் வங்குரோத்தான ஜே.வீ.பி.யேயாகும்.

1971 ஏப்பிரலில் ஜே.வீ.பி.நடாத்திய கிளர்ச்சி ஐக்கிய முன்னணியும் யூ.என்.பி.யும் கூட்டாக கட்டவிழ்த்துவிட்ட அரச ஒடுக்குமுறையின் மூலம் இரத்த வெள்ளத்தில் நசுக்கப்பட்ட போதிலும் ஏழை மக்களுக்கிடையே ஐக்கிய முன்னணியின் அடிப்படை அடியோடு முழுமனே சிதறுண்டு போய் இருந்தது என்ற யதார்த்தத்தையிட்டு அரசாங்கம் கண்களை மூடிக்கொள்ள விரும்பவில்லை. இதுவரை காலமும் குட்டி முதலாளித்துவ மத்தியதர வர்க்க பகுதியினரை அடிப்படையாகக் கொண்டு ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியைக் காக்க மேற்கொண்ட தமது மூலோபாய வேலைத் திட்டங்களை மீளச் சீர்செய்து கொள்ளும் பிரச்சினையை ஆளும் வர்க்கம் ஒதுக்கித் தள்ளிவிடவில்லை.

## இரண்டு முக்கிய காரணிகள்

முதலாளித்துவ ஆட்சியில் மூலோபாய மாற்றத்தினை இச்சமயத்தில் தலைநீட்டிய இரண்டு வேறு முக்கிய காரணிகள் வேண்டிநின்றன:

1. 1971 ஆகஸ்டில் தங்கத்துக்கும் அமெரிக்க டாலருக்கும் இடையே இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நிலைநாட்டப்பட்ட பெறுமதி உறவுகள் தகர்ந்தமை. பிரெட்டன்வூட்ஸ் உடன்படிக்கையின்படி 1 அவுன்ஸ் தங்கம் 35 டாலர்களுக்கு சமம் எனவும் அந்த நிலையான பெறுமதி அமைப்பின்படி ஏனைய நாடுகளின் நாணயங்களின் பெறுமதியை தீர்மானம் செய்யவும் இருந்து வந்த உடன்பாடு அமெரிக்க ஜனாதிபதி றிச்சாட் நிக்சனினால் ஒரு தலைப்பட்சமான முறையில் உடைத்து எறியப்பட்டது. இது உலகம் பூராவும் பணவீக்கம் அலைஅலையாக பெருக்கெடுக்க காரணமாகியது. சிறப்பாக எண்ணெய் உற்பத்தி நாடுகள் தமக்குக் கிடைக்கும் டாலர்களின் பெறுமதி குறைந்து போவதை ஈடுசெய்யும் பொருட்டு எண்ணெய் விலையை அதிகரித்தன. இதனால் சகல பொருட்களதும் விலைகளும் அத்தோடு எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உரம், விவசாய இரசாயனப் பொருட்களின் விலைகளும் வேகமாக அதிகரித்தன. இதன் விளைவாக கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவந்த உதவி மானியங்களைத் தொடர்ந்தும் வழங்குவது ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஒரு பெரும் பிரச்சினை யாகியது.

2. இந்தப் பணவீக்கப் பின்னணியில் பூராவும் பரந்து வந்ததும் இந்தியாவினுள் இந்திரா காந்தி அரசாங்கத்துக்கு எதிராக பரந்து வந்ததுமான ஒரு தொகை புரட்சிகர தொழிலாளர் போராட்டங்களின் முன்னோடியாக இலங்கைத் தொழிலாளர்கள் 1971ன் கடைப்பகுதியில் போராட்டங்களை ஆரம்பித்தனர். இலங்கை வங்கி ஊழியர்கள் போராட்டம் அதில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது.

வங்கி ஊழியர்கள் தமது போராட்டத்துக்கான தயாரிப்பு நடவடிக்கை யாக 1971 டிசம்பர் 13ம் திகதி நடைபெற்ற மாநாட்டில் தமது தொழிற்சங்கத் தலைமையில் இருந்து சமசமாஜ கட்சிக்காரர்களை வெளியேற்றினர். அதைத் தொடர்ந்து நியமனம் செய்யப்பட்ட தலைமை ஒரு மத்தியவாத தலைமையாக இருந்த போதிலும் சமசமாஜக் கட்சியை பாவித்து தொழிலாளர் வர்க்கத்துக்கு கால்கட்டு போடும் ஆளும் வர்க்க உபாயம் சிதறுண்டு போகும் என்பதற்கு அது நல்லதொரு சாட்சியாக விளங்கியது. புதிய தலைமையின் கீழ் தீவடங்கிலும் கைத்த தொழில், வர்த்தக நடவடிக்கைகளை ஸ்தம்பிக்க வைத்த வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் 1972 மார்ச்சில் வெடித்தது. தொழிலாளர் வர்க்கத்தினுள் தலைநீட்டி இருந்த இந்த எச்சரிக்கை ஏழைகளின் போராட்டத்தைக் காட்டிலும் முதலாளித்துவ ஆட்சிக்கு ஆபத்தானதாக விளங்கியது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972 மேயில் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது இந்த அரசியல் பின்னணியிலேயே.

துரோகத் தலைவர்களைக் கொண்டு தொழிலாளர் வர்க்கத்தை நெறிப்படுத்திக் கொள்ள முடியாதெனின் உதவி மானியங்களை வழங்கி, கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்களுக்கும் கால்கட்டுப் போட இருந்து வந்த வாய்ப்புக்கள் அடைபட்டுப் போனால் முதலாளித்துவ ஆட்சியை காக்க இப்போது செய்ய வேண்டியது என்ன? ஆளும் வர்க்கத்தினதும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினதும் எதிரில் தோன்றிய தீர்க்கமான பிரச்சினை இதுவேயாகும்.

1972 அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் சிங்கள-தமிழ் மக்களை ஆளுக்காள் மோதவைக்கும் உடன்பிறப்பைக் கொல்லும் யுத்தத் திட்டங்களுக்குள் அடைத்துப் போடுவது ஆளும் வர்க்கத்தின் புதிய மூலோபாயம் ஆகியது. முதலாளி வர்க்கத்துக்கு அவசியமாக இருந்த இனவாதத்துக்கு தோள்கொடுத்து ஜே.வீ.பி.யினால் கிளறிவிடப்பட்ட தொழிலாளர் விரோத -அவ்வாறே சிங்கள-பௌத்த சோவினிச அட்டூழியங்களில் இருந்தும் அனைத்துலக ரீதியில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக அணிதிரட்டப் போராடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அமைக்கப்பட்டு இன்னமும் நான்கு ஆண்டுகள் கடந்து விடாத நிலையில் ஜே.வீ.பி.யை இழுத்து, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி வைத்திருப்பதன் இலாபத்தை முதலாளி வர்க்கம் பறித்துக் கொண்டது.

1947ல் இருந்து நடைமுறைக்கு வந்த சோல்பரி அரசியலமைப்புச் சட்டம் யுத்தத்துக்கு பின்னைய முதலாளித்துவ ஆட்சியின் சார்புரீதியான உறுதிப்பாட்டை இலக்காகக் கொண்டிருந்திருக்குமாயின் 1972 அரசியலமைப்புச் சட்டம் ஏகாதிபத்திய உலக அமைப்பின் வெடிப்பின் புதிய சுற்றின் தொடக்கத்துடன் ஆரம்பமான வர்க்கப் போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் காட்டுமிராண்டி எதிர்பார்ப்புகளுடன் தயார் செய்யப்பட்டதாகும். இனவாதத்தைத் தூண்டுவதற்கு மேலாக முழு மக்களதும் குடி உரிமைகளை நசுக்கித் தள்ளப் பயன்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்ட அதிகாரங்களைக் ...

படிப்பகம்

www.padippakam.com



# டெங்ஷியோவோ பிங்கும் சீனப் புரட்சியின் தலைவிதியும்

தொழிலாளர் பாதை
ஆசிரியர் குழு அறிக்கை

டெங்ஷியோவோ பிங்கின் மரணம் அறுதபெ செய்திகளைப் பெருக்கெடுக்கச் செய்துள்ளது. ந்த ஒரு வெகுஜனத் தொடர்புச் சாதன பிமர்சனமும் சீனாவில் அரசியல் எதிர்ப்பைக் தூரமாக நசுக்கித் தள்ளும் அதே வேளையில் முதலாளித்துவ பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் டெங்கின் "கலப்பு பிறப்புரிமை" எனப்படுவதற்கு மேலாக தலை தூக்கவில்லை. வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் கலந்துரையாடல்கள் முதலீட்டாளர்கள் "டெங் மறைந்த பின்னர் சீனாவில் எனது பணம் இனியும் பாதுகாப்பாக இருக்குமா?" என்ற கேள்வியை ஆர்வத்துடன் கேட்பதையே பெரிதும் இலக்காகக் கொண்டுள்ளன.

எவ்வாறெனினும் டெங்ஷியாவோபிங்கின் வாழ்க்கையும் வரலாறும் மிகவும் தீர்க்கமான பிரச்சினைகளை எழுப்பியுள்ளன. உலகின் ஆகக் கூடுதலான சனத்தொகையைக் கொண்ட ஒரு நாட்டினை கிட்டத்தட்ட ஒரு தலைமுறை காலம் ஆட்சி செய்த நவீன காலத்தின் ஒரு மாபெரும் சமூகப் புரட்சி ஒன்றின் எழுச்சியுடனும் வீழ்ச்சியுடனும் பிணைக்கப்பட்ட அரசியல் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட ஒருவரின் வரலாறு வேறு எப்படி இருக்க முடியும்?

டெங்ஷியாவோ பிங்கினைப் பற்றிய ஒரு மதிப்பீட்டைச் செய்ய சீனப்புரட்சியின் பயணத் திசையையும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்துக்கான மூலோபாய பிரச்சினை களுடனான அதன் உறவையும் ஆய்வு செய்வது அவசியம்: ரூஷ்யப் புரட்சி முதலாளித்துவம் சிருஷ்டித்த முட்டுச் சந்தில் இருந்து முன்நோக்கிச் செல்லும் பாதையைக் காட்டியதா? ஒரு புதிய சமுதாயத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு இலாயக்கான சமூக சக்தி தொழிலாளர் வர்க்கமா அல்லது விவசாயிகளா? சோசலிசத்துக்கு ஒரு தேசியப் பாதை உண்டா? இந்தப் பரிணாமத்தில் புரட்சிகரத் தலைமையின் பாத்திரம் என்ன?

1904ம் ஆண்டில் சிசுவான் மாகாணத்தில் ஒரு சிறிய செல்வந்த நிலச்சுவாந்தரின் மூத்த மகனாக பிறந்த டெங்ஷியாவோபிங் 1911ல் மஞ்சு அரச வம்சத்தின் வீழ்ச்சியின் போது சீனாவில் முதிர்ச்சி கண்ட அசாதாரண புரட்சிகர புத்திஜீவிகள் தலைமுறையின் ஒரு பாகமாக விளங்கினார். சீன பேரரசு 1839-42 அபின் யுத்தத்தில் பிரித்தானியாவிடம் தோல்வி கண்டதைத் தொடர்ந்து போட்டி ஏகாதிபத்தியச் சக்திகளின் கோரிக்கைகளின் எதிரில் பொருளாதார ஸ்தம்பிதம், உள்நாட்டு யுத்தம், அடிபணிவுகளால் பண்பாக்கம் செய்யப்பட்ட ஒரு நிலையில் வீழ்ச்சி கண்டது.

சீனாவின் பலவீனத்தின் மிகவும் அவமானமான சின்னமாக தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிராந்தியங்களை பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்கும் ஜேர்மனிக்கும் அமெரிக்காவுக்கும் மற்றும் ஏகாதிபத்தியச் சக்திகளுக்கும் "சலுகைகளாக" வழங்கியமை இருந்தது. ஷங்காய், டியன்சின் டாலியன் போன்ற நகரங்களின் பகுதிகளும் ஹொங்கொங் போன்ற முழுச் சிற்றூர்களும் வெளிநாட்டு சக்திகளிடம் கையளிக்கப்பட்டன. இவற்றின் பொலிஸ் படையும் சட்ட அமைப்பும் ஈடாட்டம் கண்டு போய் இருந்தன.

1911ல் மஞ்சு அரச வம்சம் தூக்கி எறியப்பட்டதில் இருந்து சீனா அடியோடு சிதறுண்டு போயிற்று. போட்டி இராணுவத் தலைவர்கள் தம்மைப் பிராந்திய யுத்த இராணுவத் தளபதிகளாக ஸ்தாபிதம் செய்து கொண்டனர். சீனப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தேசிய குவாமின்டாங் கட்சியின் தலைவரான சன்யாட்சன் பீங்கிங்கில் ஒரு வர்க்கத்திடமிருந்து விவசாயிகளை விடுதலை செய்தல், யுத்த தளபதிகளின் ஆட்சிக்கு எதிராக நாட்டை ஐக்கியப்படுத்தல், ஏகாதிபத்திய மேலாதிக்கத்தில் இருந்து சீனாவை விடுதலை செய்தல். சீன முதலாளி வர்க்கம் பொருளாதார ரீதியில் உயர்தட்டு நிலச்சுவாந்தர்களுடனும் தரகர்களாகச் செயற்பட்ட ஏகாதிபத்தியச் சக்திகளுடனும் பிணைக்கப்பட்டு இருந்தது. இது ஒரு சுயாதீனமான புரட்சிகரப் பாத்திரத்தை வகிப்பதற்கு இலாயக்கற்றதாக இருந்தது.

சீனாவில் 1919ல் ஒரு வெகுஜனப் புரட்சிகர இயக்கம் வெடித்தது. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய சக்திகள் வார்ஷெயில்சில் கூடின. அவை சீன பேரரசனினால் ஜேர்மனிக்கு வழங்கப்பட்ட சலுகைகள்-முழு ஷான்டொங் குடாநாடு மீதான ஆதிக்கம் உட்பட வெற்றிகண்ட நாடுகளின் அணியில் ஒன்றான ஜப்பானுக்கு கையளிக்கப்படும் என தீர்மானித்தன. 1919 மே 4ம் திகதி இலட்சக் கணக்கான மாணவர்கள் தியன்மின் சதுக்கத்தில் ஜப்பானிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர். ஜப்பானிய பொருள் பகிஷ்கரிப்பும் எதிர்ப்பும் உடனடியாக நாடு முழுவதும் பரந்தது.

## மார்க்சிசமும் சீனப் புரட்சியும்

இந்த இளைஞர்களுள் மிகவும் சிந்தனாதிறன் படைத்த-ஆய்வுநோக்குக் கொண்டவர்கள் 1917 ரூஷ்யப் புரட்சியின் மாதிரியினால் ஈர்க்கப்பட்டனர். சீனாவில் போலவே ரூஷ்யாவிலும் முதலாளி வர்க்கம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பதற்கு தன்னை இலாயக்கற்றதாக நிரூபித்துக் கொண்டது- ஸாரிசத்தை ஒழித்தல், விவசாயிகளை அரை -நிலமானித்துவ அடக்குமுறையில் இருந்து விடுதலை செய்தல். அதற்குப் பதிலாக இந்தப் பொறுப்பு ரூஷ்ய தொழிலாளர் வர்க்கத்திடம் சென்றது . அது 1917 பெப்பிரவரி புரட்சியில் ஸார் சர்வாதிகாரத்தினைத் தூக்கி வீசியதோடு அதைத் தொடர்ந்து 1917 அக்டோபரில் லெனின்-ட்ரொட்ஸ்கி தலைமையிலான போல்ஷிவிக் கட்சியின் கீழ் ஆட்சியைக் கைப்பற்றியது.

சீனாவின் புரட்சிகர இளைஞர்களின் புதிய தலைமுறையானது யப்பானிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஒரு முக்கிய பாத்திரம் வகித்த எழுச்சிகண்டு வந்த தொழிலாளர் வர்க்கம் பக்கம் திரும்பியது. முதலாம் உலக யுத்த காலப்பகுதியில் சீனக் கைத்தொழில் அபிவிருத்தி கண்டது. யுத்த 'ஆடர்'களின் ஊக்குவிப்பினாலும் வெளிநாட்டுப் போட்டி இல்லாததாலும் பக்டரிகள் செழிப்படைந்தன. 1920ல் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஷென் டூக்ஷியூவின்- பின்னர் இடதுசாரி எதிர்க்கட்சிக்கு தலைமை தாங்கி உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் சீனப் பகுதியை அமைத்தவர்- தலைமையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சி வேகமாக வளர்ச்சி கண்டு சீன பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பெரும் கட்சியாகியது.

இந்த நிலைமையின் கீழேயே இளைஞனான டெங்ஷியாவோபிங் 17வது வயதில்-1921ல் பிரான்சுக்கு வந்தார். சீனா மேற்கு நாடுகளை எட்டிப் பிடிக்கும் விதத்தில் பெரிதும் முன்னேறிய விதிமுறைகளை கற்றுக்கொள்ளும் பரந்த ஆர்வத்தின் ஓர் பாகமாக பிரான்ஸ் பக்டரிகளில் வேலைசெய்து, தொழில் நுட்பப் பயிற்சியை பெறும் பொருட்டு அனுப்பப்பட்ட பல்லாயிரக்கணக்கான சீன இளைஞர்கள் கோஷ்டியில் இவரும் ஒருவராக இருந்தார்.

ஆனால் டெங்ஷியாவோபிங்கைக் கவர்ந்த முன்னேற்றமான கோட்பாடு ஆரம்பகால கம்யூனிஸ்ட் அகிலத்தின் மார்க்சிசமாகும். அவர் உடனடியாக சீன கம்யூனிஸ்ட் மாணவர்



டெங்ஷியாவோ பிங்கும் மாஓவும் (1959)

காலம் படித்தார்.

கம்யூனிஸ்ட் அகிலம் அக்காலத்தில் சீனாவைப் பற்றிய ஒரு தீவிரமான விவாதத்தில் ஈடுபட்டிருந்தது. ஸ்டாலின் தலைமையிலான கன்னை 1917ன் மிகவும் அடிப்படையான படிப்பினைகளை புறக்கணித்துவிட்டு மென்ஷிவிக் இரண்டு கட்டப் புரட்சிக் கோட்பாட்டை தழுவிக் கொண்டிருந்தது. அது சீனத் தொழிலாளர் வர்க்கம் தன் சொந்தத்தில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்கு முன்னதாக ஒரு சுயாதீன சீன முதலாளித்துவத் தூக்கரன அதனது போராட்டத்துக்காக முதலில் சீன முதலாளி வர்க்கத்தை ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தியது. இந்த மூலோபாயத்தில் இருந்து ஊற்றெடுத்த உபாயம் என்ன எனில் இக்கட்டத்தில் ஷியாங்கை ஷேக் தலைமை தாங்கிய முதலாளித்துவ குவாமின்டாங் கட்சிக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சி கீழ்ப்படிய வேண்டும் என்பதேயாகும்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி கோமின்டானுக்குள் (Guomindang) ஒன்றிணைக்கப்பட்டதோடு இந்த முதலாளித்துவ கட்சியின் கட்டுப்பாடுகளையும் ஏற்கத் தள்ளப்பட்டது. இதே சமயம் ஷியாங்கை ஷேக் ட்ரொட்ஸ்கியின் ஒரே எதிர்ப்பு வாக்குக்கு மத்தியில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிறைவேற்றுக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டார். "முற்போக்கு" தேசிய முதலாளி வர்க்கம் என ஸ்டாலின் பெயரிட்ட கூட்டினை

அச்சுறுத்துவதாக விளங்கியதால் சீன கம்யூனிஸ்ட் கட்சி தீவிரவாத சமூக கொள்கைகளை- நிலம் மறுபங்கீடு . தொழிலாளர் கட்டுப்பாட்டில் பக்டரிகள்- முன்வைப்பதில் இருந்து தடுக்கப்பட்டது.

ட்ரொட்ஸ்கியும் இடதுசாரி எதிர்க்கட்சியும் சீனாவில் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அணிதிரள்வுக்காகப் போராடினர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பணி குவாமின்டாங்கின் வால் முடிச்சாக இருப்பதல்ல . சீனத் தொழிலாளர் வர்க்கத்துக்கு தலைமை தாங்குவதும் அதன் ஊடாக இலட்சோப இலட்சம் விவசாயிகளை அணிதிரட்டி முதலாளித்துவத்தையும் நிலமானித்துவத்தையும் தூக்கிவீசி ஆட்சியைக் கைப்பற்றுவதாகும் என அவர் வாதிட்டார். சீனா ஒரு ஒடுக்கப்பட்ட நாடாக இருப்பதால் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையேயான வர்க்க

நின்றுகொண்டுள்ள யுத்தக் கப்பல்கள் அ- அவை இரண்டாம் பட்சமானவை மட்டு ஆனால் வெளிநாட்டு முதலாளித்துவத்துக் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையே பொருளாதார, அரசியல் பந்தங்களே." (சீ புரட்சியின் பிரச்சினைகள்-பக்கம் -5- லியெ ட்ரொட்ஸ்கி)

## நிரந்தரப் புரட்சியின் முன்னோக்கு

தமது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட் காலவதியான முதலாளித்துவ அபிவிருத்தி கொண்ட நாடுகளில் முதலாளித் ஜனநாயகப் புரட்சியின் பணிகளை —ந பிரச்சினை, தேசிய ஐக்கிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம்— முதலாளி வர்க்கத்தினால் இட்டுநி முடியாது என்பதை ட்ரொட்ஸ்கி ஸ்தா செய்துள்ளார். இந்தப் பணி சம்பந்த அதனது போக்கு ஒரு புறத்தில் ஏகாதிபத்தியம், நிலச்சுவாந்தர் இரண்டுடனும் கொண்டுள்ள நெருக்க உறவுகளினாலும் மறுபுறத்தில் பார்ட் வர்க்கம் தொடர்பான பீதியினாலும் நிர்ண செய்யப்பட்டுள்ளது. சீனா ரூ கொண்டுள்ளதைப் போல சனத்தொகை பெரும்பான்மையினராக விவசாயிக கொண்டுள்ளது. அது ஒரு சுயாதீன பாத்திரத்தை வகிக்க இலாயக்கற்றுள் சிறு சொத்துக்களில் வேரூன்றியுள் செல்வந்தர்களுக்கும் பெரிதும் ஒடுக்கப் தட்டுக்களுக்கும் இடையே உள்ளார்ந்த ரீ பிரிந்து கொண்டுள்ளதுமான ஒரு இன சமூகத் தட்டான- விவசாயிகள் ஏனைய இர வர்க்கங்களில் ஒன்றினது தலைமை தொடர வேண்டியதாக இருக்கும்.

இதன்மூலம் முதலாளித்துவ ஜனந புரட்சியின் முன்னணிப் பாத்திரம்- பாட் வர்க்க சர்வாதிகாரத்தினைச் ஸ்தா செய்கையில் விவசாயிகளை அணிதிரட் தொழிலாளர் வர்க்கத்திடம் சென்றுள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட் தொழிலாளர் வர்க்கம் தன்னை ஜனந பணியுடன் மட்டும் மட்டுப்படுத்திக் செ முடியாது; ஆனால் முதலாளித்துவ சொ சவால் செய்யத் தூண்டப்படுகின் இதன்மூலம் ஜனநாயகப் புரட்சிக்கு பாரிய வெளிப்படையான சோசலிசப் ப வழங்குகின்றது.

www.padippakam.com



...யாவோ பிங்

ன்டிருக்கும். லெனினைப் போல்
ட்ஸ்கி சோசலிச நிர்மாணம் ஒரு
மப்படுத்தப்பட்ட தேசிய அரசின் கட்டு
ந்தினுள்- எல்லாவற்றுக்கும் மேலாக
ங்கிய ருஷ்யாவில்- முடியாது என
றுத்தினார். இதனை சோசலிசப்
சியை அனைத்துலக ரீதியாக
ரிப்பதன் மூலம் மட்டுமே அடைய
ம்.
டாலின் இந்த உலக சோசலிசப் புரட்சி
நாக்கை நிராகரித்தார். அவர் தனது
மபேணும் மார்க்சிச எதிர்ப்புக்
பாடான "தனிநாட்டில் சோசலிசம்"
சோவியத் யூனியனில் வளர்ச்சி கண்டு
அதிகாரத்துவ தட்டினரின் நலன்களை
னத்துக் கொண்டார். இந்தக் கோட்
டன்படி சோவியத் யூனியனில் சோசலிச
ாணம் தொடர்ந்தும் முன்னேறிய
ாளித்துவ நாடுகளில் ஆட்சிக்கு வரும்
லாளர் வர்க்கத்தில் தங்கியிருக்கவில்லை.
குப் பதிலாக சோவியத் யூனியனின்
ந்த உள்ளார்ந்த வளங்களை
திரட்டுவதன் மூலம் இதைச் சாதிக்க
ம்.
ந்தப் பிற்போக்கு முன்நோக்கின்
வாக்கின் கீழ் கம்யூனிஸ்ட் அகிலத்தின்
திரம் தொழிலாளர் வர்க்கத்துக்கு
த்துலக ரீதியில் பேரழிவு பெறுபேறுகளை
வண்ணம் ஒரு அடிப்படைப்
ாமத்துக்கு உள்ளாகியது. தனிமைப்
தும் பின்தங்கியதுமான சோவியத்
னில் சோசலிச நிர்மாணம்
பெத்தியவாதிகள் இராணுவ ரீதியில்
யிடர்திருந்தால் மட்டுமே சாத்தியமாகும்
ஸ்டாலினின் கன்னை கூறி வந்தது.
வித்தில் இளம் கம்யூனிஸ்ட் கட்சிகள்
லிசத்துக்கான புரட்சிகரப் போராட்
ளை நடாத்தக் கூடாது எனவும் முற்போக்கு
ாளித்துவ கட்சிகளுடனும் ஆட்சிகளுடனும்
க்களை சிருஷ்டித்து அவற்றை சோவியத்
னுள் உள்ளடக்கக் கூடிய விதத்தில்
ாய அரசாங்கங்கள் மீது நெருக்குவாரம்
ைர வேண்டும் என் நெறிப்படுத்
்டன.
தே காலப்பகுதியில் கம்யூனிஸ்ட் அகிலம்
லினின் தலைமையின் கீழ் சீனாவில்
மின்டாங் முதலாளி வர்க்கத்துடன்
ுபட்டு நின்றது. பிரித்தானியாவிலும்
ந்தகைய ஒரு கொள்கையே
ப்பிடிக்கப்பட்டது. அங்கு அது 1926
தானிய பொது வேலைநிறுத்தத்தினை
டிக்கொடுத்த தொழிற்சங்க காங்கிரஸ்
) அதிகாரத்துவத்துடன் ஒரு கூட்டினை
ாக்கிக் கொண்டது. கிரேம்ளின்
சலவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியை
வறுப்ட்ட வலதுசாரி தேசியவாத
களுக்கும் கீழ்ப்படியச் செய்தது.
ாங்கைசேக் முதலில் தனது அதிகாரத்தை
சீனாவில் நிலைநாட்டிக் கொண்டு
தளபதிகளிடம் இருந்து நாட்டின் எஞ்சிய
யை மீளக் கைப்பற்றும் பொருட்டு
கு படையெடுப்பை தயார் செய்து
தியதால் 1925-27 காலப்பகுதியில் சீனக்

தொழிலாளர்களைப் படுகொலை செய்ததன் மூலம் 1927 ஏப்பிரலில் துன்பகரமான முறையில் நிரூபிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஷஹானிலும் ஏனைய நகரங்களிலும் மேலும் படுகொலைகள் இடம்பெற்றன. பின்னர் குவாங்ஷூவில் (கன்டன்) சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய கிளர்ச்சி தோல்வி கண்டது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகர்ப்புற தளங்கள் சிதறடிக்கப்பட்டதோடு சீனப் பாட்டாளிகள் பல தசாப்தங்கள் பின்நோக்கி வீசப்பட்டது.

இது சீனத் தொழிலாளர் வர்க்கத்துக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. சிலவேளையில் 1927 பேரழிவு அனைத்துலக புரட்சி முன்நோக்கு சம்பந்தமான சோவியத் தொழிலாளர் வர்க்கத்தின் நம்பிக்கைக்கு எதிராக விழுந்த மிகவும் முக்கியமான தனித் தாக்குதலாக விளங்கும். இக்காலத்தில் இருந்து ஸ்டாலினிச அதிகாரத்துவம் அதனது தேசியவாத வேலைத்திட்டத்தினை முன்னொருபோதும் இல்லாத பெரும் கர்வத்துடன் முன்வைத்ததோடு இடதுசாரி எதிர்ப்பும் அதிகரித்த விதத்தில் தனிமைப்படுத்தப்பட்டது. அந்த வருடத்தின் முடிவுக்கு முன்னதாக ட்ரொட்ஸ்கி கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு -சீனாவின்-------- எல்லையில் இருந்து ஒரு சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அல்மா அட்டாவுக்கு சோவியத் மத்திய ஆசியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். சோவியத் யூனியனில் ஸ்டாலின் அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொண்டமை மறுபுறத்தில் சீனாவிலும் அனைத்துலகிலும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களைப் பொறுத்த மட்டில் பெரிதும் நாசகரமானதும் எதிர்ப்புரட்சிகரமானதுமான பாத்திரத்தை வகித்தது.

## தொழிலாளர் வர்க்கம் தொட்க்கம் விவசாயிகள் வரை

1927 தோல்விகளின் தருணத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாளர்கள் நாட்டுப்புறத்தை நோக்கி ஓட்டம் எடுத்தனர். அங்கு அவர்கள் விவசாயிகள், வர்க்கமல்லாத மூலகங்களில் இருந்து ஆதரவாளர்களைத் திரட்டி, பல ஒதுக்குப்புற கிராமங்களில் "செஞ்சேனை"யை அமைத்தனர். இவற்றில் மாஓசேதுங்கின் தலைமையில் ஜியாங்சி மாகாணத்தில் அமைக்கப்பட்டது மிகப் புகழ்பெற்றதாக விளங்கியது.

ஷங்காய் படுகொலைகளின் பின்னர் மாஸ்கோவில் இருந்து சீனாவுக்குத் திரும்பிய டெங்ஷியாவோபிங் தொலைவில் உள்ள தென்மேற்கு மாகாண்மான கியூசூவுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் பல வருடங்களுக்கு விடுதலை செய்யப்பட்ட ஒரு சிறிய பிராந்தியத்தை பராமரிக்க நேரிட்டது. 1931ல் பலத்த இராணுவ நெருக்குவாரத்தின் கீழ் டெங் தனது இராணுவத்தின் மிச்சசொச்சங்களை ஒரு முற்றுகைக்கு ஜியாங்சிக்கு இட்டுச் சென்றார். அங்கு அவர் தனது படைகளை மாஓவின் படைகளுடன் இணைத்தார். 1934 அக்டோபரில் அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் மாஓ புகழ்பெற்ற நீண்ட பயணத்தில் (Long march) இறங்கத் தள்ளப்பட்டார். அதில் அவரது படைகள் போரிட்டதோடு 10000 கி.மீற்றர்களுக்கு - ஒதுக்குப்புறமான ஷாங்ஷி- வடமேற்கு மாகாணத்துக்கு நடைபவனியில் ஈடுபட்டன. அங்கு மாஓ விவசாய நகரமான யனானில் தனது தலைமை அலுவலகத்தை அமைத்தார்.

நகரத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு, பிரச்சாரத்தில் இருந்து கிராமப்புற அரை சுதந்திரமான விடுவிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு இடம் பெயர்ந்தது வெறும் உபாயத்தில் செய்து கொண்ட ஒரு மாற்றம் அல்ல. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட வர்க்க தகவமைவு, வேலைத்திட்டத்தில் இருந்து மாறியேயாகும். சுயமாக அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சியினதும் ருஷ்யப் புரட்சியினால் ஊக்குவிக்கப்பட்ட அரைக் காலனித்துவ நாடுகளின் ஒடுக்கப்பட்ட முன்வைத்த சமூக வேலைத்திட்டம் பிரமாண்டமான மத்தியதர விவசாயிகளின் நலன்களைக் காப்பதாகவும் விளங்கியது.: கடன் குறைப்பு, கிராமங்களில் நேர்மையான நிர்வாகம், நிலாச்சுவாந்தர்கள், வட்டிகறப்போர். யுத்த தளபதிகள் ஒடுக்குமுறைகளுக்கு எதிர்ப்பு, வெளிநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு எதிர்ப்பு-சிறப்பாக 1931ல் மஞ்சூரியா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நகர்ப்புற தொழிலாளர்களிடையே எந்தவிதமான ஒழுங்குமுறையான தொழிற்பாடுகளையும் கைவிட்டது.

1925-26ல் விவசாயிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்துவத்தில் 5வீதத்தினை மட்டுமே கொண்டிருந்தனர்.1928ன் இறுதியில் அவர்கள் 70-80 வீதமாகினர். 1930ல் சூ-என்-லாய் 120,000 கட்சி முழு அங்கத்தவர்களுள் "கைத்தொழில் தொழிலாளர் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 2000க்கும் சற்று அதிகம்". என அறிவித்தார்.

"சீனாவில் விவசாயிகள் யுத்தமும் பாட்டாளிகளும்" என்ற தலைப்பில் பிரசுரமானதும் சீன இடதுசாரி எதிர்க்கட்சிக்கு எழுதப்பட்டதுமான ஒரு கடிதத்தில் ட்ரொட்ஸ்கி எச்சரிக்கை செய்தது போல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வர்க்க அடிப்படையிலான இந்தப் பெயர்ச்சி ஆழமான வரலாற்று விளைவுகளைக் கொண்டிருந்தது. 1931ல் மாஓ இன்னமும் சார்பு ரீதியில் சிறிய அளவிலான கெரில்லா நடவடிக்கைகளுக்கு ஜியாங்சியில் தலைமை தாங்கி வருகையில் ட்ரொட்ஸ்கி எழுதுகையில் குவாமிங்டானுடனான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவப் போராட்டத்தின் இறுதி வெற்றியில் முரண்பாடுகளை எதிர்பார்த்தார். நிலச்சுவாந்தர்- முதலாளித்துவ சக்திகளை முறியடித்த பின்னர் ஒரு விவசாயிகள் இராணுவம் நகரங்களுக்குள் நுழைகையில் தொழிலாளர் வர்க்கத்தை கட்டாயமாகத் தழுவிக்கொள்ளமாட்டாது. அதற்கு முரணாக சிறிய விவசாய உடமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான வர்க்க நோக்கிலான தர்ப்பட்ட வேறுபாட்டினால் ஒரு நேரடியானதும் வன்முறையானதுமான மோதுதல் சாத்தியமாக இருந்தது.

1920பதுகளின் ஆரம்பத்திலான தொழிலாளர் வர்க்க எழுச்சியினை மூலமாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, அது ஆட்சிக்கு வந்ததும் இக்கட்சி தொடர்ந்தும் தொழிலாளர் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் என எந்த ஒரு உத்தரவாதத்தையும் வழங்கவில்லை. ட்ரொட்ஸ்கி எச்சரிக்கை செய்கையில் : "சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கடைசி ஒரு சில வருடங்களில் நகரங்களிலும் கைத்தொழில்களிலும் புகையிரதப் பாதைகளிலும் கவனம் செலுத்தி இருந்திருக்குமானால்; அது தொழிற் சங்கங்களையும் கல்வி கிளப்புகளையும் வட்டங்களையும் தாங்கி நின்றிருக்குமானால்; அது தொழிலாளர்களில் இருந்து உடைத்துக் கொள்ளாமல் கிராமங்களில் இடம் பெறுவது என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ள கல்வி புகட்டி இருந்திருக்குமானால் - சக்திகளின் பரஸ்பர உறவில் பாட்டாளி வர்க்கத்தின் பங்கு இன்று ஒப்பிடமுடியாத அளவுக்கு பெரிதும் சாதகமாக இருந்திருக்கும்.

"உண்மையில் கட்சி தன்னை அதனது வர்க்கத்தில் இருந்து பிரித்துக் கொண்டது. இறுதி ஆய்வுகளில் அது விவசாயிகளுக்கும் கூட வடுக்களை ஏற்படுத்தும். பாட்டாளி வர்க்கம் ஒரு அமைப்பு இல்லாமலும் ஒரு தலைமை இல்லாமலும் ஒரு பக்கத்தில் தொடர்ந்து நின்று கொண்டிருக்கையில் விவசாயிகள் யுத்தம் ஒரு பூரண வெற்றியீட்டினாலும் கூட தவிர்க்க முடியாத விதத்தில் அது ஒரு முட்டுச் சந்துக்கே இட்டுச் செல்லும்." (சீனாவைப் பற்றி லியொன் ட்ரொட்ஸ்கி- 527 )

## மக்கள் குடியரசின் ஸ்தாபிதம்

மார்க்சிசத் தீர்க்கதரிசனத்தின் உதாரணங்கள் 1937ல் சீனா மீது ஜப்பான் நடாத்திய ஆக்கிரமிப்புடன் ஆரம்பமாகி 1949ல் மாஓசேதுங் ஆட்சிக்கு வந்ததோடு உச்சக்கட்டத்தை விடுதலை இராணுவம் 90000ல் இருந்து 10 இலட்சமாக வளர்ச்சி கண்டது. ஜப்பானுக்கும், குவாமின்டானுக்கும் எதிரான இராணுவப் போராட்டத்தில் மாஓவின் பிரதித் தளபதிகளில் பெரிதும் சக்தி வாய்ந்தவராகவும் ஒரு நீஜ மாவீரனாகவும் தோன்றிய டெங்ஜியாவோபிங் தலைமையிலான படைகளில் துரித வளர்ச்சி காணப்பட்டது.

1945ல் ஜப்பான் சரண் அடைந்ததும் சீனாவில் உள்நாட்டு யுத்தம் தோன்றியது. மாஓ, ஸ்டாலின் இருவரும் குவாமிங்டானுடனான ஏதேனும் ஒரு சமரசம் செய்து கொண்டு இதைத் தவிர்க்கும் ஏதும் வழிவகைகளை தேடினர். எவ்வாறாயினும் 1946 கோடையில் ஷியாங்கைசேக் அமெரிக்கா பேரம் பேசிய யுத்த நிறுத்தத்தை உடைத்துக் கொண்டு, தாக்குதலில் இறங்கினார். அது விரைவில் குறைப் பிரசவமாகியது. மக்கள் விடுதலை இராணுவப் படைப் பிரிவுகள் லின் பியாவோ தலைமையில் மஞ்சூரியாவையும் டெங்ஷியாவோபிங் தலைமையில் மத்திய சீனாவையும் வெற்றி கொண்டன.

1948ல் ஸ்டாலின் யாங்ஷியில் போரை நிறுத்தி, சியாங்கைசேக்குடன் ஆட்சியைப் பகிர்ந்து கொள்ளும்படி அனஸ்டாஸ் மிக்கோயனிடம் அனுப்பிய வேண்டுகோளை கணக்கெடுக்காமல் மாஓ ஒரு இறுதி மும்முனைத் தாக்குதலுக்கு உத்தரவிட்டார். இதன் மூலம் நாட்டின் தென்பாகத்தில் அரைப்பாகத்தைக் கைப்பற்றியதோடு குவாமின்டாங்கை தாய்வானுக்கு நாடுகடத்தினார்.

1949 அக்டோபர் 1ல் மாஓ தியன்மின் சதுக்கத்தில் மக்கள் சீனக் குடியரசின் ஸ்தாபிதத்தை பிரகடனம் செய்த வேளையில் அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை ஸ்தாபிதம் செய்வதாகக் கூறிக் கொள்ளவில்லை. அவர் ஸ்டாலினின் இரண்டு கட்டக் கோட்பாட்டை அனுசரித்தார். அது முதலாளித்துவத்தைப் பேணவும் தொழிலாளர் வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்டதாகக் கூறிக்கொள்ளப்பட்ட விவசாயிகள், நகர்ப்புற குட்டி முதலாளி வர்க்கம், "தேசிய" முதலாளி வர்க்கங்களைக் கொண்ட "நான்கு வர்க்கங்களின் கூட்டை" அமைத்துக் கொள்ள அழைப்பு விடுத்தார். யதார்த்தத்தில் தொழிலாளர் வர்க்கம் உள்நாட்டு யுத்தத்தில் ஒரு பார்வையாளனாக இருந்து வந்ததோடு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசாங்கத்தில் தனது செல்வாக்கை அது பிரயோகிக்கவில்லை.

தொழிலாளர் வர்க்கம் சம்பந்தமான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மனோபாவத்தை தலைநகர் கைப்பற்றப்பட்டதன் பின்னர் 1948ல் லொயாங் யுத்த முனை இராணுவத் தலைமையகத்துக்கு மாஓவினால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு தந்தி எடுத்துக் காட்டியது. குவாமின்டாங் அதிகாரிகள், நிலச்சுவாந்தர்கள், முதலாளிகளுக்கு எதிரான பழிவாங்கல்களின் அளவை வரையறுத்துக் கொள்வதில் "மிகவும் ஜாக்கிரதை"யாக இருக்கும்படி மாஓ கட்சி அதிகாரிகளுக்கு கட்டளையிட்டார்.

"நகரத்தினுள் காலடி வைத்ததும் சம்பளத்தைக் கூட்டி, வேலைநேரத்தைக் குறைப்பதாகக் கூறும் சுலோகங்களை இளகிய விதத்தில் முன்வைக்க வேண்டாம்" என மாஓ கட்டளையிட்டார். ஜனநாயக சீர்திருத்தங்களுக்கும் வாழ்க்கைத் தரங்களில் முன்னேற்றத்துக்கும் நகர மக்களை போராட்டத்துக்கு அணிதிரட்டுவதற்கும் அவசரப் படக் கூடாது." நகர்ப்புற ஏழை மக்களுக்கு உணவு வழங்கத் தானியக் களஞ்சியங்களை திறந்து விடுவது பற்றிய கோரிக்கையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைக்கக் கூடாது என அவர் கட்டளையிட்டார். இது "அரசாங்கத்திடம் நிவாரணங்களுக்கு தங்கியிருக்கும் உளவியலை அவர்களிடையே வளர்த்துவிடும்" என எச்சரித்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தது ஸ்டாலினிசத்தையும் விவசாயிகள் தீவிரவாதத்தையும் கொண்ட ஒரு பொறுக்கி எடுத்த கலவையைப் பிரதிநிதித்துவம் செய்த முன்னோக்குடனாகும். இது அதனது அசல் தொழிலாளர் வர்க்க அடிப்படையில் இருந்து

படிப்பகம்

www.padippakam.com

# டெங்ஷியோவோ பிங்கும் சீனப் புரட்சியின் தலைவிதியும்

(ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபிக்கப்பட்ட புதிய அரசு ஜனநாயகக் கட்டுப்பாட்டைப் பிரயோகம் செய்ய தொழிலாளர் வர்க்கத்துக்கோ அல்லது விவசாயிகளுக்கோ எதுவிதமான சாதனங்களையும் வழங்கவில்லை. அது செஞ்சேனையையும் அதன் தலைமை அதிகாரிகளையும் அரசியல் திணைக்கள தலைவர்களையும் (political commissars) அடிப்படையாகக்கொண்ட ஒரு அதிகாரத்துவ கருவியாக விளங்கியது.

தொழிலாளர் வர்க்கத்தின் எந்த ஒரு சுயாதீனமான நடவடிக்கைக்கும் மாஓவாதிகள் காட்டிய குரோதம் அவர்கள் சீன ட்ரொட்ஸ்கிஸ்டுகளை கையாண்ட விதத்தில் மிகவும் கொடூரமான வடிவத்தை எடுத்தது. ஸ்டாலினிஸ்டுகளதும் குவாமிங்டாங்குகளதும் ஜப்பானியர்களதும் கூட்டுக் கொலைகளுக்கு இடையேயும் ஜப்பானிய ஆக்கிரமிப்பு காலம் பூராவும் நகரங்களை மையமாகக் கொண்ட இரகசியக் கொலைகள்-குறிப்பாக ஷங்காயில் - தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்ப நான்காம் அகிலத்தை பின்பற்றுவது தொடர்ந்தது. நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். பொய் வழக்குகளில் மாட்டிவைக்கப்பட்டனர். இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் அல்லது நீண்ட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். வெளிநாடுகளிற்குத் தப்பி ஓடாதோர்-1949தொடக்கம் 1978வரை-டெங்ஷியாவோபிங் 100,000 நீண்டகால அரசியல் சிறைக் கைதிகளை விடுதலை செய்ய உத்தரவிடும் வரை சிறையில் தள்ளப்பட்டிருந்தனர்.

## மாஓவாதத்தின் முரண்பாடுகள்

தொழிலாளர் வர்க்கத்தையும் விவசாயிகளையும் கட்டுப்படுத்த ஒரு பொலிஸ் அரசு இயந்திரத்தை ஸ்தாபிதம் செய்கையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு முதலாளித்துவ பண்பு கொண்ட புரட்சிகர நடவடிக்கைகளை அமுல் செய்தது. சீனப் புரட்சியின் வெற்றியில் முதலாவதும் இன்னமும் பிரமாண்டமானதும் நிலமானித்துவ உயர் வர்க்கத்தினரை ஒழித்துக் கட்டியதாகும். அவர்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு அவர்களின் தனிப்பட்ட சொத்தாகப் பங்கிட்டு வழங்கப்பட்டது.

வெளிவாரி நெருக்குவாரங்கள் காரணமாக இன்னும் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதலாளிகள் தாய்வானுக்கு ஓட்டம் எடுத்தமை ஆட்சியாளர்களை கைத்தொழில் வசதிகளில் பலவற்றைத் தேசியமயமாக்கும்படி நெருக்கியது. விவசாயம் கூட்டுப் பண்ணைகள் ஆக்கப்பட்டது. பின்னர் கிராமப்புற ஜனத்தொகையில் பெரும் பங்கினர் பிரமாண்டமான விவசாய கம்யூன் (agrarian communes) களாக ஒழுங்கமைக்கப் பட்டன. அமெரிக்க இராணுவத் தலையீடு சீனாவை கொரிய யுத்தத்தில் தலையிட வைத்ததோடு சீன வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு வாய்வீச்சுக்களைக் காட்டிக் கொள்ள நேரிட்டது.

மாஓவின் பெரும் பாய்ச்சல் (the great leap forward) சீனாவின் கைத்தொழில் மயமாக்க வேகத்தை அவசியமான தொழில்நுட்பப் பயிற்சியோ அல்லது அடிக்கட்டுமானமோ இல்லாமல் விவசாயிகளை அணிதிரட்டுவதன மூலம் அடிவளவு கைத்தொழில்களை ஸ்தாபிக்க எடுத்த ஒரு முயற்சியாகும். இதன் ஆர்வத்துடனும் கூடிய பங்களிப்பு இல்லாமலும் ஒரு முன்னேறிய கைத்தொழில் தொழில்மயமான பொருளாதாரத்தை சீனாவில் சிருஷ்டிக்க முடியாது போயிற்று.

அத்தகைய ஒரு அபிவிருத்தி மாஓவினதும் டெங் உட்பட்ட அவரின் சகாக்களதும் ஸ்டாலினிச முன்நோக்கினால் தடுக்கப்பட்டது. மாஓ சீன தேசிய வாதத்துக்குச் சார்பாக உலக சோசலிசப் புரட்சியை நிராகரித்ததோடு வெகுஜனங்களின் எந்த ஒரு சுயாதீனமான பாத்திரத்தினையும் அதிகாரத்துவ இயந்திரத்தின் நீண்ட அங்கி ஆக்கினார்.

இந்தப் பிரச்சினைகள் மாஓவின் பாத்திரத்தினால் மோசமாக்கப்பட்டன. ஸ்டாலினைக் காட்டிலும் குறைந்த படிப்பும் கலாச்சாரமும் கொண்ட மாஓ சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளர் வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த காலத்தில் அவர் எப்போதும் கட்சியின் வலதுசாரி கன்னையுடன் நின்று கொண்டார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பைசான்டைன் (Byzantine) அரசியலில் அவர் ஒரு போனபாட்டிச பாத்திரத்தை வகித்தார். எப்போதும் தனது சொந்தப் பாத்திரத்தினை வகிக்க முயன்றபடி கன்னைகளுக்கு இடையே சூழ்ச்சி செய்தார். "இடது"க்கு எதிராக "வலதை"யும் பொதுமக்களுக்கு எதிராக இராணுவத்தையும் விவசாயத்துக்கு எதிராகக் கைத்தொழிலையும் மோதவைத்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருந்துவந்த அதிகாரம்மிக்க அடிப்படையினாள் இந்த தனிப்பட்ட பண்புகள் பிரமாண்டமான நாசகரமான தாக்கங்களை ஏற்படுத்த வாய்ப்பு இருந்தது. மாபெரும் பாய்ச்சலின் தோல்வி டெங்குக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் சில மாதங்களுக்குள் தெளிவாகியது. இருப்பினும் இது இன்னும் இரண்டு மாதங்களுக்குத் தொடர அனுமதிக்கப்பட்டது. இதனால் இருபதாம் நூற்றாண்டின் மிகவும் பயங்கரமானதும் 30 மில்லியன் மக்களைப் பலிகொண்டதுமான பஞ்சம் ஏற்படக் காரணமாகியது. இதனை நிறுத்துவது என்பது இதன் முக்கிய ஆரம்பிப்பாளரான மாஓவை அவமானத்துக்கு உள்ளாக்கி இருக்கும். முழுப் பிராந்தியங்களும் பட்டினியில் தள்ளப்பட்டதற்குக் காரணம் தேசிய உணவு கையிருப்புக்கள் முடிந்து போனது அல்ல; ஆனால் உள்ளூர், பிராந்திய கட்சித் தலைவர்கள் "மாபெரும் சுக்கான் பிடிகாரனை" கோபமூட்டச் செய்யலாம் என அஞ்சி அவசர உணவு விநியோகங்களுக்கு அழைப்பு விடுக்காததேயாகும்.

அவ்வாறே கலாச்சாரப் புரட்சியும் மாபெரும் பாய்ச்சல் தோல்வி கண்டதன் பின்னர் தனது முக்கிய போட்டியாளரான லியூசாவோஜியையும், அத்தோடு மாஓவின் செங்காவலர்களால் "இரண்டாவது முதலாளித்துவப் பாதையாளர்" எனப் பெயர் சூட்டப்பட்டவரும் அவரின் தளபதியுமான டெங் ஷியாவோபிங்கையும் நசுக்கி அதிகாரத்தை மீளக் கைப்பற்றும் மாஓவின் முயற்சியால் ஆரம்பமாகியது. மாபெரும் பாட்டாளிவர்க்க கலாச்சாரப் புரட்சி அதனது பாசாங்குத் தலைப்புக்கள் எதற்கும் இலாயக்கானதாக இருக்கவில்லை; இது ஆழமான விதத்தில் தொழிலாளர் வர்க்க எதிர்ப்பு கொண்டதாயும் கல்வி, கலாச்சாரம், தொழில்நுட்பம், விஞ்ஞானத்தின் அபிவிருத்திக்கு எதிராக நெறிப்படுத்தப்பட்டதாயும் விளங்கியது.

செங்காவலர்கள் இயக்கம் (Red Guard movement) குழப்பம் நிறைந்ததாக இருந்த போதிலும் சமூக சமத்துவமின்மையினதும் அதிகாரத்துவ சலுகைகளதும் பெருக்கத்தின்

சூழ்ச்சிகள் சீன வெளிநாட்டுக் கொள்கையை அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான அப்பட்டமான கூட்டினை அமைக்கும் திசையில் மறுதகவமைத்துக் கொள்ள வழிவகுத்தது. இது ஹென்றி கீசிங்கரதும் றிச்சார்ட் நிக்சனதும் பீகிங் வருகையிலும் வியட்னாம் புரட்சியின் காட்டிக் கொடுப்பிலும் உச்சக் கட்டத்தை அடைந்தது.

## மாஓவாதத்தின் அனைத்துலகப் பாத்திரம்

1927 புரட்சியின் தோல்வியைத் தொடர்ந்து மாஓசேதுங் சீனத் தேசியவாதத்தின் அடிப்படையில் ஒரு பாதையை உலகச் சோசலிசப் புரட்சியுடனான சீனாவின் உறவு பற்றிய மிகவும் அடிப்படையான விவகாரத்தின் மீது வரைந்து கொண்டார். உள்நாட்டு யுத்தத்தில் இருந்து பின்வாங்கக் கோரும் ஸ்டாலினின் வேண்டுகோளை மாஓ நிராகரித்த போதும் கொறியன் யுத்தத்தில் தனது சொந்தக் கொள்கையின் அடிப்படையில் இராணுவத் தலையீட்டைக் கடைப்பிடித்தார். இது பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்தை அடிப்படையாகக் கொள்ளாது, சீன அதிகாரத்துவத்தின் தேசிய நலன்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பீகிங் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை தனது சொந்த தேசிய அக்கறைக்குரிய விடயங்களுக்காகத் தியாகம் செய்வதில் மாஸ்கோவுக்கு எதுவிதத்திலும் சோடைபோனதாக இருக்கவில்லை. இது 1954ல் வியட்னாம் யுத்தத்தின் முதலாவது கட்டத்தினை முடிவுக்குக் கொணர்ந்து பிரித்தானிய, பிரான்சிய ஏகாதிபத்தியங்களுடன் ஜெனிவா ஒப்பந்தத்துக்காக சூ.என்.லாயும் மொலடோவும் கூட்டாகத் தரகர் வேலை பார்த்தபோது அம்பலமாகியது. ஸ்டாலினிச இராஜதந்திரிகள் டிலன்-பியன்-பூ. யுத்த களத்தில் வியட்மிங்குகள் ஈட்டிய வெற்றியை மறுத்து, ஹொசிமின்னை அமெரிக்க தலையீட்டுக்கும் மற்றுமோர் 20வருடகால இரத்தக் களரிக்கும் களம் அமைக்கும் வியட்நாம் பிரிவினையை ஏற்றுக் கொள்ளும்படி நெருக்கினர்.

மாஓ தனது சோவியத் சகபாடிகளுக்கு எதிராக சீன ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் நலன்களை தொடர்ந்து காத்து வந்தார். இது 1960 சீன-சோவியத் பிளவில் உச்சக் கட்டத்தை அடைந்தது. எவ்வாறெனினும் இது எது விதத்திலும் ஸ்டாலினிசத்தின் எதிர்ப்புரட்சி நோக்கில் இருந்து பிளவுபடுவதை குறித்து நிற்கவில்லை.

இது சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் வெளியே தொழிலாளர் வர்க்கத்தினுள் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகவும் பீகிங்கிடம் இருந்து அரசியல் தலைமையைப் பெற்றதுமான பெரும் இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி, சம்பந்தமாக நிரூபிக்கப் பட்டது. இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி 1925-27ல் ஸ்டாலினால் சீன கம்யூனிஸ்ட் கட்சி, மீது திணிக்கப்பட்ட அதே கொள்கையையே கடைப்பிடித்தது. இது சுகார்ணோவின் முதலாளித்துவ தேசியவாத கட்சியுடன் கூட்டமைத்துக் கொண்டு, இந்தோனேஷிய பாட்டாளி வர்க்கத்தின் எந்த ஒரு சுயாதீனமான புரட்சிகர நடவடிக்கையையும் நசுக்கியது.

இதன் பெறுபேறு 1927ல் சீனப் புரட்சியின் தோல்வியினால் ஏற்பட்ட இரத்தக் களரிப் பேரழிவினைவிட மோசமானதாக இருந்தது. 1965ல் இந்தோனேஷிய இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதோடு இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்தது. பத்து இலட்சம் தொழிலாளர், விவசாயிகளைக் கொன்றுதள்ளியது. இந்தப் படுகொலை, வியட்னாமில் தேசிய விடுதலை முன்னணியின் வளர்ச்சி கண்டு வந்த பலத்துக்கு இடையேயும் தென்கிழக்கு ஆசியா பூராவும் ஏகாதிபத்தியத்தின் அந்தஸ்த்துக்கு முண்டு கொடுத்தது.

வியட்நாமுக்கான சீன உதவி, புரட்சிகர

மாஓவின் மரணத்தின் மூன்று ஆண்டுகளின் பின்னர் டெங்ஷியாவோபிங் வியட்னாமுக்கு எதிரான இரண்டுவார எல்லை யுத்தத்தை தொடுத்தார். இதில் பல்லாயிரக் கணக்கான சீன, வியட்னாமிய படையாட்கள் கொல்லப்பட்டனர்.

மார்ச் 3 நியூஸ் வீக் சஞ்சிகையில் கீசிங்கர் நினைவுகூர்வது போல் மாஓ உலகப் புரட்சி முன்நோக்கையிட்டு முற்றிலும் சிடுமூஞ்சியாக விளங்கினார். அவர் நிக்சனுக்கு கூறியதாவது: "என்னைப் போன்ற மக்கள் பெரும் பீரங்கிகளைப் போல் ஒலிக்கின்றார்கள். உதாரணமாக முழு உலகமும் ஐக்கியப்பட்டு ஏகாதிபத்தியத்தையும் திரிபுவாத்ததையும் சகல பிற்போக்காளர்களையும் தோற்கடிப்பதோடு சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்யவேண்டும்" ஆகியவை. அப்போது கீசிங்கர் சொன்னார்: "பல தசாப்தங்களாக சீனாவின் பகிரங்க விளம்பரப் பலகைகளில் காணப்பட்ட அந்த சுலோகத்தை எவரும் பாரதூரமாக கணக்கெடுக்கும் சாத்தியம் பற்றி அவர் எக்காளமிட்டுச் சிரித்தார்."

மாஓவாதத்தின் நாசகரமான சிந்தனா செல்வாக்கின் ஒரு முக்கிய பண்பாக "மக்கள் யுத்த" கோட்பாடு விளங்கியது. அது ஏகாதிபத்தியத்தை தூக்கி வீசுவதற்கு தொழிலாளர் வர்க்கத்தை சுயாதீனமான முறையில் புரட்சிகரமாக அணிதிரட்டாமல் விசாயிகளை அடிப்படையாகக் கொண்ட இராணுவத்தினால் நகரங்களை முற்றுகையிடுவதை வழியாகக் கொண்ட நீண்ட யுத்தத்தினை சிபார்சு செய்தது.


இந்தப் பாணியிலான யுத்தமுறை மாஓவின் வெற்றியில் ஒரு முக்கிய மூலகமாக விளங்கிய-ஜப்பானிய ஆக்கிரமிப்பு பெரிதும் தீர்க்கமானதாக விளங்கியது. அத்தோடு இது அத்தகைய ஒரு பாத்திரத்தினை வியட்னாமிலும் வகித்தது. அங்கு நாட்டின் அரைப்பங்கு ஏற்கனவே வியட்மிங்குகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. என்னதான் இந்த இராணுவ வெற்றிகள் சிறப்பு முக்கியத்துவம் கொண்டவையாக நிரூபிக்கப்பட்டாலும் இவை இரண்டும் இறுதியில் ஏகாதிபத்தியத்தை தழுவி நடந்து கொண்டதோடு- முதலாளித்துவச் சந்தை உறவுகளையும் புனரமைத்துக் கொண்டன. வேறு இடங்களில் மக்கள் யுத்தம் நடாத்த எடுத்த முயற்சி முற்றுப் பெற்றது - பொலிவியாவில் சே குவேராவின் சிறிய கெரில்லா குழுக்கள் வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டது தொடக்கம் இந்தியாவில் நக்சலைட்டுக்களின் நீண்டதும் மலட்டுத்தனமானதுமான இராணுவ நடவடிக்கை வரை நீண்டதுமான இரத்தக் களரிப் பயங்கரங்களாகியது.

"அரசியல் அதிகாரம் துப்பாக்கி முனையில் இருந்து பெருக்கெடுக்கின்றது" போன்ற மாஓவாத போதனைகளை 1960பதுகளில் தலைமேல் வைத்துக் கொண்டாடிய குட்டி முதலாளித்துவ புத்திஜீவித் தட்டுக்களிடையே கெரில்லாவாதம் பெரிதும் வழிபாட்டு போக்கைத் தூண்டிவிட்டது. இந்தத் தட்டினரின் தொடர்ந்து வந்த பரிணாமம் வலது பக்கம் பயணம் செய்தது. சே குவேராவின் பிரச்சாரகராக விளங்கிய ரெஜி டாபரே பிரான்சிய அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரியாக நியமனம் பெற்றார்.

## தியன்மென் சதுக்கத்துக்கான பாதை

கலாச்சாரப் புரட்சியின் போது டெங்ஷியாவோபிங் இரண்டு தடவைகள் அவமானம் செய்யப்பட்டு, தலைநகரை விட்டு ஓட்ச் செய்யப்பட்டார். டெங்கின் விளக்கத்தின்படி சிறையோ கொலையோ செய்யப்படும் முயற்சி மாஓவினால் தவிர்க்கப்பட்டதாலேயே தாம் உயிர் பிழைத்ததாகக் கூறுகின்றார். பின்னர் மாஓ தம்மை பீகிங் அலுவலகத்துக்கு 1973ல் திருப்பி அழைத்ததாக டெங் நினைவு கூர்ந்துள்ளார்.

www.padippakam.com



*9ல் இலட்சக் கணக்கான இளம் தொழிலாளர்கள் தியன்மின் சதுக்கத்தில் மாணவர்களுடன் கூடினர்*
*திகரித்துவரும் சமூக சமத்துமின்மையையும் ஊழல்களையும் கண்டு அவர்கள் கொதித்தனர்*

ாகாணங்களிலும் இராணுவத்திலும் ஆதரவு ரட்டிக் கொண்டிருந்த டெங்ஷியாவோபிங், ாஓவின் மரணத்தைத் தொடர்ந்து ஆட்சிக்கு ந்த குவா ஹுவா பெங்கை ஆட்சியில் ருந்து வெளியேற்றி. 1978ல் சீனக் ம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது கூட்டத் தொடரில் அதிகாரத்தை ஸ்தாபிதம் செய்து காண்டார்.

தமது கைக்கு அதிகாரம் கிடைத்தது றுதியானதைத் தொடர்ந்து டெங் உலக தலாளித்துவத்தால் வரவேற்கப்பட்ட ட்டுப்பண்ணை ஒழிப்பு, வெளிநாட்டு லதன ஊடுருவலுக்கு சீனாவிள்கதலை றந்துவிடுதல். அரசுடமை பொரு ாதாரத்தை தனியார்மயமாக்கல் காள்கைகளில் இறங்கினார். டெங்கின் காள்கைகள் பெரும் வர்த்தக தொடர்பு தனங்களில் மாஓவாதத்துடன் ஒரு தீவிர ளவு எனக் காட்டப்பட்டன. இந்த ண்பாக்கம் அடியோடு பொய்யானது. ங் மாஓவின் கொள்கைகளின் வாரிசும் னனெடுப்பவரும் ஆவார். அவர் மாஓ னது ஆட்சிக்கு அடிப்படையாகக் காண்டிருந்த வசதி வாய்ப்புக்கள் கொண்ட தே சமூகத் தட்டையும் ஸ்டாலினிச திகாரத்துவத்தையும் பேணிக் கொண்டு தை அவற்றின் தர்க்க ரீதியான டிவுகளுக்கு முன்னெடுத்தார்.

டெங்கின் கீழ் அதிகாரத்துவம் தன்னை ரு சொத்துடமை முதலாளி வர்க்கமாக ரிணாமம் ஆக்குவதை பெருமளவுக்கு ரணமாக்கிக் கொண்டது. இதனை அரச, ட்டுப்பண்ணை சொத்துக்களை நேரடியாக ஊழல்கள் மூலமும் முழுக் களவுகள் லமும்) சொந்தமாக்கிக் கொண்டும் வளிநாட்டு, கடல் கடந்த சீன லதனத்துடன் கூட்டுக் கம்பனிகளை மைத்துக் கொள்வதன் மூலமும் தித்தனர். ஒரு அவதானி குறிப்பிட்டது ால்: மாஓவிற்குப் பின்னைய சகாப்தத்தில் ன முதலாளித்துவத்தின் தன்மையின் டையாளம் என்னவென்றால் புதிய தலாளி வர்க்கத்தின் பெரிதும் ரபல்யமான ஆரம்ப அங்கத்தவர்கள் ரைவில் "முடிக்குரிய இளவரசர்கள், ளவரசிகள்" என் அழைக்கப்பட உள்ள. யர் கம்யூனிஸ்ட் அதிகாரிகளின் மகள்களும் கன்களும் ஆவர்." (டெங்ஷியாவோபிங் ாப்தம்-பக்கம் 319 மொரிஸ் மெல்ஸ்னர்)

மரபுரிமைகளை உத்தியோகபூர்வமாக மறுமதிப்பீடு செய்ய முயன்றது. சென் டூக்ஷியூ (சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபகர்) மரணத்தின் பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டார். ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை 1927 தோல்வி பற்றிய ட்ரொட்ஸ்கியின் விமர்சனத்தை ஒரு போதும் அங்கீகரிக்காது இருந்து விடுவதில் அவதானமாக இருந்து கொண்டது.

அடுத்ததாக இரண்டு சம்பவங்கள் பயணத் திசையின் துரிதமான மாற்றங்களை ஏற்படுத்தின: இதில் முதலாவது: சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு தொழிலாளர் வர்க்க காரியாாளர் குழு - இவர்களில் பலர் கலாச்சாரப் புட்சியினால் பாதிக்கப்பட்டவர்கள்- அந்த ஜனநாயக சுவர் இயக்கத்தை தொடுத்தனர். இதில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வசதிவாய்ப்புக்கள் வருமானங்கள் மக்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகியதும் அதில் அடங்கியது. இரண்டாவது சம்பவம்: சொலிடாரிட்டி என்ற பெயரால் அழைக்கப்பட்ட ஸ்டாலினிச எதிர்ப்பு இயக்கம் போலந்து தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் தோன்றியமை. "போலந்து பீதி" சீன ஸ்டாலினிஸ்டுகளை பீடித்துக் கொண்டது . பெரும் கைதுகளுக்கு உத்தரவிட்டதன் மூலம் நாட்டின் கலாச்சார வாழ்வினுள் அதிகார பிடிவாதத்தின் கொடுங்கரங்களை இறுக்கிப் பிடித்தது.

டெங்ஷியாவோபிங்கின் இரண்டு தசாப்தகால ஆட்சியின் மரபுவழியான அர்த்தப்படுத்தல்கள் அவரினால் முதலாளித்துவம் முன்னேற்றப்பட்டதும் அரசியல் எதிர்ப்பைக் கொடூரமான முறையில் அடக்கியதற்கும் இடையே மோதுதல் இருந்து கொண்டுள்ளதாக கூறுகின்றனர் அவை "பொருளாதார சீர்திருத்தமும்" "அரசியல் சீர்திருத்தமும்" இயற்கையாகவே பிணைந்து கொண்டுள்ள தாக கூறிக்கொள்கின்றன. ஆனால் முதலாளித்துவத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையே அத்தகைய ஒரு தொடர்பு கிடையாது.

டெங்கின் பொருளாதார நடவடிக்கைகள் அரச சொத்துக்களை வசதிவாய்ப்புக்கள் படைத்த ஒரு சிலரின் நலனுக்காக தனியார்மயமாக்குவதற்குச் சேவை செய்தது. கைத்தொழில்மயமான முதலாளித்துவ தட்டினரின் ஜனநாயக உரிமைகளுக்கும் அபிலாசைகளுக்கும் ஒவ்வாதனவாகவும் இவற்றினை சர்வாதிகார நடவடிக்கைகளின் மூலம் மட்டுமே அமுல்செய்யக் கூடியதாகவும் விளங்கியது.

முதலாளித்துவ பொருளாதார உறவுகளின் பெருக்கத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட சமூக பதட்டங்கள் தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து தனது ஆட்சிக்கு ஒரு நேரடி அரசியல் சவாலை பொறிப்பறக்கச் செய்யும் என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்துவம் கூர்மையாக அறிந்திருந்தது. 1983ல் டெங்ஷியாவோபிங் தனியார்மயமாக்கல் பிரச்சாரத்தை விவசாயத்தில இருந்து கைத்தொழிலுக்கு விஸ்தரிக்க ஆயத்தமாகி வந்த வேளையில் அவர் 400000 பேரைக் கொண்ட பொலிசை -ஆயுதபாணியான ஒரு கலகம் அடக்கும் படையை- மக்கள் ஆயுதபாணி பொலிஸ் படையை அமைக்க பிரேரித்தார். இதன் படைப்பிரிவுகள் ஜருஷெல்ஸ்கியின் போலந்துக்கும் பினோசேயின் சில்லிக்கும் பயிற்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

1989 ஜனநாயக எதிர்ப்புக்களை ஆரம்பித்த மாணவர்கள், புத்திஜீவிகள் பல்வேறுபட்ட அரசியல், சமூக கருத்துக்களை கொண்டிருக்கையில் -சில முதலாளித்துவம் மீதான சலனங்களை அடிபபடையாகக் கொண்டிருந்தன- மே நடுப்பகுதியில் பரந்தளவிலான பீகிங் தொழிலாளர்கள் போராட்டத்தினுள் நுழைந்ததும் கிளர்ச்சியின் சமூக, அரசியல் அச்சு திடீரென இடதுபக்கம் சாய்ந்தது. இலட்சக் கணக்கில் தியன்மின் சதுக்கத்தினுள் பெருக்கெடுத்து வந்த இளம் தொழிலாளர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக வளர்ச்சி கண்டுவந்த சமத்துவமின்மை, வசதி வாய்ப்புக்கள், அதிகாரத் தட்டினரின் அப்பட்டமான ஊழல்களின் பேரிலான ஆத்திரத்தினால் உந்தப்பட்டிருந்தனர்.

1989 மே17ம் திகதி பீகிங் தொழிலாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட இக்காலப்பகுதி பற்றிய ஒரு பத்திரம் சீனப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க குரோதத்தினை தெளிவாக்குகின்றது: "மார்க்சின் டாஸ் கப்பிட்டாலில் தரப்பட்ட ஆய்வு விதிமுறைகளின் அடிப்படையில் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை நாம் நேர்மையாக ஆவணமாக்கியுள்ளோம்..."நாம் மக்களின் பகிரங்க ஊழியர்கள்" மக்களின் இரத்தத்தினாலும் வியர்வையினாலும் சிருஷ்டிக்கப்பட்ட சகல உபரிப் பெறுமானத்தையும் விழுங்கிக் கொண்டுள்ளதைக் கண்டு ஆச்சரியம் அடைந்துள்ளோம்."

சுதந்திர தொழிலாளர் அமைப்பு மேலும் கோரியதாவது : சட நுகர்வுகள், அரண்மனை வதிவிட பாவனைகள் சம்பந்தமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய முதலாவது குழுவில் இவர்கள் அடங்க வேண்டும்.: "டெங்ஷியாவோபிங், ஷாவோஷியாங், லீபெங், சென்யூன், லீஷியனியன். யாங்ஷாங்குன், பெங்குஷான் வான் லீ, ஜியாங் செமின், யீ ஷுவான் பிங்கும் இவர்களின் குடும்ப அங்கத்தவர்களும். இவர்களின் சொத்துக்கள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டு ஒரு தேசிய மக்கள் விசாரணைக் குழுவின் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்." (ஜனநாயகத்துக்கான குரல் Cries for Democracy பக்கம் -274 277)

ஆட்சியாளர்களின் அரசியல் எதிரிகளின் மீதான முழுச் சக்தியும் தொழிலாளர் வர்க்கத்தின் மீது நெறிப்படுத்தப்பட்டது. 1989 ஜூன் 3-4ம் திகதிய படுகொலைகளில் கொன்று தள்ளப்பட்டவர்களுள் பெரும்பான்மையினர் இளம் தொழிலாளர்களும் தியன்மின் சதுக்கத்தின் மேற்குப் புறத்துக்கு சமீபமாக வசித்தவர்களுமே. இவர்கள் காவலரண்களை அமைத்து, மக்கள் விடுதலை இராணுவம் நகரத்துக்குள் நுழைவதை எதிர்த்தனர். தியன்மின் சதுக்க [illegible]தொழிப்பில் கொன்று தள்ளப்பட்டவர்களுள் -ஏறக்குறைய

விதித்தது: வெளிநாட்டுக் கம்பனிகள் தமது பக்டரிகளுள் அதிகாரபூர்வமான அகில சீனத் தொழிற்சங்க சம்மேளனத்தின் (All China Trade Union Confederation) கிளைகளை அமைக்க அனுமதி வழங்க வேண்டும். அப்போது அரச கட்டுப்பாடு கொண்ட தொழிற்சங்கங்கள் ஆட்சிக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தினைத் திறமையாக பொலிஸ் காவல் செய்யலாம்.

டெங்ஷியாவோபிங்கின் பாத்திரம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளர் வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை முதலாளித்துவம், ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுதலை செய்வதற்காகப் போராடும் ஒரு அமைப்பு என்ற நிலையில் இருந்து சீனாவில் முதலாளித்துவத்தின் அபிவிருத்தி செய்கின்றதும் தொழிலாளர் வர்க்கத்தை அடக்குகின்றதுமான முக்கிய கருவியாக மாறிய பரிணாமத்தை எடுத்துக் காட்டுகின்றது. சீன தீவிரவாத இளைஞர்களின் இயக்கத்துடன் இணைந்து எழுச்சி கண்ட டெங்ஷியாவோபிங் சீன இளைஞர்களும் தொழிலாளர்களும் தியன்மின் சதுக்கத்தில் அனைத்துலக கீதம் இசைக்கையில் இயந்திரத் துப்பாக்கிகளால் அவர்களைச் சுட்டுத் தள்ளிய அலுகோசுவாக வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டார்.

டெங் திரட்டி வைத்துள்ள மரபுரிமைகள் சமூக முரண்பாடுகளால் நிறைந்து போயுள்ளது. 200மில்லியன்களுக்கும் அதிகமான தொழிலாளர்களும் விவசாயிகளும் உள்நாட்டுப் புறமான மாகாணங்களை கைவிட்டு தொழிலும் வாழ்க்கைத் தரமும் தேடி வளர்ச்சி கண்டுவரும் கரையோரப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். முன்னொரு போதும் இல்லாத விதத்தில் நகரங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் இடையேயான இடைவெளி பரந்துள்ளது. கடனும் பிரமாண்டமான வேலையின்மையும் இறுகிக் கொண்டு வரும் பணவீக்க பெருக்கத்துடன் பொருளாதாரம் செழிப்பு-வெடிப்பு சைக்கிளின் பிடியில் அகப்பட்டுப் போயுள்ளது. உத்தியோகபூர்வமான ஊழலும் காடைத்தனங்களும் போதைப் பொருள் பாவனையும் விபச்சாரமும் மற்றும் சமூகக் கேடுகளும் சியாங்கைசேக்கின் படுமோசமான நாட்களின் பின்னர் சீனா கண்டிராத வகையில் செழித்து வளர்கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தம் ஒரு முடிவுக்கு வந்துகொண்டுள்ள ஒரு நிலையில் இந்த நூற்றாண்டின் முதலாவது தசாப்த காலத்தில் சீனா எதிர்கொண்ட எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை. மாஓவாதம் முதலாளித்துவத்துக்கான ஒரு புரட்சிகரப் பதிலீடாக அல்லாது ஒரு வரலாற்று முட்டுச் சந்தாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

சீன வரலாற்றின் கடந்த ஐந்து தசாப்தகாலத்தின் சகல சுகதுக்கங்களும் ஒரு தேசியரீதியில் வரையறுக்கப்பட்டதும் பாட்டாளி வர்க்க அடிப்படை இல்லாததுமான ஒன்றின் மீது தீர்த்துக் கொள்ள முடியாது என்பதை சீனப் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினைகளை மூலமாகக் கொள்கின்றனர்."தீவிரவாத" மாஓவாத வேடத்தில் என்றாலும் சரி அல்லது டெங்ஷியாவோபிங் தழுவிக் கொண்ட பெரிதும் பழமைபேண்வாத உருவில் என்றாலும் சரி தீர்க்கமான பிரச்சினை. தேசிய சோசலிசத்தின் ஸ்டாலினிச முன்னோக்கின் தோல்வி பற்றியதேயாகும். உலக் சோசலிச புரட்சி முன்நோக்கினை நிராகரித்தவிடத்து சீனாவை உலக முதலாளித்துவ அமைப்பினுள் ஒன்றிணைப்பதைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது.

சீனத் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் விடுதலையானது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களினாலும் ஆரம்ப கம்யூனிஸ்ட் அகிலத்தினாலும் அதைத் தொடர்ந்து இடதுசாரி எதிர்க் கட்சியினாலும், நான்காம் அகிலத்தினாலும் இன்று அனைத்துலகக் குழுவினாலும்

www.padippakam.com

# "இலங்கையினுள் சோசலிச சமத்துவக் கட்சியின் எதிர்காலம் நிச்சயமானது"

## அனைத்துலகக் குழுவின் கனேடிய பகுதியின் தேசியச் செயலாளர் கீத் ஜோன்ஸின் வாழ்த்துச் செய்தி

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் அனைத்துலகக் குழுவின் கனேடியப் பகுதியான அனைத்துலக தொழிலாளர் கட்சி (IWP) யினதும் புரட்சிகர வாழ்த்துக்களை உங்களின் இந்த மகாநாட்டுக்கு தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் இப்போது சிறீலங்காவிலும் சோசலிச சமத்துவக் கடசி அமைக்கப்படுவது அனைத்துலக ரீதியில் பொருளாதார அடிப்படையிலும் அரசியல் மேற்கட்டு மானத்திலும் இடம்பெற்றுள்ள தீர்க்கமான பரிணாமங்களுக்கு அனைத்துலகக் குழு காட்டும் நனவான பிரதிபலிப்புக்களாகும். சமூகத்தின் வர்க்கங்களுக்கு இடையேயான உறவுகளும் அனைத்துலகக் குழுவுக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையேயான உறவுகளும் பண்புரீதியில் மாற்றம் கண்டுள்ளன. தொழிலாளர் வர்க்கம் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான போராட்டங்கள் அவர்களை முழு அமைப்புடனும் மோதிக் கொள்ள வைக்கின்ற. சகல அதிகாரத்துவங்களின் பிடியும் தகர்ந்து போயுள்ளது. 1980பதுகளில் வர்க்கப் போராட்டங்கள் வெடித்ததோடு சமூக ஜனநாயக, ஸ்டாலினிச, தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் குறைந்தபட்ச அடிப்படை உரிமைகளைக் காப்பதைக் கூட கைவிட்டு தமது சலுகைகளைக் காப்பதில் இறங்கியுள்ளன.

ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி தொழிலாளர் வர்க்கத்தினுள் ஆரம்பத்தில் ஒரு குழப்ப நிலைமையை உருவாக்கியது . முதலாளி வர்க்கம் அதனைத் தனக்குச் சார்பாகத் திருப்பவும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக உக்கிரமான தாக்குதல்களை தொடுக்கவும் முயன்றது. அந்நிலைமையினுள் எமது கட்சிகள் தொழிலாளர் வர்க்கத்தின் பாதுகாப்புக்காகப் போராடுவதற்கான நிலைமைகள் உருவாகி உள்ளது.

அனைத்துலகக் குழு தொழிலாளர் வர்க்கத்தின் தலைமை நெருக்கடியைத் தீாப்பதையும் அக்டோபர் புரட்சியின் பாரம்பரியங்களைக் காக்கும் போராட்டத்தையும் தனது பணியின் மையமாக்கிக் கொண்டுள்ளது. அனைத்துலகக் குழு யுத்தத்தின் பின்னைய சோவியத் பொய்களுக்கு பதிலளித்துப் போராடியது. அங்கு நாம் 20பதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் வெடித்த புரட்சிகரப் போராட்டங்களின் படிப்டினைகள் பக்கம் திரும்பினோம். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் முதலாளித்துவ ஈடாட்ட நிலைமையினுள் தாம் பழக்கப்பட்ட வழக்காறான மரபுகளில் இருந்து விடுபடுவதில் தோல்விகண்ட இரண்டாம் அகிலத்தின் கட்சிகள் மாறுபட்ட நிலைமைகளினுள்ளும் பழைய வழக்காறுகளைக் கடைப்பிடித்தனர். அவர்கள் புதிய நிலைமையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதில் தோல்வி கண்டனர்.

நாம் முகம் கொடுத்த பிரமாண்டமான பிரச்சினை 1980பதுகளின் நடுப்பகுதியில் இருந்து இடம்பெற்றுள்ள மாற்றங்களினுள் நாம் உருவாக்க வேண்டிய மாற்றம் என்ன என்பதேயாகும். பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்கள் எம் எதிரில் இருந்து கொண்டுள்ளது என்பதை புரிந்து கொண்ட நாம் அவற்றுக்கு முகம் கொடுக்க செய்ய வேண்டிய மாற்றங்களைக் கணக்கில் கொள்ளும் போது கழகத்தின்(லீக்) உருவத்தின் பக்கம் விமர்சன ரீதியில் நோக்க நேரிட்டது. லீக்குகளின் வடிவம் யுத்தத்தின் பின்னைய நில்லமையின் வெளிப்பாடாகியது. தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையினர் தமது ஆதரவை ஸ்டாலினிச, சமூக ஜனநாயக கட்சிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் வழங்கியுள்ளதைக் கவனத்தில் கொள்ள எமக்கு நேரிட்டது. அந்தத் தரப்பட்ட வரலாற்று நிலமையினுள் லீக் அவசியமான வடிவம் ஆகியது.

ஆனால் இப்போது மாறுபட்ட நிலைமையினுள் அவசியமான பரிணாமத்தை எடுக்க வேண்டியுள்ளது. நாம் நீரோட்டத்துக்கு எதிராக நீச்சலடிக்க வேண்டிய ஒரு காலப்பகுதி இருந்தது. இன்று நிலைமை மாற்றம் கண்டுள்ளது. அவ்வாறு சொல்லும்போது நாம் வர்க்க நிலைமையினுள் ஏற்பட்டுள்ள பண்புரீதியான மாற்றத்தை சுட்டிக் காட்டுகின்றோம். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மிகவும் கஷ்டமான நிலைமைகளுக்குள் போராட நேரிட்டது. இன்று நீரோட்டம் எமக்கு சார்பாக அலைவீசுகின்றது. எனினும் நீரோட்டத்துக்கு எதிராக செல்ல மட்டுமல்ல நீரோட்டத்துடன் ஓடவும் நல்ல வழிகாட்டல் அவசியம்.


கீத் ஜோன்ஸ்

அக்டோபர் 25ம் திகதி கனடா-டொராண்டோவில் ஒரு பொது வேலைநிறுத்தம் நடந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் பிரமாண்டமான கிளர்ச்சியின் முதலாவது அலைவீச்சுக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம். புரட்சிகர சகாப்தம் என்பது திட்டவட்டமாக ஆட்சி அதிகாரத்துவத்தைக் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமை உருவாகுவது அல்ல. இடதுக்கும் வலதுக்கும் ஈடாட்டம் காணும் ஒரு நிலைமையாகும்.

இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்நோக்கு வரைவு கணிசமான ஒரு முற்போக்கு நடவடிக்கையாகும். அது உழைக்கும் மக்களின் அவசியங்களைப் பற்றி ஆழமாகக் கவனம் செலுத்தியுள்ளது. பொதுமக்களின் தினசரிப் போராட்டங்களுக்குள் கட்சியை அமைத்துக் கொண்டு அவற்றையிட்டு ஆழமான கவனம் செலுத்தப்படுகின்றது என்பதை இது தெளிவுபடுத்துகின்றது. பு.க.க.எடுக்கும் பரிணாமத்திற்கு அவசியமான திசை காட்டியை அதன் 28 வருடகால போராட்டத்தின் வரலாறு வழங்குகின்றது. இந்தப் போராட்டத்தின் முழு உள்ளடக்கத்தையும் மிகவும் உயர்ந்த மட்டத்துக்கு உயர்த்திப் பிடிக்க முன்நோக்கு வரைவு முயற்சிக்கின்றது.

1964 காட்டிக்கொடுப்பு உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு ஒரு பிரிகோடாக விளங்கியது. ல.ச.ச.க. கூட்டரசாங்கத்தினுள் நுழைந்தமை பப்லோ வாதம் தொடர்பான அனைத்துலகக் குழுவின் ஆய்வினை நிரூபித்துள்ளது. இந்தக் காட்டிக் கொடுப்பின் பெறுபேறாக பல்வேறு அரசியல் போக்குக்கள் தோன்றின. தமிழீழ விடுதலைப் புலிகள், ஜே.வீ.பி. பு.க.க.அவையாகும். அதில் முதல் கூறிய இரண்டும் சமசமாஜ காட்டிக்கொடுப்புக்கு காட்டியதோ தேசியவாதப் பிரதிபலிப்புக்களாகும். பிரமாண்டமான வரலாற்று நிகழ்வுகள் மூலம் அவற்றின் முழு இயலாமையும் நிரூபிக்கப்பட்டுள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மறுபுறத்தில் இதற்கு மாறுபட்ட போக்கினைக் காட்டிக் கொண்டுள்ளது.

முன்நோக்கு வரைவான்து முழு இந்தியக் கட்சியையும் கட்டியெழுப்பும் அவசியத்தை தோற்றுவித்துள்ளது. இந்தியாவினுள் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்யும் பிரச்சினை சம்பந்தமாக பு.க.க.வும் சோசலிச தொழிலாளர் கழகமும் கூட்டாக ஆரம்பித்துள்ள பிரச்சார நடவடிக்கைகள் முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். நாம் அகில இந்திய கட்சியை கட்டியெழுப்பும் எதிர்கால வேலைத்திட்டத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டும். துணைக்கண்டத்தில் புரட்சிகர தலைமையை கட்டியெழுப்புவது பிரமாண்டமான ஒரு கோட்பாட்டு சவாலாகும். அதற்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பது முழு உலகிற்கும் சம்பந்தப்பட்ட ஒரு காரணியாக மாறுகின்றது.

1971 இந்திய-பாகிஸ்தானிய யுத்தம் சம்பந்தமாக தோழர்.கீர்த்தி பாலசூரியவுக்கும் எஸ்.எல்.எல்.க்கும்(அன்றைய பிரித்தானிய பகுதி) இடையே இடம்பெற்ற கடிதத் தொடர்புகளுள் பு.க.க. நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை பாதுகாத்து, அபிவிருத்தி செய்ய போராடியது. இங்கு வெறுமனே இலங்கை பற்றி மட்டுமல்ல முழு இந்தியத் துணைக் கண்டம் பற்றிய முன்னோக்கு சம்பந்தமான பிரச்சினை தோன்றியது. இந்திரா காந்திக்கு தலைமைப் பொறுப்பை வழங்கிய பிரித்தானிய எஸ்.எல்.எல். தலைவர்களுக்கு எதிராக கீர்த்தியும் பு.க.க.வும் ஊர்ஜிதம் செய்தது, 1947ல் அமைக்கப்பட்ட எந்த ஒரு அரசின் மூலமும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் எந்த ஒரு ஜனநாயக உரிமையும் உத்தரவாதம் செய்யப்படவில்லை என்பதாகும்.

இலங்கையினுள் சோசலிச சமத்துவக் கட்சியின் எதிர்காலம் மிகவும் தெளிவானது. இந்தக் கட்சியை கட்டியெழுப்புவது பு.க.க. முழுக் காலப் பகுதியினுள்ளும் நடாத்திய உறுதியான அரசியல் கோட்பாட்டு போராட்டத்தின் அடிப்படையிலேயேயாகும்.

**1996 நவம்பர் 2-3ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 6 வது தேசிய மாநாட்டு அறிக்கை**

# "இந்த மாற்றம் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தமட்டில் பெரிதும் தீர்க்கமானது"

## இந்திய சோசலிச தொழிலாளர் கழகச் செயலாளரின் பேச்சு

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்தியத் தோழமை அமைப்பான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் செயலாளர் அருண் குமார் மாநாட்டில் நல்வாழ்த்துக்களை வழங்கி உரை நிகழ்த்துகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக்த்தை சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்யும் தீர்மானம் இலங்கையை பொறுத்த மட்டில் மட்டுமல்ல முழு இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்தினைப் பொறுத்த வரையிலும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க சம்பவமாகும். உலகளாவிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து அது முன்னெடுத்த போராட்டத்தினை நாம் அறிவோம். அது இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் நனவான பகுதியினர் இடையே ஈர்ப்பினை வென்றெடுத்துள்ளது. லங்கா சமசமாஜக் கட்சி 1964ல் இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பின் மூலம் சிருஷ்டித்த பேரழிவினை பின்வாங்கச் செய்யவே புரட்சிக் கம்யூனிஸ்ட்



கொண்டுள்ளது. ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படையில் பு.க.க. முன்னெடுத்த போராட்டத்தின் மிகவும் முக்கியமான ஒரு திருப்பு முனையாக இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தை அமைக்கும் போராட்டம் விளங்கியது. 1940பதுகளின் இறுதியில் இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி குட்டி முதலாளித்துவ காங்கிரஸ் நெருக்கடிக்கு மத்தியில் ஆட்சிக்கு கொணர்ந்ததைப் போல இந்தியாவில் ஆழமாகிவரும் அரசியல் நெருக்கடியினுள் பிரதமர் தேவ கௌடாவின் கூட்டரசாங்கம் ஆட்சிக்குக் கொணரப்பட்டுள்ளது. 13 கட்சிகளைக் கொண்ட இந்த முதலாளித்துவ கூட்டரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னணியில் நின்றவர்கள் ஸ்டாலினிஸ இந்திய கம்யூனிஸ்ட்(மார்க்சிஸ்ட்) கட்சியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுமே. இந்த அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏற்றப்பட்டது நரசிம்மராவின் காங்கிரஸ் அரசாங்கம் மக்களின் வெறுப்புக்கு உள்ளாகிய ஒரு

www.padippakam.com

# பிற்போக்கு அரசியலமைப்பு தீர்மானம் அடியோடு வேண்டாம்!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்பாடுகளையும் மார்க்சிச போதனைகளையும் நிராகரித்த சகலரையுமே தொழிலாளர் வர்க்கத்தினை முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் எதிரில் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்க செயற் பட்டவர்களாக மிக நன்றாக உரிந்துகாட்டுவதற்கு இதைவிட வேறு சிறந்த சந்தர்ப்பம் கிடையாது.

"யூ.என்.பி.யை விரட்டி அடிப்பதற்காகச் செய்யும் அரசியல் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியும் தொழிலாளர்-விவசாயிகளது சோவியத் சபையினை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிக்காக திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க தொழிலாளர் -விவசாயிகளை தயார் செய்வதைக் கைகழுவிவிடும் சகல தலைமைகளையும் விரட்டியடித்து, ஆட்சிக்கான போராட்டத்தை அணிதிரட்டும் புரட்சிக் கட்சியை பரந்த அளவில் நிலைநாட்ட வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் உள்ள ஒரேயொரு வழி இதுவே." (கம்கறு மாவத்த-1978-6-23)

அரசாங்கத்தின் பங்காளிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் 'தியச' போன்ற சகல தீவிரவாதிகளும், புத்திஜீவிகளும் அரசியலமைப்பு சட்ட வரைவின் 'ஜனநாயகப் பண்பு' பற்றியும் தேசிய பிரச்சினையைத் தீர்த்து, சமாதானத்தை உருவாக்கும் அதன் வல்லமை பற்றியும் பெரிதாக வாயடித்துக் கொள்கின்றனர். இதேசமயம் யூ.என்.பி.முதலாளிகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஒன்றும் அதற்கு வெளியே இன்னொன்றும் கூறிக்கொண்டு அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பதோடு இனவாதிகளுக்கும் எண்ணெய் வார்த்துவருகின்றனர். ஜே.வீ.பி.யை முன்னணியில் கொண்ட பிற்போக்கு இனவாத கும்பல் புதிய தீர்வு யோசனைகள் நாட்டைத் துண்டாடப் போவதாக கூச்சலிட்டு வருகின்றது. முதலாளித்துவ கும்பல்களதும் குழுக்களதும் அவர்களது வால்பிடிகளதும் இச்சகல இயக்கங்களும் மக்களை குழப்பியடிக்கும் வேலையைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

## சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகள்

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய போவதேயில்லை. உண்மையில் இந்த அரசியலமைப்பு சட்ட விவகாரத்தின் பின்னால் பொதுமக்களை அடக்கும் இராணுவ-பொலிஸ் சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமை மேலும் மேலும் வளர்ச்சி கண்டுவருகின்றது. புதிய அரசியலமைப்புச் சட்ட நிர்ணயம் என்ற பெயரில் சிங்கள தமிழ் முதலாளித்துவ கட்சிகளையும் குழுக்களையம் அணிதிரட்டிக் கொள்ள ஏகாதிபத்தியமும் ஏகாதிபத்தியச் சார்பு பொதுஜன முன்னணியும் முயற்சிக்கின்றன. இது முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளை அணிதிரட்டும் தந்திரமாகும். சகல பிற்போக்குச் சக்திகளையும் அணிதிரட்டி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அடக்கி, சர்வாதிகார வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதே இதன் இலக்கு. உத்தேச பிராந்திய ஒன்றியத்தில் டொனமூர் அரசியலமைப்பு சட்டத்தில் இருந்து வந்த வகையில் சகல கட்சிகளும் பங்குகொள்ளும் நிர்வாகக்குழு ஆட்சியை நிறுவும்படி தெரிவுக்குழுவுக்கு யூ.என்.பி.பிரதிநிதிகள் யோசனை தெரிவித்துள்ளனர். அரசாங்கம் இதனை ஒரு சிறந்த யோசனையாகக் கொண்டாடியது. தற்சமயம் மடிகே பஞ்ஞாசீஹ போன்ற இனவாத பிக்குகள் இதனை நாடு முழுவதற்கும் நடைமுறைப்படுத்தும்படி கோருகின்றனர். இது ஒரு தேசிய அரசாங்கத்தினை சட்டரீதியில் உருவாக்கும் ஒரு தீர்மானமாகும். யூ.என்.பி.வலதுசாரிகள் தொடக்கம் ஜே.வீ.பி.பாசிஸ்டுகள் வரையிலான சகல கொலைகாரச் சக்திகளையும் அரசாங்கத்தினுள் திரட்டிக் கொள்வதே இத்திட்டம்.

உலக ரீதியாக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலானது அனைத்துலக மூலதன தாக்குதலினை முன்னெடுப்பதன் மூலமே வளர்ச்சி கண்டுள்ளது. அமெரிக்க றீகன் அரசாங்கமும் பிரித்தானிய தட்ச்சர் அரசாங்கமும் முனனெடுத்த இந்த தாக்குதல்களினால் பின்தங்கிய நாடுகளின் இரண்டு ஏஜன்டுகளாக சில்லியின் பினோச்சேயும் இலங்கையின் ஜயவர்தனாவும் மாற்றம் கண்டனர். சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இதே தாககுதல்களையே அபிவிருத்தி செய்து கொண்டுள்ளது. தற்போது புதிய அரசியலமைப்புச் சட்டம் என்ற போர்வையில் -அனைத்துலக ரீதியிலான இந்த மூலதன ஆதிக்கத்தையே முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கின்றது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்ட வரைவுகளில் இருந்து இனவாதம் வடிகின்றது."சிறீலங்காவினுள் உள்ளடங்கிய பிராந்திய ஒன்றியத்தினுள் இருந்து ஒரு பிராந்தியத்தை பிரிப்பதோ அல்லது நீக்குவதோ அதற்கு ஆலோசனை வழங்குவதோ அல்லது அதற்கு வழிவகுப்பதோ" செய்ய முடியாததாகும் என இந்த வரைவின் முதலாவது பந்தியிலேயே குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சரத்து இனவாத யுத்தத்துக்கு எண்ணெய் வார்த்த யூ.என்.பி.ஜயவர்தனா அரசாங்கத்தின் ஆறாவது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தினை புதிய வரைவினுள் நுழைத்துவிடுவதாகும்.

இலங்கை பிராந்திய ஒன்றியமாகினாலும் நாடு துண்டாடப்பட்டுவிடும் என்ற பீதி இந்த சட்ட சரத்துக்கள் மூலம் ஒழிந்து போய்விடுவதாக அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறிக்கொள்கின்றார். பிரிவினைவாதத்தினை முதலாளி வர்க்கத்தினாலோ அல்லது அதன் சட்டத்தினாலோ அகற்றிவிடக் கூடிய ஒன்றல்ல. அது மட்டுமன்றி பிரிவினைவாதம் முதலாளித்துவ ஆட்சியினாலேயே கிளறிவிடப்படும் ஒன்றாகும். தமிழ் முதலாளித்துவ பிரிவினைவாதத்துக்கு களம் அமைத்துக் கொடுத்தவர்கள் சிங்கள, தமிழ் தொழிலாளர் வர்க்கங்களை பிளவுபடுத்தி, வர்க்க ஆட்சியை கட்டிக்காக்கும் பொருட்டு தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இனவாதத்தினைத் தூண்டிவிட்ட சிங்கள முதலாளிகளே. மறுபுறத்தில் பிரிவினைவாதமானது இனவாத அடக்குமுறை நிலைமைகளின் கீழ் முதலாளி வர்க்கத்தின் ஒரு குழுவினர் ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு மக்கட் குழுவினரைச் சுரண்டும் பொருட்டு ஒரு குட்டி அரசினை ஒதுக்கிக்கொள்ள செய்யும் ஒரு முயற்சியாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் பிரிவினைவாதத்தினை தடைசெய்யும் சரத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் சட்டத்தின் மூலம் அதனை ஒழித்துவிடலாம் என்பதாலோ அல்லது அதனை நீக்கும் எதிர்ப்பார்ப்பினாலோ அல்ல. அரசியலமைப்புச் சட்டத்துக்கு சிங்கள இனவாத லாடம் போடுவதற்காகவே அங்ஙனம் செய்துள்ளது. அது பிரிவினை வாதத்தினை மேலும் தூண்டிவிடும். இதனால் எதுவிதமான முற்போக்குப் பெறுபேறும் கிடைக்கப் போவதில்லை. தொழிலாளர் வர்க்கம் ஆறாவது அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்தது. அவ்வாறே இந்த சரத்தினைக் கொண்ட பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சட்டத்தினை அது எதிர்க்கும். அங்ஙனம் எதிர்க்கையில் அது எந்த ஒரு அரசியல் போக்கினையும் தடைசெய்யும் ஜனநாயக விரோத முதலாளித்துவ தாக்குதலானது இறுதியில் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் உரிமைகளுக்கு தாக்குதல் தொடுக்க முதலாளி வர்க்கம் செய்யும் தயாரிப்பின் ஒரு பாகமாகும் என்பதைப் புரிந்து கொண்டுள்ளது. பொதுஜன முன்னணியின் "ஜனநாயக" அரசியலமைப்பு சட்டத்தின் இரண்டாவது சரத்து ஆரம்பமாகுவது சிறீலங்கா குடியரசு பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றது.15(1) 15(3) அரசினைக் காக்கும் சரத்தினை இதனுடன் ஒப்பிடுகையில் இதன் பிற்போக்கு அர்த்தம் நன்கு தெளிவாகின்றது. மதவாதத்துக்கு அரசினை கீழ்ப்படுத்துவதற்கு எதிரான முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஆரம்பகால அடிப்படைக் கொள்கைகளுக்கு கூட இது முரணானது.

ஏனைய பின்தங்கிய நாடுகளின் ஆளும் வர்க்கங்களைப் போலவே இலங்கை முதலாளி வர்க்கமும் தேசிய இனப் பிரச்சினையை ஜனநாயக அடிப்படையில் தீர்த்துக் கொள்வதில் வெற்றி காணவில்லை.பல்தேசிய தன்மைகள் இனவாத பிளவுகளை தூண்டிவிட முதலாளிகளால் படுபிற்போக்கான முறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பது கடந்த அரை நூற்றாண்டுக்கால ஆட்சிக் காலத்தினுள் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இயலாமையும் பிற்போக்கும் மேற்சொன்ன சரத்துக்கள் மூலமும் இன்று தொடுக்கப் பட்டுள்ள இனவாத யுத்தத்தின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் மத்தியில் "இலங்கையில் இருந்துவருவது தேசிய இனப்பிரச்சினை அல்ல இராணுவ போராட்டமேயாகும்" என ஜனாதிபதி விடுத்த அறிக்கை அவளை ஏனைய சகல முதலாளித்துவ அரசியல்வாதிகளில் இருந்து வேறுபட்டவளாக்க காட்டச் செய்யும் ஜனநாயக கோலங்களையும் சின்னா பின்னமாக்கி உள்ளது. தென்ஆபிரிக்காவின் அரசியலமைப்புச் சட்ட வரைவின் "ஜனநாயக தன்மை" பற்றி வாயடித்துக் கொண்ட அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அரசியலமைப்புச் சட்ட வரைவினை வெளியிட்டதுதான் தாமதம் அதைக் காட்டிலும் பெரிதும் ஜனநாயகம் கொண்டதாகப் புகழப்படும் தென் ஆபிரிக்க அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்ய பறந்து சென்றார். தூதுக் குழுவின் சுற்றுப்பயணத்துக்கான நிதியை யூ.எஸ்.எயிட் அமைப்பு வழங்கியது. அரசியலமைப்புச் சம்பந்தமான அக்கறை கொண்டுள்ளவர்கள் யார் என்பதை இது எடுத்துக் காட்டியது. தென்ஆபிரிக்க அரசியலமைப்புச் சட்டத்தை தயாரித்தீவர்கள் இனஒதுக்கல் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்ட ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நெல்சன் மண்டேலா தலைமையிலான அரசாங்கமாகும். ஆ.தே.கா-இனஒதுக்கல்காரர்களின் கூட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முன்னணியில் நின்று தயாரித்ததாகும்.

## அலங்கரிப்பு

இந்த அரசியலமைப்பு சட்டம் மிகவும் புதுமையான ஜனநாயக பேச்சுவார்த்தைகள் மூலம் தயாரிக்கப்பட்ட ஒரு புதுமையான ஜனநாயக அரசியலமைப்பு என இலங்கை, தென் ஆபிரிக்கா இரண்டினதும் அரசியலமைப்பு சட்டத்தை ஒப்பிடும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளரான றொஹான் எதிரிசிங்க தெரிவித்துள்ளார். ஆனால் இந்த அலங்கரிப்புக்களுடன் கூடிய அந்த அரசியலமைப்புச் சட்டத்தினால் அந்நாட்டு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதோ அனைத்துலக மூலதனத்தின் கொடிய சர்வாதிகாரமாகும்.

தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் அரசாங்கத்தின் வரைவுக்கு பந்தம் பிடிக்க தயாராகி உள்ளன. அரசாங்கம் முன்னெடுக்கும் இனவாத யுத்தத்துக்கு இந்த கட்சிகள் ஆதரவு வழங்குகின்றன. சிறிது காலத்துக்கு முன்பு அரசாங்கம் வெளியிட்டு இப்போது தெரிவுக் குழுவினால் வெட்டப்பட்டு வருகின்றதான "அதிகாரத்தை பரவலாக்கும் பிரேரணையை" இக்கட்சிகள் அரவணைத்துக் கொண்டன. விடுதலைப் புலிகள், இயக்க முதலாளிகளுக்கு எதிராக தமது முதலாளித்துவக் கும்பல்களது சுரண்டல் சலுகைகளை ஊர்ஜிதம் செய்வதே இக்கட்சிகளின் அவசியமாகும். இதற்கிடையே இராணுவ பின்னடைவுகளுக்கு உள்ளாகியுள்ள விடுதலைப் புலிகள் ஏகாதிபத்திய நாட்டின் உத்தரவாதத்தின் மீது நடாத்தப்படும் கலந்துரையாடல்களின் மூலம் சுரண்டலின் அதிக வாய்ப்புக்கள் கொண்ட சமரசத்துககு தருணம் பார்த்துக் கொண்டுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்க முதலாளிகள் அதிகாரப் பரவலாக்கம் என்ற பிரேரணையின் கீழ் சமரசத்துக்கு இணங்கிக் கொண்டுள்ள பொதுஜன முன்னணி ஏஜன்டுகளாக தம்மைக் காட்டிக் கொண்டுள்ளன.

இந்நாட்டின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் பிரச்சினை பின்வரும் உருவில் தோன்றியுள்ளது: முதலாளி வர்க்கம் சதிகாரத்தனமாக தமது வர்க்க ஆட்சியை காத்துக்கொள்ள அரசியலமைப்புச சட்டங்களில் செய்து கொள்ளும் பிற்போக்கு மாற்றங்களுக்கு அடிபணிந்து போகாமல் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களின் நிஜ ஜனநாயக உரிமைகளையும் சமத்துவத்தையும் நீதியையும் ஊர்ஜிதம் செய்யும் ஒரு அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குவது எப்படி? சிங்கள இனவாத யுத்தத்தினையும் பிரிவினைவாதத்தினையும் ஒரு முடிவுக்குக் கொணர்ந்து, சிங்கள, தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை சமத்துவத்தின் அடிப்படையில் ஸ்தாபிதம் செய்வது எப்படி? இலாபச் சுரண்டலை அடிப்படையாகக்கொண்ட ஒரு அமைப்பினுள் அதனுடன் தொடர்புபட்ட முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாது.தமிழ் மக்களுக்கு பாகுபாடு காட்டுவதை நிறுத்துவதைப் போலவே தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமையை பூரணமாக ஊர்ஜிதம் செய்வதும் ஒரு பெரும் ஜனநாயகப் பிரச்சினையாகும்.


தொழிலாளர்களும் பொதுமக்களும் தமது அமைப்புக்களை கட்டியெழுப்பவும் சுயாதீனமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் தடையாக உள்ள சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் நீக்க வேண்டும். படுகொலைகளுக்கு இளைஞர்களை பலிகடாக்களாக்கும் சூழ்நிலையின் மத்தியில் இளைஞர்களுக்கு எதிராக தொடர்ந்து செயற்படுத்தப் பட்டுவரும் கைது செய்தல், சித்திரவதைகளில் இருந்து விடுபடுவதற்கான ஒரு நிலைமையை உத்தரவாதம் செய்ய வேண்டும். விவசாயத்தின் மூலம் வாழ்க்கை நடாத்தும் ஏழை விவசாயிகளுக்கு காணியை உத்தரவாதம் செய்வதும் மொத்த வியாபாரிகளாலும், தரகர்களாலும் சுரண்டப்படும் நிலைமை ஒழிக்கப்பட்டு, தமது விளைச்சலை சந்தைக்கு அனுப்ப உள்ள வாய்ப்பினை சுதந்திரமாக அனுபவிக்கும் நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். பெண் தொழிலாளர்களுக்கு சமமான சம்பளமும் தாய்மாருக்கு அவசியமான வசதிகளும் நிலைநாட்டப்படவேண்டும். இவை மிகவும் அவசரமான ஜனநாயகப் பணிகளில் சிலவாகும். இந்தப் பிரச்சினைகள் மேலும் உக்கிரமாகுமே தவிர இந்த முதலாளித்துவ அமைப்பின் கீழ் இவற்றுக்கு தீர்வு கிடைக்காது.

தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபையின் கீழ் மட்டுமே ஒரு சில சுரண்டல் பேர்வழிகளின் கீழ் அல்லாது பெரும்பான்மையினரான மக்களின் ஜனநாயக உரிமைகளையும் சமூக சமத்துவத்தையும் உத்தரவாதம் செய்யும் அரசியலமைப்புச் சட்ட வரைவினைத் தயார் செய்ய முடியும். இதற்கு தொழிலாளர்கள், ஏழைகள் ,இளைஞர்களைக் கொண்ட நடவடிக்கைக் குழுக்களை கட்டியெழுப்பி அவற்றின் அதிகாரத்தின் கீழான அரசியலமைப்பு நிர்ணய சபைக்காகப் போராட வேண்டும் என சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு கூறுகின்றது. அனைத்துலக ரீதியிலும் அதன் ஒரு பாகமாக சிறப்பாக இந்தியாவிலும் தொழிலாளர் வர்க்க ஒத்துழைப்பைத் திரட்டி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். ஏகாதிபத்தியவாதிகளதும் இந்தியத் துணைக்கண்ட முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் ஆதரவுடன் இலங்கையில் முதலாளிகள் திணிக்கும் பிற்போக்கு ஆட்சிக்கு எதிராக தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் சார்பில் தரக்கூடிய பதில் அதுவேயாகும். இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக சிறீலங்கா ஈழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்துக்குப் போராடுவதே இன்றைய பிற்போக்கு அரசியலமைப்புச் சட்டத்துக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் எதிராகத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் வழங்கக் கூடிய

படிப்பகம்

www.padippakam.com





# எம். எப். ஹுசேனைப் பாதுகாப்போம்!

ஹர்விட்ஸ் கலாநிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஹுசேனின் ஓவியங்கள் இந்து சோவினிஸ்டுகளால் நாசம் செய்யப்பட்டுள்ள காட்சி.
உள்ள: எம்.எப். ஹுசேன்

வீ.எம். தர்ஷன

முதலாளித்துவ அமைப்பின் கீழ் கலையும் கலைஞனும் முகம் கொடுக்கும் துக்ககரமான தலைவிதியின் பரிமாணம் எத்தகையது என்பதை நிஜ கலைப் படைப்புக்கள் தணிக்கைக்கும் அவமானத்துக்கும் அழிவுக்கும் பலிகடாக்கள் ஆக்கப்பட்டு வருவது காட்டிக் கொண்டுள்ளது. கலைஞன் இடைவிடாத அடாவடித்தனங்களுக்கும் ஒடுக்குமுறைக்கும் துன்புறுத்தல்களுக்கும் இலக்காகின்றான். முதலாளித்துவத்தின் நான்கு நூற்றாண்டு கால குறுகிய வரலாறு பூராவும் இந்த இலட்சணத்தில் பல்வேறு அடக்கு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளான கலைஞர்களின் பட்டியல் மிகவும் நீண்டது. அந்தப் பட்டியலில் புதிதாகச் சேர்ந்துகொண்டு கலைஞன் புகழ்பெற்ற இந்திய ஓவியக் கலைஞரான எண்பது வயதுகள் நிறைந்த எம்.எப்.ஹுசேன்.

ஹுசேன் கீழைத்தேச ஓவியக் கலைஞர்களிடையே பிரபல்யமானவர். அத்தோடு இந்திய நவீன மரபுகளின் முன்னோடியும் ஆவார். 1940பதுகளின் தசாப்தத்தில் தோன்றிய "முற்போக்கு ஓவியர் குழு"வின் ஆரம்ப அங்கத்தவரான அவர் இந்திய அழகியற் கலை அக்கடமி ஒழுங்கு செய்த ஆரம்ப ஓவியக் கண்காட்சியில் தேசிய பரிசைத் தட்டிக்கொண்டவர். உலகம் பூராவும் ஒருதொகை தனியாள், கூட்டு கண்காட்சிகளை நடாத்தியுள்ள ஹுசேன் சாஓபோலோ இருவர் ஓவியக் கண்காட்சிக்காக பப்லோ பிக்காசோவுடன் தமது ஓவியங்களை காண்காட்சியில் காட்சிக்கு வைக்க சிறப்பு அழைப்புக் கிடைக்கப் பெற்ற ஒரே பாரத ஓவியர். ஒரு தடவை India Today சஞ்சிகை ஏற்பாடு செய்த "பத்ம விபூஷன்" பரிசைப் பெறுவதற்குப் பொருத்தமான கலைஞரைத் தெரிவுசெய்யும் வாசகர்களை —அடிப்படையாகக் கொண்ட திறனாய்வில் அவர் இரண்டாம் இடத்தைப் பெற்றது லதா மங்கேஸ்கருக்கு அடுத்ததாக மட்டுமே. (1990ல் அவருக்கு அப்பரிசு கிடைத்தது.) அவரின் சிருஷ்டியான "ஒரு ஓவிஞனின் கண்ணால்" என்ற சிறிய அறிக்கை படத்துக்கும் பேர்ளின் அனைத்துலக திரைப்பட விழாவில் "தங்க கரடி" பரிசு கிடைத்தது. திரைப்பட

இறைச்சி வியாபாரியா"? என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. இந்து சோவினிச வெறியர்கள் அஹமதாபாத்தில் "ஹர்விட்ஸ்" கலையகத்தில் புகுந்து அவரின் ஒரு தொகை ஓவியங்களை வெட்டிக் கொத்தி சின்னாபின்னமாக்கினர். அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து ஊர்வலம் சென்றனர். காரணம் என்ன? அவர்களது கருத்தின்படி ஹுசேனின் ஒரு ஓவியத்தின் மூலம் இந்து தெய்வத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது! அந்நாட்டுச் சட்டத்தின்படி மத நம்பிக்கைக்கு அபகாசம் விளைவிப்பதும் மத, தேசிய ஐக்கியத்தை சிதைக்கும் விதத்தில் செயற்படுவதும் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும். அதன்படி பம்பாய் பொலீசார் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்!!

மகாராஷ்டிர மாநிலத்தின் கலாச்சார அமைச்சரும் "சிவசேனை" தலைவருமான பிரமோத் நவல்கார், ஹுசேனுக்கு எதிரான இயக்கத்தின் பங்காளிகள். மகாராஷ்டிரா விலும் குஜராத்தியிலும் மத்திய பிரதேச இடைத் தேர்தல்களுக்கும் ஹுசேன், எதிர்ப்புக்கும் இடையே உறவு காணப்பட்டுள்ளது. ஹுசேன் இஸ்லாம் மதத்தவர்.அதாவது, சிறுபான்மையினர். தேர்தல் சம்பந்தமாக பொதுமக்கள் அந்தளவுக்கு அக்கறை காட்டிக்கொள்ளாத ஒரு நிலையில் பிரச்சாரம் தலைநீட்டியுள்ளது. இந்தப் பின்னணியில் ஹுசேனுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த பல கலைஞர்கள், விமர்சகர்கள், புத்திஜீவிகள் அதை வெறும் அரசியல் சந்தர்ப்பவாதமாக விளக்கினர். மேலும் அதை கலா இரசனையின் இயலாமையாகவும் கலைச் சுதந்திரத்துக்கும் கலைஞனின் உரிமைக்கும் தொடுத்த தாக்குதலாகவும் கண்டனம் செய்தனர். (ஆதாரம்: (The Hindu, 1996.10.18, 1996.10.20 India TOday, 1996.10.31; Frontline 1996.11.15, 1996.11.29) Frontline சஞ்சிகை முன்பக்க அட்டைக் கதையின் கீழ் முழுச் சம்பவத்தையும் Communalism Vs Art (கலை எதிர் இனவாதம்) எனற தலைப்பில் அறிக்கை செய்திருந்தது. இலங்கையின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் அவற்றையே திரும்பவும் வாந்தி எடுத்திருந்தன.(ஆதாரம்: யுக்திய—1996.11.17,

கருத்துவேறுபாட்டுக்கு உள்ளானது இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஹுசேன் வரைந்த ஓவியமாகும். (இப்போது அது எங்கே என்பதைக் கூட ஹுசேன் அறியார்!) எனினும் சமீபத்தில் அவர் சம்பந்தமாக வெளியான பல நூல்களிலும் அந்த ஓவியமும் அடங்கியிருந்தது. பொது மக்களிடையே கலைகளின் தாக்கத்தையிட்டு பெரிதும் நனவாக உள்ள முதலாளித்துவ வர்க்கம் முன்கூட்டியே அதற்குத் தாக்குதல் தொடுக்கின்றது.


மகாராஷ்டிர அரசாங்கம், இச்சம்பவம் சம்பந்தமாக ஹுசேனுக்கு அனுதாபம் தன்னும் தெரிவிக்கவோ அல்லது அவரது குடும்பத்தின் பாதுக்காப்பையிட்டு ஏற்றதைச் செய்யவோ முன்வரவில்லை. இந்திய மத்திய அரசாங்கம் தாக்குதலில் அடியோடு அழிந்து போகாத ஓவியங்களுக்கு ஒரு பாதுகாப்பகம் வழங்க இன்னமும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிசார் எந்த ஒரு சந்தேக நபரையும் கைது செய்யவில்லை. பிரபல வரலாற்றாசிரியரான ரோமிலா தாபர் பிரதமர் தேவகௌடாவை சந்தித்து இதைப்பற்றி முறைப்பாடு செய்தபோது அவர் சும்மா "கவனத்தில எடுக்கின்றேன்" என்றுள்ளார். இந்திய முதலாளி வர்க்கம் ஒரு சிறிய ஓவியத்துக்கு அந்தளவுக்கு அஞ்சி வெருண்டுள்ளது. இந்தளவுக்கு கிடுநடுங்க அந்தச் சித்திரத்தில் உள்ள பலம்தான் என்னே?

ஓவியத்துக்கு கருப்பொருளாகியது, இந்து புராணக் கதைகளில் வரும் சகல கலாவல்லியான தெய்வம்- சரஸ்வதியே என்பது உண்மை. எனினும் அது வெறும் உருவகச் சித்திரம் அல்ல.ஹுசேன் குறிப்பிடுவது போல் அது ஒரு சங்கேத ஓவியமாகும். கறுப்பு-வெள்ளைக் கோடுகள் ஓவியமாக சிருஷ்டிக்கப்பட்டுள்ள அங்கே வரைதல் தொழில்நுட்பம் மிகவும் எளிதாகவும் ,உள்ளடக்கம் மிகச் சிறந்த மறைபொருள் கொண்டும் உள்ளது. இங்கு சரஸ்வதியினால் உருவகப்படுத்தப்படுவது நவீன கலைஞனே அன்றி வேறு யாரும் அல்ல. அவள் (கலைஞை) சீரழிந்துபோன முதலாளித்துவ சமுதாயத்தினால் உரித்தாக் கப்பட்டுள்ள துன்பங்கள், துயரங்களின் வெள்ளத்தினுள் காலடிவரையும் தலைமூழ்கிப் போயுள்ளாள். எனினும் எவ்வளவுதான் துயரங்களுக்கு மத்தியிலும்

கலாச்சாரத்தினால் சரஸ்வதியைக் கொண்டு உடுத்தப்பட்ட ஆடைகள் மட்டுமன்று. முதலாளித்துவ அரசாங்கத்தினால் கலைஞனின் கழுத்தில் அணியப்பட்ட போலி மலர் மலைகளையும் அவர் கூடவே களற்றி வீசியுள்ளார். உண்மையில் நிர்வாணமாக் கப்பட்டிருப்பது சரஸ்வதி அல்ல: முதலாளித்துவ சமுதாயமாகும். ஹுசேன் புரிந்த குற்றம் அதுதான். "நாம் வாழ்வது சரஸ்வதி எம்மை விட்டு பாய்ந்து செல்லும் கட்டத்திலாகும்" என ட்றொட்ஸ்கி ஒரு தடவை குறிப்பிட்டார். இந்த மதிப்புமிக்க ஓவியத்தின் அடியில் அந்த வார்த்தைகளை பொறித்து வைப்பது பொருத்தமானது.

இந்த ஓவியத்தைக் கண்டு அதன் நிஜ அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் இரசிகன் கலையை கட்டுப்படுத்தி வைக்கும் முதலாளித்துவ சமுதாய அமைப்புடன் கொதித்துக் கொள்கின்றான்: அதைத் தூக்கி வீசுவதற்கு திடசங்கற்பம் கொள்கின்றான்: அதற்காக பாட்டாளி வர்க்க கட்சியைச் சூழ அணிதிரள்கின்றான். எனவேதான் முதலாளி வர்க்கம் நிஜ கலையைக் கண்டு, பீதிகொள்வதொடு. அதற்கு எதிரியாகவும் உள்ளது. அங்கு தமது தாக்குதலுக்கு உள்ளாகும் கலைஞனை தனது வர்க்கத்தின் தனிப்பட்ட நண்பனாக உறவு கொள்ள முடியாது . (முதலாளித்துவ இந்திரா காந்தி அரசாங்க காலத்தில் ஹுசேன் ஒரு தடவை காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கினார்.)

சரஸ்வதி ஹுசேனால் வரைய்ப்பட்ட முதலாவது நிர்வாணச் சித்திரம் அல்லாததைப் போலவே அது அவர் வரைந்த ஏக தெய்வ சித்திரமும் அல்ல. மறுபுறத்தில் பாரதக் கலை வரலாற்றுக்கு நிர்வாணம் அன்னியமானதும் அல்ல. வரலாற்றுப் புகழ்பெற்ற கோனார் கஜூராவோ தேவாலயத்தில் உள்ள கல்வெட்டுக்களும் ஹலேபீடு கட்டத்தில் தொங்கும் சரஸ்வதி மூர்த்தியும் இதற்கு உதாரணங்களாகும். ஆதலால் இது எந்தவிதத்திலும் நிர்வாணக் கோலம் பற்றிய ஒரு பிரச்சினை அல்ல. என்பது தெளிவாகும். அவ்வாறே இது இந்திய முதலாளித்துவம் ஹுசேனை அவமானம் செய்த முதலாவது சந்தர்ப்பமும் அல்ல. சிறிது காலத்துக்கு முன்னர் அவரின்




76ல் ஹுசேனால் வரையப்பட்ட சரஸ்வதி ஓவியம்

ஹுசேன் அந்த ஓவியங்கள் காரணமாக எவரேனும் துக்கமடைவின் அதற்கு அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். "நான் மனிதனையிட்டு பெரிதும் அக்கறை காட்டுகின்றேன். கலை அதற்கு அடுத்ததாகவே வருகின்றது. ...எனது ஓவியங்களைக் காப்பதோ அல்லது அழிப்பதோ இந்திய மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது." என அவர் குறிப்பிடுகின்றார். எனினும் ஷைலொக் வகையிலான ஹிந்து அடிப்படைவாதிகள் கோருவதைப் போல் தமது கலைப் படைப்புக்களை பகிரங்கமாக அழிப்பதற்கு அவர் தயார் இல்லை. தமது ஓவியங்கள் பற்றி தீர்ப்பு வழங்குவதற்கு பொருத்தமான அகில இந்தியாவையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு நிபுணர்கள் சபையை நியமிக்கும்படி அவர் பரேரிக்கின்றார். "எனது கலை உள்ளத்தை வருந்துவதாகும்" என அந்த சபை தீர்மானம் செய்யின் எனது ஓவியங்களை சுட்டுப்பொசுக்கும் முதலாவது பேர்வழியாக நான் விளங்குவேன்." (1996.11.15) இத்தகைய ஒரு நிஜ கலைஞனுக்கு இழைத்த நிந்தனையையும் அவனின் படைப்புக்களுக்கு இழைத்த அநியாயத்தையும் நாம் வன்மையாகக் கண்டனம் செய்கின்றோம்.

ஹுசேன் என்னதான் சொன்னாலும் கலைஞன் ஒரு தேசிய அரசின் பிரஜை என்பதால் அதன் மக்கள் மட்டும் அவனின் கலைப்படைப்புக்களின் உரித்தாளர்கள் ஆகிவிடார்கள். மாபெரும் கலைப் படைப்புக்கள் அவை சிருஷ்டிக்கப்பட்டதுமே உலக உரித்தாகிவிடுகின்றன. ஹுசேன் பின்வருமாறும் கூறியுள்ளார். இதனை மேல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். "... கலை என்பது என்ன ஒழுக்கக்கேடு என்பது என்ன என்பதை நாம் நிரந்தரமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்..." (India Today 1996.10.31) சிலவேளை நீதிமன்றம் ஹுசேனை சுற்றவாளியாக்கலாம். இதற்கு முதலாக சமகால இந்திய ஓவியரான அக்பர் பதம்சி ஒழுக்கக்கேடான ஓவியங்களை வரைந்தார் என்ற குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இங்கிலாந்தின் புகழ்பெற்ற இலக்கியவாதியான டி.எச். லோரன்சும் இதே வகையான ஒரு வழக்கில் வெற்றிபெற்றார். எனினும் கலைக்கும் முதலாளித்துவ அரசியலுக்குமிடையேயும் உள்ள இங்கு குறிப்பிடப்பட்ட முரோதங்களை "நிரந்தரமாகத் தீர்த்துக் கொள்ள" சட்டத்தினால் முடியாது. காரணம் நீதிமன்றம் முதலாளித்துவ அரசாங்கத்தின் கருவியாக இருந்து கொண்டுள்ளதேயாகும்.

கலையின் சுதந்திரமும் கலைஞனின் உரிமைகளும் காக்கப்படுவது உலகளாவிய ரீதியில் முதலாளித்துவ அமைப்புத் தூக்கி வீசப்பட்டு ஸ்தாபிதம் செய்யப்படும் ஒரு சோசலிச சமுதாயத்தின் கீழ் மட்டுமேயாகும்.

மூலம்: 1. இலா பால். Beyond the canvas an unfinished portrait of M.F.Husain, INDUS, 1994, New Delhi.
2. ... Husain, Tata

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள்...

6ம் பக்கத் தொடர்ச்சி

வேலைத் திட்டங்களை நடைமுறைக்கிட முன்செல்ல வேண்டும்" என்றுள்ளார்.

முதலாளித்துவ பொதுஜன முன்னணியின் பங்காளர்களான ஏகாதிபத்தியச் சார்பு சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை இந்த ஆபத்துக்களுக்குப் பலி கொடுக்க செயற்படுகின்றனர். யூ.என்.பி.யைத் தோற்கடிக்கும் மோசடியினை திரும்பவும் அலம்பிக் கொண்டு, பொதுஜன முன்னணியை பலப்படுத்தும் இந்தத் தேர்தலில் இந்தக் கட்சிகள் மிகவும் கேவலமான விதத்தில் செயற்பட்டுள்ளனர். தமது கட்சிகளின் அங்கத்தவர்கள் உள்ளூராட்சிச் சபைகளில் பிரதிநிதித்துவம் செய்த இடங்களைக் கூட சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு கொடுத்து, ஏகாதிபத்தியச் சார்பு காட்டுமிராண்டி வேலைத் திட்டத்தினைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்தக் கட்சிகளுக்கு எந்தவிதமான சலனங்களும் கிடையாது.

## பெரும் ஆபத்து

இந்தக் கட்சிகளும் பப்லோவாத நவசமசமாஜக் கட்சியும் மற்றும் சந்தர்ப்பவாதிகளும் முதலாளிகளுடன் சேர்ந்து, பொதுமக்களுக்கிடையே உருவாக்கிய குழப்பத்தை சுரண்டிக் கொள்ள ஜே.வி.பி. சிறிதும் தயங்கவில்லை. பாசிச இயக்கமாகப் பரிணாமம் கண்டுள்ள ஜே.வி.பி. 258,545 வாக்குக்களும் பல்வேறு மாவட்டங்களிலும் மொத்தமாக 97 இடங்களையும் கைப்பற்றிக் கொண்டுள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்கள் உட்பட தொழிலாளர் அமைப்புக்களின் நூற்றுக்கணக்கான போராளிகளை 1987-89 காலப்பகுதியில் படுகொலை செய்த ஜே.வி.பி.க்குக் கிடைத்த இந்த ஆதரவு பொதுமக்களின் எதிரில் பேராபத்தை தோற்றுவித்துள்ளது. சில பிராந்தியங்களில் பொதுமக்கள் 1988-90 காலத்தில் இந்த அமைப்பு யூ.என்.பி.காரர்களுடன் சேர்ந்து நடாத்திய பயங்கரங்களை பற்றிக் குறிப்பிட்டனர். இருப்பினும் ஜே.வி.பி.யைத் தூக்கிப் பிடிப்பதற்கு முதலாளித்துவப் பத்திரிகைகளும் மற்றும் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களும் திட்டவிட்டமான முறையில் செயற்பட்டனர். இந்தத் தேர்தல் காலத்தினுள் அமெரிக்க தூதரகத்தினுள் நுழைந்து கொண்ட ஜே.வி.பி. தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் தமது உள்ளம் கனிந்த ஆதரவைத் தெரிவித்துக் கொண்டனர். ஜே.வி.பி.க்கு வெள்ளைச் சுண்ணம் தடவும் நற்சான்றிதழ் அமெரிக்க தூதரகத்தினால் விநியோகிக்கப் பட்டதுதான் தாமதம் அந்த சிக்னலைப் புரிந்துகொண்ட முதலாளித்துவ பத்திரிகைகாரர்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஆசிரியத் தலையங்கம் தீட்டத் தொடங்கினர். தேர்தலின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜே.வி.பி.பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார். "பொதுஜன முன்னணி வாக்குக்கள் ஜே.வி.பி.க்கு செல்லும் என நாம் எதிர்பார்த்தோம். ...ஜே.வி.பி. ஜனநாயக அமைப்பினுள் காலடி வைத்துள்ளது. அதைப் பிடித்துக் கொள்வது அல்லது வளர்ப்பது அவர்களின் பொறுப்பு" இந்த அபிவிருத்திகள் ஜே.வி.பி. தமது சேவையை ஏகாதிபத்தியவாதிகளுக்கு வழங்க முன்வந்துள்ளதோடு, முதலாளிகள் அதை பாசிச பொறியாக பாவிக்கவும் தருணம் பார்க்கின்றனர் என்பதும் தெளிவாகியுள்ளது.

இந்தத் தள்ளம்போடும் விதத்தில் தேர்தலின் பின்னர் அறிக்கை வெளியிட்ட நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறியதாவது: "நகரங்களிலும் ஜே.வி.பி. தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அது பாட்டாளிகள் இடையேயும் கட்சி நுழைவதைக் காட்டுகின்றது. இந்த அபிவிருத்தியினால் அக்கட்சியினுள் முக்கியமான விவாதம் எதிர்காலத்தில் ஏற்படுவதாக இருக்கும்." நகரங்களில் முதலாளிகளில் ஒரு பகுதியினர் அமெரிக்க சிக்னலை தீர்க்கமான விதத்தில் கணக்கெடுத்துள்ளனர் என்பதை நவசமசமாஜக் கட்சி மூடி மறைக்கின்றது. அவ்வாறே ஜே.வி.பி.யினுள் விவாதம் முளைக்கும் என்று வம்பளப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு இலாபம் கிடைக்கும் நப்பாசையையும் தூவுகின்றது. ஜே.வி.பி. உள்ளான அத்தகைய "விவாதங்கள்" இதற்கு முன்னர் பல ... அவை பல்வேறு

வேலைத்திட்டம் தோட்டத் தொழிலாளர்களிடையே பெரும் ஆத்திரத்தை தூண்டிவிட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் இ.தொ.கா.வுக்கு வாக்களிப்பதை பகிஷ்கரித்ததால் அது பல உள்ளூராட்சிச் சபைகளில் அதிகாரத்தை இழந்துள்ளது. அவற்றை யூ.என்.பி. சுருட்டிக் கொண்டது. இது மீண்டும் சுட்டிக் காட்டுவது என்ன? தொழிலாளர் வர்க்க பதிலீடு ஸ்தாபிதம் ஆகாத ஒரு நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரிகள் அரசியல் இலாபத்தை சுருட்டிக் கொள்கின்றனர்.

1994 பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணிக்கு பந்தம் பிடித்த நவ சமசமாஜக் கட்சியினதும் மற்றும் மாஜி தீவிரவாதக் குழுக்களதும் வங்குரோத்தும் பிற்போக்கும் இத்தேர்தலில் துலாம்பரமாகி உள்ளது. இருப்பினும் அவர்கள் மக்களுக்கு புதிய பொறிகிடங்குகள் தோண்டுவதைக் கைவிட்டுவிடவில்லை. நவசமசமாஜக் கட்சியினர் தமது வேட்பாளர்கள் இல்லாத இடங்களில் ஜே.வி.பி.க்கும் பொதுஜன முன்னணியின் "இடதுசாரி" களுக்கு வாக்களிக்கும்படியும் வேண்டிக் கொண்டனர்.

தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் தொழிற்பாட்டையும் ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமானது. தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் சரணடைவுக்காக வேறான ஒரு குட்டி அரசினைச் சிருஷ்டிக்கவோ அல்லது ஒரு வாய்ப்பான சமரசத்தை உருவாக்கிக் கொள்ளவோ கொழும்பு ஆட்சியாளர்களுடன் மோதிக்கொள்ளும் விடுதலைப் புலிகள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவிற்கு வெற்றியை ஈட்டிக் கொடுக்க செயற்பட்டனர். முதலாளித்துவ விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டுக் கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பீ.ஆர்.எல்.எப். முதலான முதலாளித்துவக் கட்சிகள் பொதுஜன முன்னணிக்கு ஆதரவாக நின்றுகொண்டன. ஈ.பீ.ஆர்.எல்.எப். பொதுஜன முன்னணியின் தேர்தல் வெற்றியையிட்டு பெருமைப்பட்டுக் கொண்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இராணுவ சர்வாதிகாரத்தின் வக்கீல்களாகச் செயற்பட்ட தமது உஜார் நிலையை இவர்கள் இதன் மூலம் காட்டிக் கொண்டுள்ளனர். டெலோ அமைப்பு இப்போது சுற்றிவந்து யூ.என்.பி.க்கு மோப்பம் பிடிக்கின்றது. சிங்களம்-தமிழ் பேசும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இனவாத யுத்தத்துக்கு ஊடாக இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்தை திணிக்க இக்கட்சிகள் தெற்கில் உள்ள முதலாளித்துவக் கட்சிகளுடன் அணிதிரண்டுள்ளன.

## படிப்பினை

உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவில் ஒரு முக்கிய அரசியல் படிப்பினை உண்டு. பாட்டாளி வர்க்க பதிலீடு இல்லாத இடத்தில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எதிரிகள் அரசியல் இலாபத்தை சுறையாடிக் கொள்வர். தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் புதிய முன்னோக்கும் தலைமையும் அவசியம். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் முன்னோக்கும் தலைமையும் இல்லாத நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அவசியமான வேலைத் திட்டத்தினை முன்வைக்கின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சி இதன் ஒரு பாகமாகவே போராடியது.

1964ல் லங்கா சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்பினாலும் அதன் பின்னர் சகல பழைய தொழிலாளர் அமைப்புக்களும் முதலாளித்துவ முகாமுக்குள் நுழைந்து கொண்டதன் மூலமும் பிற்போக்கு சக்திகளை பலப் படுத்திக் கொண்டன. தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இன்று முகம் கொடுக்கும் சகல பேரழிவுகளுக்கும் வழிவகுத்தனர். இந்த நிலைமையை அடியோடு மாற்றியாக வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தின் குழப்பத்தினை தமது சக்தியாக மாற்றிக்கொள்ளும் முதலாளி வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தொடுக்கும் தாக்குதலினால் சக்திவாய்ந்த வர்க்கப் போராட்டங்கள் எதிர்காலத்தில் வெடிக்கும். சகல நிலைமைகளும் சமூக வெடிப்பின் திசையை நோக்கி அபிவிருத்தி கண்டுவருகின்றன. தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் முதலாளி வர்க்கத்தின் தாக்குதல்களுக்கும் இந்தப் போராட்டங்களுக்கும்

தெளிவுபடுத்தியது. சோ.ச.க. 25000 தேர்தல் விஞ்ஞாபனங்களையும் 7000 தொழிலாளர் பாதை, கம்கறுமாவத்த பத்திரிகைகளையும் விநியோகித்தது. பிரச்சாரக் கூட்டங்கள், கலந்துரையாடல்களை நடாத்தியது. இவற்றின் மூலம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களின் கவனத்தை புதிய முன்னோக்கினதும் புதிய தலைமையினதும் பக்கம் ஈர்க்க முயன்றது. சோ.ச.க. உள்ளூராட்சி சபை தேர்தல் விஞ்ஞாபனத்தில் அது எதிர்காலத்துக்கான வழியை பின்வருமாறு குறிப்பிட்டது.

"மக்களின் வாழ்க்கையை துவம்சம் செய்யும் இந்த நிலைமைகளுக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் போராட்டத்துக்கு கிளம்பக் காலம் உதயமாகியுள்ளது. ஏகாதிபத்திய இலாப அமைப்பினுள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவிதமான எதிர்காலத்துக்கும் இடம்கிடையாது. ஏகாதிபத்தியம் யுத்த நிலைமைக்கு சூடேற்றல், காலனித்துவம், இன, மத பிளவுகள் ஊடாக காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி மனித இனத்தினை தள்ளிச் செல்லும் ஒரு அமைப்பாகியுள்ளது. இந்த அழிவினை தொழில்நுட்பத்திலான நவீன அபிவிருத்திகள் மூலம் முன்னெடுத்துச் செல்கின்றதும் இலாப இலக்கில் அல்லாது மக்களின் அவசியங்களுக்காக உற்பத்தியையும் விநியோகத்தையும் சமூக சமத்துவத்தின் அடிப்படையில் நடாத்துகின்றதுமான ஒரு திட்டமிடப்பட்ட சோசலிச பொருளாதாரத்தினை ஏற்படுத்துவதன் மூலமே நிறுத்தமுடியும். இது தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டமாகும். பூகோளமயமான பொருளாதாரத்தை முதலாளித்துவத்தின் கீழ் ஒன்றிணைக்கும் பேரில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் கடைப்பிடிக்கும் அழிவுமிக்க வேலைத்திட்டங்களுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் முன்னுள்ள பதிலீடு, அனைத்துலக சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டம் மட்டுமே.

"தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் இத்தகைய வெகு தீர்க்கமான பிரச்சினைகள் தலைநீட்டியுள்ள ஒரு நிலையிலேயே உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் இடம்பெறுகின்றது. முதலாளித்துவ -குட்டி முதலாளித்துவ கட்சிகளின் வம்பளப்புக்களை உதைந்து தள்ளி, பொதுமக்கள் இந்தத் தீர்க்கமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக வேண்டும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தை தூக்கி வீசிவிட்டு எந்த ஒரு முதலாளித்துவ கட்சிக்கும் இடம்கொடாது சோசலிச வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணராமல் பொதுஜன முன்னணி அரசாங்கம் உக்கிரமாக்கும் அழிவில் இருந்து தலைதப்ப வேறு வழியே கிடையாது என நாம் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் சுட்டிக்காட்டுகின்றோம். இடைநடு பாதைகள் இருப்பதாகக் கூறிக்கொண்ட சகல அமைப்புக்களும் செய்தது என்ன? பொதுமக்களை படுமிலேச்சமான தாக்குதல்களுக்கு பலிகடாக்கள் ஆக்கியதேயாகும்."

பண்டாரவளை, அம்பகமுவை பலப்பிட்டி பிரதேச சபைகளுக்கு போட்டியிட்ட சோசலிச சமத்துவக் கட்சி குழுக்களுக்கு முறையே 71, 224, 175 வாக்குக்கள் கிடைத்தன. இந்த வாக்குக்கள் 1994 பொதுத் தேர்தலில் பு.க.க.பதுளை மாவட்டத்துக்கு போட்டியிட்டுப் பெற்ற வாக்குக்களின் வீதாசாரத்தை தாண்டியுள்ளது. இந்த வாக்குக்கள் முதலாளித்துவத்தின் சகல பிற்போக்கு முகாம்களுக்கு எதிரான போராட்டத்தினுள் சோ.ச.க. வேலைத் திட்டத்துக்கு கிடைத்த வாக்காகும்.

முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் சோசலிச சமத்துவக் கட்சியைப் பற்றியோ அல்லது அதன் வேலைத்திட்டம் பற்றியோ முழு மௌனம் சாதித்துக் கொண்ட நிலையிலேயே இந்த தேர்தல் பிரச்சாரத் தினை முன்னெடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் புத்திஜீவிகளிடம் நாம் வேண்டுவது இதுதான்: உள்ளூராட்சி சபை தேர்தலின் அரசியல் படிப்பினைகளை கற்றுக் கொள்ளுங்கள். ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் பப்லோவாதிகளும் மார்க்சிச கலாச்சாரத்தை நாசமாக்குவதில் ஈடுபட்டுள்ளனர். மார்க்சிச கலாச்சாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பொருட்டு நீண்ட போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நான்காம் அகிலத்தினதும் அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியினதும் ... தொழிலாளர் வர்க்கத்துக்கும்

www.padippakam.com



வேலைநீக்க ஆபத்தை எதிர்த்துப் போராடும் பூகொடை தொழிலாளர்

# பூகொடை தொழிலாளர் தொழில் உரிமை காக்கும் போராட்டம்

பூகொடை ஆடைத்தொழிற்சாலை 1992ல் யூ.என்.பி.அரசாங்கத்தினால் தனியார் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் பின்னரும் பக்டரி ஊழியர்கள் தமது நிறுவனத்தை பூகொடை ஆடைத்தொழிற்சாலை என்றே அழைக்கின்றனர். முதலீட்டுச் சபையின் ஆதரவின் கீழ் இந்த பக்டரியினுள்ளேயே இன்னொரு பகுதி 'பூகொடை பப்ரிக்' என அழைக்கப்படுகின்றது. அந்தப் பகுதியின் தொழிலாளர்கள் சம்பளம் மாதம் ரூபா.2000. அந்தப் பகுதி அபிவிருத்தி கண்டதைத் தொடர்ந்து பூகொடை ஆடைத் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

தாம் முகம் கொடுக்கும் கொடிய சேவை நிலைமைகளுக்கு எதிராக 3000 தொழிலாளர்கள் மார்ச் 24ம் திகதியில் இருந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். இந்த போராட்டத்தின் தலைமையில் உள்ள தொழிற்சங்க கூட்டுக் குழுவின் தலைமை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு நெருக்குவாரம் கொடுக்கும் வழிகளில் தொழிலாளர்களை இறக்குவதன் மூலம் போராட்டத்தை காட்டிக் கொடுக்க முயன்று வருகின்றது. சிறீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம், ஜாதிக சேவக சங்கம், கைத்தொழில் உத்தியோகத்தர்கள் சங்கம், நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் என்பன இந்த தொழிற்சங்க கூட்டுக் குழுவில் உள்ளன.

பூகொடை தொழிலாளர்களின் தொழில் காக்கப்பட வேண்டும் என்பது தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கையாகும்.கூட்டு ஒப்பந்தந்தத்திற்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதி , வங்கி கட்டுப்பணம் , காப்புறுதி கட்டுப்பணம் ஆகியன சம்பளத்தில் இருந்து வெட்டப்பட்ட போதும் அவை உரிய நிறுவனங்களுக்கு நிர்வாகத்தால் செலுத்தப்படவில்லை.96-97 ஆண்டுகளுக்கான போனஸ் பணம் செலுத்தப்படாமை என்பன தொழிலாளர்களின் போராட்டத்துக்கான முக்கிய பிரச்சினைகளாக இருந்து வருகின்றன.

# உருக்கு கூட்டுத்தாபன ஊழியர் போராட்டம் இடைநிறுத்தம்

1996 டிசம்பரில் பொதுஜன முன்னணி அரசாங்கம் உருக்குக் கூட்டுத்தாபனத்தை கொரியன் ஹங்சுன் கம்பனிக்கு தொழிலாளர்களின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் விற்றுத் தள்ளியது. உருக்குக் கூட்டுத்தாபனத்தை தனியார்மயமாக்கியதன் பின்னர் 728 தொழிலாளர்கள் நஷ்டஈடு வழங்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுக்கும் பாதையில் தொழிலாளர்களை இழுத்துப் பிடித்துக் கொண்டதன் மூலம் அவர்களை இத்தாக்குதலுக்குப் பலிகடாக்களாக்கினர். தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்ாளர்கள் தமக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் கோரி கடந்த மார்ச் 7ம் திகதி வேலைநிறுத்தம் செய்தனர். இந்த போராட்டத்தின் உச்சியில பாய்ந்து கொண்டுள்ள சிறீலங்கா சுதந்திர தொழிற் சங்கம் ரூபா.5000 சம்பள உயர்வு இல்லையானால் எஞ்சியுள்ள தொழிலாளர்களுக்கும் நஷ்டஈடு பெற்றுக்கொண்டு விலகிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டுக் கொண்டனர்.

அதிக சேவைக் காலம் உள்ள தொழிலாளர்களுக்கு ரூபா.150000 நஷ்டஈடும் ஏனையோருக்கு சேவைக் காலத்துக்கு இணங்க நஷ்டஈடு வழங்கவும் 20 வீதம் சம்பள உயர்வு வழங்குவதாகவும் நிர்வாகிகள் இணங்கனர். இதைத் தொடர்ந்து போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. தொழிற்சங்க தலைமை தனியார்மயத்துக்கு தொழிலாளர்களைக் கீழ்ப்படுத்த வாய்ப்பு வழங்கியுள்ளது. இதன் மூலம் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஏனைய தொழிலாளர்களை படுமோசமான சேவைநிலைமைகளின் கீழ் சுரண்டலுக்கு உள்ளாக்க முயன்று கொண்டுள்ளது. வாக்குறுதி அளிக்கப்பட்ட எவையும் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். மார்ச் 24ம் திகதி 'சேவைமுறை' முடிவடைந்ததன் பின்னர் கிடைக்கும் இரண்டு நாட்கள் விடுமுறையை ஒரு நாளாக வெட்டியதற்கு எதிராகத் தொழிலாளர்கள் போரர்டினார்கள். பின்னர் நிர்வாகிகள் விடுமுறை வெட்டை நிறுத்திக் கொண்டனர்.

கொரியன் கம்பனியின் சகல தாக்குதல்களுக்கும் எதிராக உருக்கு கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் போராடி வருகின்றார்கள். தொழிற்சங்கத் தலைமை இந்த நிலைமையையிட்டு கிடுநடுங்கிப் போயுள்ளது. தனியார்மயமாக்கலுக்கு அடுத்ததாக வாகனப் பராமரிப்பு பிரிவு அடியோடு இழுத்துமூடப்பட்டது. ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படாத நிலைமையில் முன்னர் ஆறு பேர் சேவை செய்த இடத்தில் இப்போது தற்சமயம் 4 பேர் மட்டுமே ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேலை துரிதப்படுத்தலை உக்கிரமாக்கும் நடவடிக்கைகள் ஆயத்தமாகி வருவதாகத் தெரிகின்றது.

# இந்த மாற்றம் இந்தியத் துணைக் கண்டத்தைப்....

12ம் பக்கத் தொடர்ச்சி

கட்சி தலைவருமான இந்திரஜித் குப்தா பொலிசாரை இறக்கினார். அமெரிக்காவில் இருந்து முதலீடுகளைத் தருவிக்கும் வர்த்தகர்களின் ஒரு தூதுவராக அந்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த CPM தலைவர் ஜோதி பாசு அமெரிக்க முதலீடுகளையிட்டு பீதி கொள்ள வேண்டாம் என கெவுடாவுக்கு ஆலோசனை வழங்கினார். மேற்கு வங்காளத்தில் ஒரு சணல் தொழிலாளியை கொலைசெய்து தொழிலாளர் போராட்டத்தை நசுக்க நடவடிக்கை எடுத்தது ஜோதிபாசுவின் மாநில அரசாங்கமே.

1991ல் நரசிம்மராவ் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களின் சிபார்சின்படி ஆரம்பித்த திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் கீழ் தொழிலாளர், விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் ஒடுக்கப்படும் மக்ககள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளனர். கடந்து சென்ற 5 ஆண்டுகளுள் சமூக சமத்துவமின்மை உக்கிரம் கண்டுள்ளது. கௌடா அரசாங்கம் நரசிம்மராவ் காஷ்மீரிலும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் தலைதூக்கி உள்ள இன, மத பிரிவினைவாதங்களை நாம் எதிர்க்கின்றோம். இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்துக்காக நாம் போராடுவோம். இந்தியாவில் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே எதிர்காலம் இருந்து கொண்டுள்ளது. நடைமுறை ரீதியில் இந்திய, இலங்கை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்த முன்னெடுக்கும் போராட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சோசலிச தொழிலாளர் கழகமும் முன்னெடுக்கும் கூட்டுப் போராட்டத்தினை நாம் அறிந்து கொண்டுள்ளோம். இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்தில் தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்கப்படும் மக்களின் தலைமையாக ஸ்தாபிதம் செய்து ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு

சோசலிச சமத்துவக் கட்சி
மாத இதழ்




சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . .

படிப்பகம்